விலை: 30.00
website: www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 29 ஞாயிற்றுக்கிழமை (11.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 113

## திருநெல்வேலி பொதுச்சந்தை

### இன்று திறக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் கடைகள் இன்று நிபந்தனை யுடன் திறக்க அனு ▶15

## யாழ்.மேயர் மணிவண்ணன் கைது

## அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை அல்ல

### அவர் மீதான வழக்கு விசாரணை தொடரும் - பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண



(கொழும்பு) யாழ்.மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணன் கைது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை அல்ல. எனினும் அவர் மீதான வழக்கு விசாரணை தொடரும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (05ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர முதல்வர் மணிவண்ணனுக்கு

# பிணை வழங்கியது அரசா? நீதிமன்றமா?

## நீதியரசர் விக்னேஸ்வரன் கேள்வி



(யாழ்ப்பாணம்)
யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனுக்கு நீதிமன்றில் பிணை கொடுப்பதற்கு முன்னர் ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவதாக தன்னிடம் கூறினார் என டக்ளஸ் தேவானந்தா கூறிய கருத்துக்கள் மூலம் நாட்டில் சட்டம் ஜனாதிபதிக்கு வளைந்து கொடுக்கிறதா? என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.
(15ஆம் பக்கம் பார்க்க)

## குறைந்த வருமானம் பெறும் குடும்பத்துக்கு ரூ.5 ஆயிரம் புத்தாண்டு கொடுப்பனவு

5ஆம் பக்கம் பார்க்க

## கொரோனாவால் மேலும் மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வைரஸால் மேலும் மூவர் உயிரிழந்துள்ளார்.
அதனடிப்படையில், நாட்டில் கொரோனாத் தொற்றினால் உயிரி ▶15

## திருநெல்வேலி பாரதிபுரம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் நாளை விடுவிப்பு

### சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலி பாற்பண்ணை கிராமத்தில் பாரதிபுரம் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதி கண்காணிப்பு வலயத்திலிருந்து நாளை திங்கட்கிழமை காலை 6 மணி முதல் விலக்கப்படுகிறது என வடக்கு மாகாண சுகாதார ▶15

## கடலில் மிதந்து வந்த திரவத்தினை அருந்திய

### மேலும் ஒருவர் உயிரிழப்பு

(கரணவாய்)
நாகர்கோவில் கடலில் மிதந்து வந்த மதுபானப் போத்தலில் இருந்த திரவத்தை அருந்திய மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். ▶15

### யாழில் 19 பேர் உட்பட

## வடக்கில் 32 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் 19 பேர் உட்பட வட மாகாணத்தில் 32 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். போதனா ▶15

## 28 இராணுவ அதிகாரிகள் போர்க்குற்றங்கள் செய்தனர்

### 357 பேர் சாட்சியமளிக்க முன்வந்துள்ளனர்

(கொழும்பு)
இலங்கை இராணுவ அதிகாரிகள் 28 பேர் போர்க் குற்றங்களை செய்தனர் என்பதற்கான சாட்சியங்களை ஜெனிவா மனித உரிமை பேரவைக்கு வழங்க விடுதலைப் புலிகளின் முன்னாள் செயற்பாட்டாளர்கள் 357 பேர் முன்வந் ▶02

## யாழில் இயங்கும் அனைத்து திரையரங்குகளும்

### மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றது

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அனைத்து திரையரங்குகளும் மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் ▶15

## பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த நீச்சல் வீரர்

(கொழும்பு)
இலங்கை விமானப் படையைச் சேர்ந்த நீச்சல் வீரர் ரோசன் அபேசுந்தர பாக்குநீரிணையை ▶15

## தென்னிந்திய திருச்சபைக்கு தொடர்பில்லை – பேராயர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தொடர்பில் நேற்றைய தினம் வலம்புரியின் முன்பக்கத்தில் வெளிவந்த செய்தியில் தென்னிந்தியத் திருச்சபை எந்தவகையிலும் சம்பந்தப்படவில்லை என தென்னிந்தியத் திருச்சபையின் தலைவர் பேராயர் கலாநிதி டானியல் எஸ்.தியாகராஜா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் ▶15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சிவமயம்



## பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் - 2021

**கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்**
**A9 வீதி, கிளிநொச்சி.**

எமது ஆலய பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும், சித்திரை மாதம் 2021.04.27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெற இறையருள் கைகூடியுள்ளது. சகல அடியார்களும் உபயகாரர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

- ☆ தேவாரம்
- ☆ ஆலய பிரதம குரு உரை
- ☆ ஏனைய சமயப் பெரியோர் உரை
- ☆ தலைமையுரை
- ☆ செயலாளரின் சென்ற வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்.
- ☆ வருடாந்த கணக்கறிக்கை சமர்ப்பித்தல்.
- ☆ கணக்காய்வாளரின் கருத்துரை
- ☆ ஏனைய விடயங்கள்.
  I அன்னதான மண்டப திருப்பணி II................ III........................
- ☆ கிராம அலுவலரின் உரை
- ☆ கலாசார உத்தியோகத்தரின் உரை
- ☆ புதிய நிர்வாகத் தெரிவு
- ☆ நன்றியுரை – செயலாளர்
- ☆ தேவாரம்

குறிப்பு :- அனைவரது நேரத்தையும் கருத்தில் கொண்டு குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை சார்பில் ( 2021.04.11 )

| ச. ஸ்ரீகௌரிபாலா | மா. சிவராசா | சு. வரதராசா |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

(C-1924)

## மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 11 . 1945

இறப்பு 09 . 04 . 2021

### திருமதி அன்னலட்சுமி சிவானந்தம்

புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி சிவானந்தம் நேற்று முன்தினம் (09.04.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (11.04.2021) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(6539)

10 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

077 240 4832, 077 969 6830
+447405113894

தகவல்:-
குடும்பத்தினர்

# டெல்லி அணி வெற்றி

சென்னைக்கு எதிரான போட்டியில் டெல்லி அணி 7 விக்கெட்டால் வெற்றி பெற்றுள்ளது.



நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி கேபிடல்ஸ் அணி பந்து வீச்சு தேர்வு செய்தது. இதையடுத்து களமிறங்கிய 20 ஓவர்களில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 7 விக்கெட் இழப்பிற்கு 188 ஓட்டங்கள் எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டெல்லி 3 விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக டெல்லி அணியின் தவான் தெரிவானார்.-(ம-03)

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1964 ஆம் ஆண்டு கனடா, இலங்கை இரட்டைப் பிரஜா உரிமை உள்ள விவாகரத்துப் பெற்ற பிள்ளைகளற்ற யாழில் அரச சேவையில் MBBS Doctor ஆக பணிபுரிபவரிற்கு 30 இலிருந்து 40 வயதுக்கு இடைப்பட்ட மணமகள் தேவை.

(6548)

☎ - 072 619 2526

## Vacancy

Accountant, Asst. Accountant, Office Assistant, Driver(Heavy Vehicle), Cash Collector, Cashier, Graphics Designer, IT Technician, Labor, Delivery Boy

(6532)

☎ 076 300 5506/ 021 315 2500

### 28 இரா...

துள்ளதாக சிங் கள பத்திரிகை தெரிவித் துள்ளது.

போர் குற்றங் கள் குறித்து சாட்சிய மளிக்க முன்வரும் பாதிக்கப்பட்ட நபர் களை கூட சில தென் னிலங்கை சிங்கள ஊடகங்கள் விடு தலைப் புலிகளின் செயற்பாட்டாளர்கள் என்றே குறிப்பிட்டு செய்திகளை வெளி யிட்டு வருகின்றன என்பது குறிப்பிட த்தக்கது. (ம-03)

## சொர்க்கம் திருமண சேவை

பிரான்ஸில் வாழும் 34 வயது கார்த்திகை 4 ஆம் பாத நட்சத்திர மணமகனுக்கு மணமகளையும், இலங்கையில் அரச தொழில் புரியும் 32 வயது கேட்டை நட்சத்திர மணமகனுக்கு மணமகளையும், கனடாவில் வாழும் 26 வயது அனுஷ நட்சத்திர மணமகளுக்கு மணமகனையும் இலங்கையில் தேடுகிறோம்.

(6544)

0014 1666 61855 077 650 5097
021 222 1515 076 236 4188

"நாம் கற்ற கல்வியையும் கலைகளையும் யாராலும் அழிக்கவும் முடியாது. நாமே அழிவுக்கு காரணமாக இருக்கவும் கூடாது. இவற்றை நாம் எங்கு சென்றாலும் பயன்படுத்த முடியும்." அந்த வகையில் பிறக்கப்போகும் புது வருட தினத்தில் காலை 5.30 மணியளவில் நாம் வாழும் வரை நோய், துன்பமின்றி பாதுகாக்கும் இந்த இடர்கால சூழ்நிலைக்கு ஏற்ற யோகாசன கலையை கற்றுக்கொள்ள ஆரம்பிக்க விரும்புகிறீர்களா?

**076 108 6777** என்ற இலக்கத்திற்கு missed call செய்யவும்.

or

உங்கள் பெயர்,முகவரியை மட்டும் WhatsApp செய்யவும்.

(6527)

**APOORPA H.C. Centre**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

## மணமக்கள் தேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமக்களை தெரிவுசெய்ய விரும்பின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். 1978 இல் இருந்து 1990 வரை ஐரோப்பா விலுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. மற்றும் உள்நாட்டு மணமக்கள் தேவை.

(6540)

077 023 7639
viber- 009 476 204 9298
whatsapp- 004 917 643 399 372

## கன்ரர், கார் விற்பனைக்கு

TATA 709 கன்ரர் விற்பனைக்கு
(14 1/2 அடி full body)
65**** B 14 டீசல் கார்
விற்பனைக்கு.

(6552)

தொடர்பு
076 684 9867

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14.08.1938

மறைவு 05.04.2019

### அமரர் துரையப்பா மகேஸ்வரன்

( யாழ். மாவட்ட பிரபல டிங்கறிங் )

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(6501)

இல. 128, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் வெளியான புதிய விதிமுறைகளுக்கு எதிராக மனுத்தாக்கல்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர்



(கொழும்பு)

**பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட புதிய விதிமுறைகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.**

அரசியல் யாப்பின் 10, 12, 13 மற்றும் 14 ஆம் சரத்துகளில் உள்ள உரிமைகளை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய விதிமு றைகளை மீறுகின் றமைக்கு எதிராவே குறித்த அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய விதிமுறைகளில் நாட்டு பிரஜைகளின் பேச்சு சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம் ஆகியவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அடிப்படை உரிமை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் குறித்த விதிமுறைகள் பரந்த அளவில் காணப்படுவதால் நடைமுறைப்படுத்தும் போது அது சட்டவரையறையை மீறக் கூடிய சாத்தியம் உள்ளதாகவும் மேற்பார்வைக்கான பொறிமுறை காணப்படவில்லையென்றும் தெரிவித்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், பயங்கரவாத தடைச் சட்டத்தின் அதிகார வரையறையை மீறும் வகையில் இந்த புதிய விதிமுறைகளில் உள்ளடக்கப்பட்ட அதிகாரங்கள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இன, மத அடிப்படையில் எதிர்மறையான கருத்துக்களை தோற்றுவிக்கக் கூடியதாகவும் இன, மத குழுக்களுக்கு எதிர்மறையான தாக்கத்தை செலுத்துமெனவும் அவர் குறிப்பிட்டார். (நி-8)

## மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் சேவைகள் வழுமைபோன்று நடைபெறும்




(கொழும்பு)

நாளை 12 ஆம் திகதி விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டள்ள போதிலும் மோட்டார்வாகன் போக்குவரத்து திணைக்களத்தின் நாரஹேன்பிட்டி மற்றும் வேரஹெர ஆகிய அலுவலகங்களின் சேவைகள் வழமை போன்று இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுமித் அலஹகோன் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, அன்றைய தினத்திற்கான நேரத்தை ஒதுக்கி கொண்டவர்களுக்கான சேவைகள் மாத்திரமே இடம் பெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணம், குருநாகல், கம்பஹா, அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை அலுவலகங்களில் நாளை 12 ஆம் திகதிக்கான நேரத்தை ஒதுக்கிக் கொண்டவர்களுக்கான சேவைகள் இடம்பெறும் எனவும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன் சேவை பெறுநர்கள் 011 267 7877 என்ற இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தமக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## மக்களின் பிரச்சினைகளுக்கு செவிசாய்க்க அரசு தவறிவிட்டது-எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் குறுகிய பார்வை கொண்ட பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக பொதுமக்கள் பாதிப்படைவதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார், அரசாங்கத்தின் முடிவுகள் வர்த்தமானி அறிவிப்புகளுக்கு மட்டுமே என்றும் குற்றம் சாட்டினார்.

அரசாங்கம் சந்தர்ப்பவாத அரசியலைப் பின்பற்றுகிறது என்றும் மக்களின் பிரச்சினைகளுக்கு செவிசாய்க்க தவறியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

பண பரிவர்த்தனைகள் அதிகரிப்பதன் காரணமாக பொருட்களின் விலைகள் உயர்வதாகவும் இதன் காரணமாக மக்கள் கடும் பிரச்சினைகளை எதிர் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வர்த்தமானி அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றதே அன்றி பொருளாதாரத்திற்கு பயனளிக்கும் வகையில் அவை செயற்படுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (நி-8)

## தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது

(கொழும்பு)

சம்பள நிர்ணய சபை அங்கீகரித்த தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை தோட்ட நிறுவனங்கள் நேற்று முன்தினம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைவாக நாள் ஒன்றிற்கான அடிப்படை சம்பளம் 900 ரூபாவும், வரவு-செலவு கொடுப்பனவாக 100 ரூபாவும் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் அவர்களின் நாளாந்தச் சம்பளம் 750 ரூபாவாகவும் காணப்பட்டது.

ஆயிரம் ரூபாய் சம்பளம் தொடர்பில் நீண்ட காலமாக தோட்ட நிறுவனங்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. ஆயிரம் ரூபாய் நாளாந்த சம்பள விடயம் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திலும் குறிப்பிட்டிருந்தது. (நி-8)

## புத்தாண்டில் சதொச திறந்திருக்கும்

(கொழும்பு)

எதிர்வரும் 12 ஆம் மற்றும் 13 ஆம் திகதிகளில் அனைத்து சதொச வர்த்தக நிலையங்களும் திறக்கப்பட்டிருக்கும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மேலும் ஏனைய வர்த்தக நிலையங்களையும் குறித்த இரு தினங்களில் திறந்து வைக்குமாறும் வர்த்தகர்களுக்கு அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

## மேலும் 184 பேர் குணமடைவு

(கொழும்பு)

கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 91 ஆயிரத்து 456 ஆக உயர்ந்துள்ளது.


நேற்று முன்தினம் மேலும் 184 பேர் குணமடைந்துள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் இதுவரை தொற்று உறுதியான 94 ஆயிரத்திற்கு மேற்பட்டோரில் 2 ஆயிரத்து 513 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை இலங்கையில் கொரோனா தொற்று உறுதியானவர்களில் 595 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டி வில்லியர்ஸ் அதிரடி ஆட்டம் வெற்றி பெற்றது ஹோலி படை



2021 ஐ.பி.எல். இருபது-20 லீக் தொடரின் ஆரம்ப போட்டியில், நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தி றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி வெற்றிபெற்றுள்ளது.

சென்னையில் நேற்று முன் தினம் நடைபெற்ற இப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 159 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, கிறிஸ் லின் 49 ஓட்டங்களையும் சூர்யகுமார் யாதவ் 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பெங்களூர் அணியின் பந்து வீச்சில், ஹர்சல் பட்டேல் 5 விக்கெட்டுகளையும் ஜேமீசன் மற்றும் வோஷிங்டன் சுந்தர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 160 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, 20 ஓவர் கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் பெங்களூர் அணி 2 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக டி வில்லியர்ஸ் 48 ஓட்டங்களையும்கிளென் மக்ஸ்வெல் 39 ஓட்டங்கள்ளயும் பெற்றுக்கொண்டனர்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்துவீச்சில், பும்ரா மற்றும் மார்கோ ஜென்ஸன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ட்ரெண்ட் போல்ட் மற்றும் குர்ணல் பாண்ட்யா ஆகி யோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக பெங்களூர் அணியின் ஹர்சல் பட்டேல் தெரிவு செய்யப்பட்டார். (4-6)




## 4ஆவது வரிசைக்கு மக்ஸ்வெல் பொருத்தமானவர் – விராட் ஹோலி

14ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி நேற்று முன் தினம் தொடங்கியது.

தொடக்க ஆட்டத்தில் பெங்களூர் அணி நடப்பு சம்பியனான மும்பையை வீழ்த்தியது. இந்த வெற்றி குறித்து பெங்களூர் அணியின் கப்டன் விராட் ஹோலி கூறியதாவது,

வீரர்களின் கூட்டு முயற்சியால் இந்த வெற்றி கிடைத்தது. 4ஆவது வீரர் வரிசைக்கு மக்ஸ்வெல் பொருத்தமானவர்.

அவர் ஆட்டத்தின் வேகத்தையும், தன்மையையும் மாற்றக் கூடியவர். அவர் உத்வேகம் அளிக்கக் கூடிய பட்ஸ்மேன் ஆவார்.

முதல் போட்டியிலேயே வெற்றி பெற்றது முக்கியமானது. ஏனென்றால் மும்பை அணி மிகவும் வலுவான அணியாகும்.

டி வில்லியர்ஸ் எப்போதுமே சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்தக்கூடியவர் என அவர் கூறினார். (4-6)

சித்திரைப் புத்தாண்டு சிறப்புச் சலுகைகள்!

எதிர்வரும் 12, 13, 14, தினங்களில் எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சிறப்புச் சலுகைகளை வழங்குகின்றோம் !!!

எமது சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

இலவசம் இலவசம்





EVRO நீர் சுத்திகரிப்பு இயந்திரம் கொள்வனவு செய்பவர்களுக்கு 1 மின்சார கேற்றல் இலவசம் !



FREE



NEXUS SERIES குடி நீர் இயந்திரம் கொள்வனவு செய்பவர்களுக்கு 1 மின் அழுத்தி இலவசம் !



FREE

மேலும் இலத்திரனியல், வீட்டு உபகரணப் பொருட்களும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம் !!!

குறிப்பு: 14ம் திகதி மதியம் 12 மணிவரை மட்டுமே பொருட்கள் விற்பனை செய்யப்படும்

முந்துங்கள்! முந்துங்கள்!! இவ் அரிய வாய்ப்பை நழுவவிடாதீர்கள்

நீர் சுத்திகரிப்பு துறையில் முன்னோடியும், சுற்றாடல் அதிகார சபையினால் அங்கிகரிக்கப்பட்டதுமான

Everpure Hi-Tec (Pvt) Ltd.
Professional in Total Water Management
HOTLINE : 075 331 3310

JAFFNA
NO.581, K.K.S ROAD, JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 6888

KILINOCHCHI
NO.677, A9 ROAD, KARADIPOKKU JUNCTION, KILINOCHCHI.
TEL : 021 228 4888 HOTLINE : 077 844 7280

VAVUNIYA
NO.65, VAIRAVAKOVIL ROAD, VAIRAVAPULIYANKULAM, VAVUNIYA.
TEL : 024 222 6008 HOTLINE: 075 331 3303

(C-1944)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு ரூ.5000

**(கொழும்பு)**


**தமிழ் - சிங்கள புதுவருடப்பிறப்பை முன்னிட்டு, கொரோனாத் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

இவர்களுக்காக 5,000 ரூபாய் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் செஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதுவருடத்திற்கு முன்னர் இந்தச் சலுகையை வழங்க எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலணி மற்றும் சமுர்த்தி திணைக்களத்துடன் இணைந்து இதற்கான -



வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் செஹான் சேமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)

# சர்வதேசத்தின் ஒத்துழைப்பு இன்றி தாக்குதல் நடத்த முடியாது

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உள்நாட்டு சர்வதேச ஒத்துழைப்பு இல்லாமல் நடத்த முடியாது. அத்துடன் தாக்குதலுக்கு முன்னர் நாட்டில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் முறையான விசாரணை நடத்தாமல் அதனை புலிகளின் மீது சுமத்தி பாதுகாப்பு துறை வேடிக்கை பார்த்துள்ளார்கள் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஏப்ரல் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கை மீதான ஆறாவது நாள் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்ட சஹ்ரான் உட்பட குண்டுதாரிகளில் அதிகமானவர்கள் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக சம்பளம் பெற்றுக்கொண்டவர்கள் என்பது தற்போது வெளிப்படையாகி இருக்கின்றது. அதனால் அப்போதைய அரசாங்கத்தை மாற்றுவதற்கான சந்தர்ப்பமாகவும் இந்த தாக்குதலை பயன்படுத்தி இருக்கலாம்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது 8 குண்டுகளே வெடிக்கப்பட்டன. அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்க கர்த்தினால் மல்கம் ரஞ்சித் குரல் கொடுத்து வருகின்றார். அதனை நாங்கள் வரவேற்கின்றோம். அதேபோன்று வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற யுத்தத்தில் ஆயிரக்கணக்கான குண்டுகள் வெடிக்கப்பட்டன. தேவாலயங்கள் தாக்கப்பட்டன. அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கவும் கர்த்தினால் மல்கம் குரல் கொடுக்க வேண்டும்.

மேலும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு 2009 இல் முடிவடையும் வரை இந்த நாட்டில் முஸ்லிம் மக்கள் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களால் பாராட்டப்பட்டு வந்தனர். ஆனால் 2009 இற்கு பின்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்தன. அந்த நடவடிக்கை இன்று வரைக்கும் இடம்பெறுகின்றது.

நாட்டில் இடம்பெற்ற 83 கலவரம் ஒரு சிறிய இனவாத குழுவாலே ஆரம்பிக்கப்பட்டதாகும். அதனைத் தடுக்க தவறியதாலே அது யுத்தம் வரைக்கும் சென்றது. அதனால் அவ்வாறான இனவாத குழுக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதா? அல்லது நாட்டில் மீண்டும் இனவாதப் பிரச்சினை ஒன்றை ஏற்படுத்துவதா? என்பதை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)

# கைதிகளை பார்வையிட அனுமதி

## சந்தன ஏக்கநாயக்க

(கொழும்பு)

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு எதிர்வரும் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் சிறைக்கைதிகளின் குடும்பத்தினர் கைதிகளைப் பார்வையிட முடியும்.

எனினும் அவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்க முடியாது என்று சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளர் ஆணையாளர் (புனர்வாழ்வு மற்றும் நிர்வாகம்) சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கைதிகளைப் பார்வையிட வருபவர்கள் உரிய சுகாதார சட்டவிதிகளைப் பின்பற்றி இருப்பதுடன், சிறைச்சாலை சட்ட விதிகளுக்கு அமைவாகவும் வருகை தந்திருக்க வேண்டியது கட்டாயமாகும்.

இதன்போது குடும்பத்தினரால் கைதிகளுக்கு எவ்வித உணவுப் பொருட்களையும் வழங்க முடியாது. ஆனால் கைதிகளுக்கு தயார் செய்யப்பட்ட உணவுகள், சிற்றுண்டிகள் மற்றும் சுகாதார பாதுகாப்புப் பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக சிறைச்சாலையின் உணவகத்திற்கு 1,000 ரூபாய் பணத்தை செலுத்த முடியும்.

இந்த பணத் தொகையை எதிர்வரும் 14 ஆம் திகதிக்குள் செலுத்த வேண்டும். சிறைச்சாலைக்குள் பரவிய கொவிட்-19 வைரஸ் பரவல் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், மீண்டும் வைரஸ்பரவலடைவதை தவிர்க்கும் நோக்கத்திலே சிறைச்சாலைகள் திணைக்களம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது என அவர் தெரிவித்தார். (நி-8)

# மணல் அகழ்விற்கு நீர்வளச் சபையின் அனுமதி அவசியம்

(கொழும்பு)

மணல் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நீர்வளச் சபையின் அனுமதி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மணல் அகழ்வு மற்றும் கற்குவாரிகளை நடத்திச் செல்வதாயின் புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் அனுமதிப்பத்திரத்திற்கு மேலதிகமாக நீர்வளச் சபையின் அனுமதியும் பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார குறிப்பிட்டார். (நி-8)

# மாற்றுத்திறனாளிகளுக்கான காப்பகம் அமைக்கப்பட வேண்டும்

## மாற்றுத்திறனாளிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

மாவட்டம் தோறும் மாற்றுத்திறனாளிகள் காப்பகத்தை அமைப்பதற்கும் அத்தோடு மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் திட்டங்களைச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு மட் டக்களப்பு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு கல்லடியில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மட்டக்களப்பு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கம் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

மாவட்டம் தோறும் மாற்றுத் திறனாளிகளுக்கான காப்பகம் அமைக்கப்பட வேண்டும்.

மிக முக்கியமாக ஆதரவற்றவர்களாகக் கவனிக்க முடியாத நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகளைப் பராமரிப்பதற்கு மாற்றுத் திறனாளிகள் காப்பகத்தை உருவாக்கப்பட வேண்டும்.

அடுத்து மாற்று திறனாளிகளுக்கு மாதம் தோறும் ரூபாய் 10 ஆயிரம் கொடுப்பனவு வழங்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட அமைப்புகளுக்கு இயங்குவதற்கான உதவிகள் உட்பட போரின் பின்னரான காலத்தில் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான கொள்கை உருவாக்கம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடு பூராவும் சுமார் ஆறு இலட்சம் மாற்றுத் திறனாளிகள் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# மணிவண்ணன் கைதுக்கு அரசியல் பழிவாங்கல் காரணமல்ல என்கிறது பொலிஸ் தரப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் அரசியல் பழிவாங்கல் எதுவுமில்லை.

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மையாகப் பேணுவதற்காகக் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊழியர்களின் சீருடை தொடர்பான குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எனினும், அவர் மீதான வழக்கு விசாரணை தொடர்ந்து இடம்பெறும். இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சீருடை தமிழீழ விடுதலைப்புலிகளின் காவல் துறையினரின் சீருடையை ஒத்தது. இது தமிழீழ விடுதலைப்புலிகளை மீள் உருவாக்கம் செய்யும் முயற்சிக்கு ஒப்பானதாகும்.

குறித்த ஊழியர்கள், யாழ். மாநகர மேயரின் தனிப்பட்ட சிபார்சில் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களுக்கான சீருடையும் மேயரின் பணிப்புரையின் பேரிலேயே வழங்கப்பட்டுள்ளது எனவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதற்கமைய, யாழ்.மாநகர மேயர் மணிவண்ணன் நேற்று முன்தினம் அதிகாலை யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் மேலதிக விசாரணைக்காகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவர் வவுனியாவிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் அவரை மீண்டும் யாழ்ப்பாணம் பொலிஸார் பொறுப்பேற்றனர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும், அவர் மீது தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு மீதான விசாரணை தொடர்ந்து இடம்பெறும்" என அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டம் இளைஞர் நற்பணிமன்றம் ஆரம்பமாகி ஒருவருட நிறைவை முன்னிட்டு மேற்படி நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் மாபெரும் இரத்ததான முகாம் நேற்றுச் சனிக்கிழமை கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்றது. (படம்: ரவிசாந்)

## புதிய அரசியலமைப்பில்

# சைவத்திற்கு முன்னுரிமை கோரி உணவு தவிர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

புதிதாக உருவாக்கப் படவுள்ள அரசியலமைப்பில் சைவசமயத்திற்கு முன்னுரிமை வழங்கக்கோரி இலங்கையின் 11 மாவட்டங்களில் நேற்றுக் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை உணவு தவிர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் யாழ்ப்பாணம் - சாவகச்சேரி மறவன் புலவில் உணவு தவிர்ப்பில் ஈடுபடும் மறவன்புலவு க.சச்சிதானந்தம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,




சைவசமயத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டால் மத மாற்றிகள் மூலம் சைவ சமயத்திலிருந்து வேறு மதத்திற்கு மக்கள் செல்ல மாட்டார்கள்.

அத்தோடு சைவத்திற்கு முன்னுரிமை வழங்கப் பட்டால் பௌத்த மதமும் இந்து மதமும் பாதுகாக் கப்படும்.

அதேபோல் இந்து மக்கள் பசுவினை கோமாதா என வணங்குகின்றோம்.

ஆனால் இங்கே மாடுகளை வெட்டி உண்கிறார்கள். அதனையும் நிறுத்த கோருகின்றோம் என மேலும் தெரிவித்தார். (4-8-30-33)

## 17 உள்ளூராட்சி மன்றங்களுக்குட்பட்ட வீதிகள் காப்பெற் வீதியாக மாற்றம்

(யாழ்ப்பாணம்)

ஒரு இலட்சம் கிலோ மீற்றர் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட வீதிகள் காப்பெற் வீதிகளாக விரைவில் மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் முன்மொழிந்த வீதிப் புனரமைப்புக்கான கருத்திட்டங்கள் யாவும் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறை வேற்றுப்பொறியியலாளர் எந்திரி எஸ். இராதாகிருஸ்ணனால் செயற்படுத்துவதற்காக வீதிப் பெயர்ப்பட்டியல்கள் சம்பந்தப்பட்ட சபைகளின் தவிசாளர்களின் கவனத்திற்கு கடிதம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

இதன் மூலம் ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும் 15 முதல் 20 வரையிலான வீதிகள் காப்பெற் வீதிகளாக மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ளன. (4-8)




## இரத்ததான முகாம்

(குருநகர்)

யாழ். கிரீன்பீல்ட் சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 1 மணி வரை கிரீன்பீல்ட் மண்டபத்தில் "உதிரம் கொடுத்து உயிர் காப்போம் வாரீர்" என்ற தொனிப் பொருளில் இரத்ததான முகாம் நடைபெறும்.

எனவே குருதிக்கொடையாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4-8-106)

## வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை செல்லும் வீதியானது நாற்பது வருடங்களுக்கு மேலாக எவ்வித புனரமைப்புமின்றி குன்றும் குழியுமாக காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியானது பருத்தித்துறை-கொடிகாமம் வீதியில் ஆரம்பித்து மாசேரி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள முன்னாவெளி வீதியுடன் சென்று இணைகின்றது.

இவ்வீதியின் ஒரு பகுதி கடந்த 2019ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளபோதும் மிகுதி பகுதியானது இதுவரைக்கும் புனரமைப்புச் செய்யப் படவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக இந்த வீதியைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் , வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் மழை காலத்தில் வெள்ள நீர் வீதியை மூடி தேங்கி நிற்பதால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் குழிகளில் விழுந்து விபத்துக்குள்ளாவதாகவும் இதன்காரணமாக மாற்று வீதிகளின் ஊடாகவே மழைகாலத் தில் போக்குவரத்து செய்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே மழை காலம்தொடங்குவதற்கு முன்பாக இந்த வீதியினை புனரமைப்புச் செய்து தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(4-8-103)

## வருடப் பிறப்பு உற்சவ நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய பிலவ வருடப்பிறப்பு உற்சவ நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை அதிகாலை 1.39 மணிக்கு நடைபெறும் என ஆலய தர்மபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4-8)

# வடமாகாணத்தில் சிறந்த தொழிற்கல்வி நிறுவனமாக யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரி



(யாழ்ப்பாணம்)

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சினாலும் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினாலும் இலங்கையின் தொழிற்கல்வி நிறுவனங்களின் தரப்படுத்தலில் யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி அகில இலங்கை ரீதியில் "சிறந்த மேல் நிலை" பிரிவில் மூன்றாம் இடத்தினையும் வடமாகாணத்தில் முதலாமிடத்தினையும் பெற்றுள்ளது.

இதற்கான விருது வழங்கும் விழா கடந்த 5 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரிப் பணிப்பாளர் கலந்து கொண்டு விருதினைப் பெற்றுக்கொண்டார். (4-8)

## நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர எல்லைக்குள் அமைந்து கொழும்புத்துறை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி **(ARV)** எதிர்வரும் 19 ஆம் திகதி நெடுங்குளம் தாய்மார் கழகம், வசந்தபுரம் **CC** சனசமூக நிலையம், கொலன் தோட்டம்,

20 ஆம் திகதி 3 ஆம் குறுக்குத் தெரு கொழும்புத்துறை, 1 ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை, 2 ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை,

21 ஆம் திகதி எழிலூர் சனசமூக நிலையம், 5 ஆம் குறுக்குத் தெரு கொழும்புத்துறை, சுவாமியார் வீதி சிகிச்சை நிலையம்,

22 ஆம் திகதி மகேந்திரபுரம், வளன்புரம், சென் மேரிஸ் கோயில் **(A.V)**,

23 ஆம் திகதி **A.V** வீதி புகையிரத வீதிச் சந்தி, கொழும்புத்துறை விதானையார் லேன், பாசையூர் சனசமூக நிலையம்,

27 ஆம் திகதி ஈச்சமோட்டை சனசமூக நிலையம் பாசையூர், புதுக்குடியிருப்பு, பாண்டியன்தாழ்வு (புனித அன்னமாள் கோயில் அருகில்),

28 ஆம் திகதி வில்வந் தெரு, புளியடிச்சந்தி இலந்தைகுளம் வீதி, கொய்யாத் தோட்டம் சனசமூக நிலையம்,

29 ஆம் திகதி விதானையார் லேன் ஈச்சமோட்டை, பாசையூர் மகப்பேற்று நிலையம், சுண்டிக்குளி சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் வழங்கப்படவுள்ளது என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் சுமையில் அரச திணைக்களங்கள்; எந்த முன்னேற்றமும் இல்லை என்கிறார் சம்பிக்க

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை நேரடியாகப் பாதிக்கும் அரசு திணைக்களங்கள் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் எந்த வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அடையவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் 20 பில்லியன் இலாபம் ஈட்டிய இலங்கை மின்சார சபை தற்போது 280 மில்லியன் இழப்பை சந்தித்து வருகிறது. அத்துடன் இலங்கை மத்திய வங்கி, உள்நாட்டு வருவாய் துறை, இலங்கை சுங்கம், விமான நிலையம் மற்றும் மின்சார சபை ஆகியன அரசாங்கத்தின் மாற்றத்திற்குப் பின்னர் அபிவிருத்தி அடையவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.



மேலும் குறித்த திணைக்களங்கள் அனைத்தும் கடன் மூலமே இயங்குவதாகவும் இது எதிர்மறையான அறிகுறி இல்லை என்றும் பாட்டலி சம்பிக்க ரணவக்க சுட்டிக் காட்டினார். (நி-8)


அபயம் இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை

071 071 2345

மனநெருக்கீடுகளில் இருப்பவர்களுக்கு உடனடித் தொலைபேசி வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை

ஒரு நாளில்(24 மணி நேர இரவு பகல் சேவை) எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக தொடர்பு கொள்ளலாம்

மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையைப் பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்

துறை சார் மருத்துவர்களும் , குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி தீர்வு காண்பதற்கு / வழிகாட்டுவதற்கு தயாராக உள்ளனர் .

தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் தொடர்பான தகவல்கள் அனைத்தும் இரகசியமாக பேணப்படும்

சித்திரை 2021 (C-1941) அபயம் நிறுவனம் மானிப்பாய், யாழ்ப்பாணம்



## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: - செவ் 6 சூரி 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: **ACCA,BSC,Q.S,** தொழில் - கணக்காளர் (கட்டார்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள் நாடு மட்டும்
தொ.இ: **B**/11744

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 47 செவ்,சூரி 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L, சொந்த அரைக்கும் ஆலை
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: **B**/11745

பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 46 செவ் 6 சூரி 5 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: **A/L**, லண்டன் **PR** உண்டு
எதிர்பார்ப்பு: கனடா , லண்டன் உள்நாடு
தொ.இ: **B**/11746

பிறப்பு: 1974 இந்து நட்சத்திரம்: பூசம்
கி.பா: 27 செவ் 5 சூரி 6 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: **Physiotherapist**
எதிர்பார்ப்பு: சாதாரண அரச, தனியார் உத்தியோகம், உள்நாடு மட்டும்
தொ.இ: **B**/11747

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 15 செவ் 3 சூரி 2 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:. A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: **G**/3231

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 42 ¾ செவ் 9 சூரி 10 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: **B.SC**
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் மட்டும், உள்நாடு மட்டும்
தொ.இ: **G**/3245

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 81 ¼ செவ் 7 சூரி 8 இல்
தகைமை/தொழில்: **O/L**, தையல்
எதிர்பார்ப்பு: உள் நாடு, வெளிநாடு
தொ.இ: **G**/3252

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 17 ¾ செவ் 6 சூரி 10 இல்
உயரம்: 5
தகைமை/தொழில்: **A/L**, தொண்டர் ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச ஊழியர், உள்நாடு மட்டும்
தொ.இ: **G**/3258

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொ...**
**சேவைக் கட்டணமாக ரூபா 500 அற...**



### மணமகன் தேவை

1989.05.03 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பம் இயன் மருத்துவ விரிவுரையாளர் நிரந்தரம் (அரச கொழும்பு பல்கலைக்கழகம்) ரேவதி நட்சத்திரம் செவ்வாய்க்குற்றம் இல்லாத மணமகளுக்கு அரச உத்தியோகமுள்ள பட்டதாரி மணமகன் தேவை.

**தொடர்பு:- 077 520 7999** (6469)

### வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு டிசைனர், கணனி ரைப்பிங், புத்தகம் கட்டுநர் ஆகியோர் உடன் தேவை. (6533)

**தொடர்பு: 0773965214**

### மணமகள் தேவை

1990. யாழிந்து. பரணி. Doctor. யாழ்ப்பாணம். பதிவு: 4761. தரகர்கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com, 076 664 9401. (c-1313)

### மணமகள் தேவை

1982. யாழிந்து.உத்தரம். **Doctor.** யாழ்ப்பாணம். பதிவு: 4589. தரகர்கூலி இல்லை. **Unlimited** குறிப்புகள். பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com, 076 664 9401. (c-1313)

### மணமகள் தேவை

1992. யாழிந்து.பூரம். Doctor. யாழ்ப்பாணம். பதிவு: 4294. தரகர்கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com, 076 664 9401 (c-1313)

### மணமகன் தேவை

1995. யாழிந்து.ரேவதி. Customer Relations Officer. யாழ்ப்பாணம். பதிவு: 5424. தரகர்கூலி இல்லை. **Unlimited** குறிப்புகள். பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com, 076 664 9401. (c-1313)

### மணமகன் தேவை

1986. யாழிந்து.உத்தரம். அபிவிருத்தி உத்தியோகத்தர். தென்மராட்சி. பதிவு: 5410. தரகர்கூலி இல்லை. **Unlimited** குறிப்புகள். பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQ Marriage Service.com, 076 664 9401. (c-1313)

### மணமகன் தேவை

1990. யாழிந்து. மிருகசீரிடம். **Divisonal Secretary.** யாழ்ப்பாணம். பதிவு: 5289. தரகர்கூலி இல்லை. **Unlimited** குறிப்புகள். பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு. **Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService.com,** 076 664 9401, (c-1313)



## NORTH LANKA IIT CITY CAMPUS

**B.Ed. புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**காலம்:** I. B.Ed. - 3 Years.
**தகமை:** G.C.E A/L 3 Passes

II. B.Ed. Top up 1 Year
**தகமை:** ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அல்லது கல்வியியற்கல்லூரி பாடநெறியை பூர்த்திசெய்த ஆசிரியராக இருத்தல்வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 14/04/2021**

விண்ணப்பப்படிவங்களை ரூபா 1000/= செலுத்தி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

18/04/2021 காலை 10 மணிக்கு எம்முடைய காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

**UGC அங்கீகாரம்**

மேலதிக தொடர்புகளுக்கு
Director - 0767504535
Registrar - 0778849677
Address- Top Floor, People's Bank,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “பிலவ” வருஷ வருஷப்பிறப்புக் கருமங்கள்

## வாக்கிய பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| | சூரி.சந் புத.சுக் | செவ் ராகு | |
| குரு | பிலவ வருஷ ஜாதகம் | | |
| லக் சனி | | | |
| | கேது | | |

சார்வரி வருஷம் பங்குனி மாதம் 31 ஆம் திகதி (14.4.2021) செவ்வாய்க் கிழமை பின்னிரவு 1.39 மணிக்கு பூர்வபக்க துதியை திதியில் பரணி நட்சத்திரத்தின் இரண்டாம் மாதத்தில் பீரீதி நாம யோகத்தில், கௌலவம் கரணத்தில் மகர லக்கினத்தில், இடப நவாம்சத்தில் சனி கால ஓரையில், சந்திரன் சூக்கும ஓரையில், தாமத குண வேளை யில் நட்சத்திர பட்சியாகிய வல்லூறு உண்டித்தொழிலும் சூக்கும பட்சி உண்டித் தொழிலும் செய்யும் காலத்தில் இப் புதிய “பிலவ” என்னும் புதிய வருஷம் பிறக்கின்றது. அன்று முன்னி ரவு 9.39மணி முதல் அன்று பின்னி ரவு 5.39 மணி வரை விஷு புண்ணி ய காலமாகும்.

## திருக்கணித பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரி.சுக் சந். யுரே | ராகு | செவ் |
| நெப் குரு | புது வருஷ கிரக நிலை | | |
| லக் சனி | | | |
| | கேது | | |

சார்வரி வருஷம் பங்குனி மாதம் 31 ஆம் நாள் (14.04.2021) செவ்வாய் கிழமை பின்னிரவு 2.31 மணிக்கு “பிலவ” என்னும் பெயருடைய தமிழ்ப் புதுவருடம் பிறக்கின்றது.

இது 60 வருட சுற்றுவட்டத்தில் 35 ஆவது வருஷமாகும். அந்நேரம் நட்சத்திரம் பரணி 2 ஆம் பாதம் திதி பூர்வபட்ச துவிதியை அமிர்த சித்த யோகம் அன்று இரவு 10.30 மணிமுதல் மறு நாள் அதிகாலை 6.33 மணிவரை மேட சங்கிரமண புண்ணிய காலமாகும். வருஷம் பிறக்கும் போது உதய லக்கினம் மகரம் ஆகும்.

## கருமங்கள்

விஷு புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து, மருத்துநீர் தேய்த்து சிரசில் விளா இலையும், காலில் கடப்பம் இலையும் வைத்து ஸ்நானஞ் செய்து நீலம், சிவப்பு நிறமுள்ள பட்டாடையாயினும், நீலம் சிவப்பு கரையமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து நீலம், பவளம் இழைத்த ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி விக்கினேசுவரர் முதலிய குலதெய்வ வழிபாடு செய்து இயன்ற தானதருமங்களையாற்றி குரு பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவரின் ஆசி பெற்று உற்றார் நண்பர் களுடன் அளவளாவி அறு சுவை உணவுடன் பொரிக்கறி, கறுப்பு சேர்ந்தருந்தி, தாம்பூலம் தரித்து கண்ணாடியில் முக தரிசனம் செய்து புதிய வருஷ பலன் களை வாசித்தும், கேட்டும் நன் குணர்ந்து தத்தம் சமய நூல்களை பாராயணம் செய்து மங்களகரமாகச் சயனஞ்செய்க.

மறுநாளாகிய பிலவ வருஷம் சித்திரை மாதம் 01 ஆம் திகதி புதன்கிழமை வைகறையில் துயிலெழுந்து மனத் தூய்மையுடன் வழிபடும் கடவுளைத் தியானித்து தான் முன் செய்தவை களையும் மேற் செயற்பாலானவாகிய அறம் பொருள் இன்பங்களையும் சிந்தித்து கண்ணாடி தீபம் நிறைகுடம் தன் வலக்கை தாய், தந்தை ஆசிரியரின் பாதம் தேவதைகளின் திருவுருவம் திருமுறைப் புத்தகம் தாமரை முதலிய பூக்கள் பழவகை, மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை, பாக்கு முதலிய மங்கலப் பொருட் களைத் தரிசித்து நித்திய கர்மானு ஷ்டானங்களை முடித்து, தங்கள் வீடு களிலே சூரியனுக்குப் பொங்கல் செய்து, முன்போல போசண பூஷண தரிசா னாதிகள் இயற்றி மங்களகரமாக வாழக்கடவர்.

### மருத்துநீர் தயாரித்தல்

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர் வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பிலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்திலிட்டு காய்ச்சி கொள்க.

### கைவிசேஷம் - வாக்கிய பஞ்சாங்கம்

14.04.2021 - புதன் முற்பகல் 9.09 மணிமுதல் 9.52 மணிவரை
14.04.2021 - புதன் பிற்பகல் 2.22 மணிவரை 4.11 மணிவரை
16.04.2021 - வெள்ளி பின் இரவு 4.16 மணிமுதல் 5.07 மணிவரை
17.04.2021 - சனி காலை 7.49 மணிமுதல் 9.00 மணிவரை
17.04.2021 - சனி மாலை 3.04 மணிமுதல் 3.59 மணிவரை

### கைவிசேஷம் - திருக்கணித பஞ்சாங்கம்

14.04.2021 புதன் காலை 6.15 மணிமுதல் 7.30மணிவரை
14.04.2021 புதன் மாலை 6.15 மணிமுதல் 7.00 மணிவரை
16.04.2021 வெள்ளி பின்னிரவு 5.15 மணிமுதல் 6.00 மணிவரை
17.04.2021 சனி பகல் 10.30 மணிமுதல் 11.40 மணி

### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம், பூரம், உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள், பூராடம்

இவற்றில் பிறந்தோர் தவறாது மருந்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து இயன்ற தான தருமங்களைச் செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

# பிரதான சூத்திரதாரி நௌபர் தான் இல்லையென்றால் நிரூபித்துக் காட்டுங்கள்

## -சரத் வீரசேகர-

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களுக்கு அதியுட்ச தண்டனையை வழங்குவது மாத்திரமின்றி தாக்குதல்களுடன் தொடர்புடைய அனைவரினதும் சொத்துகளும் அரசுடைமையாக்கப்படும். அவ்வாறு அரசுடைமையாக்கப்படும் சொத்துகள் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலதிக இழப்பீடுகளை வழங்குவது தொடர்பிலும் பரிசீலனை செய்யப்படுமென பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அத்துடன், அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் விசாரணை அறிக்கை, அரச புலனாய்வுத்துறையின் அறிக்கை, பொலிஸாரின் அறிக்கை, ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை, வெளிநாட்டு புலனாய்வுத்துறையின் விசாரணை அறிக்கை மற்றும் ஏனைய அறிக்கைகளின் பிரகாரம் தான் நௌபர் மௌலவியே பிரதான சூத்திரதாரியென அறிவித்துள்ளேன்.

இவர் பிரதான சூத்திரதாரி இல்லையென கூறுபவர்கள் உரிய சாட்சியங்கள் இருந்தால் ஒப்படைக்கலாமெனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான இறுதிநாள் விவாதத்தில் பதில் உரையை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி-4)

# சுமார் 9 லட்சம் பேருக்கு இதுவரை தடுப்பூசி

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி மொத்தம் 9 இலட்சத்து 27 ஆயிரத்து 645 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. இதேவேளை இது வரை இரண்டு ஆயிரத்து 469 சீன நாட்டினருக்கு சினோபார்ம் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது என்றும் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-6)

# சபாநாயகர் பக்கச்சார்பாக தொடர்ந்தும் செயற்படுகிறார்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தொடர்ந்தும் பக்கச்சார்பாக செயற்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த செயல் தம்மை மனரீதியாக பாதித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் 39 பாராளுமன்ற உறுப்பினர்களும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்ச்சியான நிகழ்வாக மாறியுள்ளது என்று 39 உறுப்பினர்களும் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் மேலும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒரு தீர்மானத்தை எதிர்க்கும் போதெல்லாம் சபாநாயகரால் வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுகிறார்கள்.

20 ஆவது திருத்தம் தொடர்பான விவாதத்தின் முடிவில் எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்லவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

கொலைக் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜெயசேகரவை பாராளுமன்றத்தில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் நிலையியற் கட்டளையின் கீழ் கேள்விகளை எழுப்பும்போதெல்லாம் அந்த உரிமையை சபாநாயகர் தொடர்ந்து குறைத்து வருகிறார் என அவர்கள் தெரிவித்தனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

**11.04.2021**
**பங்குனி 29, ஞாயிற்றுக்கிழமை**
**சதுர்த்தி காலை 6.56 மணிவரை**
**உத்திரட்டாதி முற்பகல் 9.47 மணிவரை**
**சுபநேரம் 9.06 - 10.36 மணிவரை**
**இராகுகாலம் 4.36 - 6.06 மணிவரை**
**சந்திராஷ்டமம்:- பூரம்**
**அமாவாசை விரதம்.** **வளவன்**


மேஷம்

தொழிலில் சிறு மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்க முற்படுவீர்கள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


ரிஷபம்

சந்தோசம் தரும் வாய்ப்புக்கள் ஏற்படலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு.


மிதுனம்

திறமைகள் வெளிப்படும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.


கடகம்

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும்.


சிம்மம்

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.


கன்னி

தன்னம்பிக்கையோடு பணிபுரிவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொறுமையால் பெருமைகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


துலாம்

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.


விருச்சிகம்

முன்னேற்றம் அதிகரிக்கும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், குடும்ப நலனில் அக்கறை கூடும்.


தனுசு

திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே கைகூடும், உறவினர்களிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


மகரம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் கூடும்.


கும்பம்

குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும் நாள்.


மீனம்

நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ஒப்புக்கொள்ளப்பட்ட தவறு, பாதி பரிகாரமாகும்.**

# நாடு முழுவதும் எழுந்தமானமாக பி.சி.ஆர்.பரிசோதனை நடவடிக்கை

(கொழும்பு)

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு கொரோனாப் பரவுவதைத்தடுக்கும்பொருட்டுபிசிஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தின் எல்லைகளில் மட்டுமன்றி நாடு முழுவதும் இந்தச் சீரற்ற பரிசோதனை மேற்கொள்ளப்படும்.



எனவே அனைத்து மக்களும் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அமுல்படுத்தப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தற்போது சராசரியாகக் கொரோனாத் தொற்று உறுதியான 200 பேர் அடையாளம் காணப்படுவதாகக் குறிப்பிட்ட அவர் நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை நாளை திங்கட்கிழமை விசேட விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஏராளமான மக்கள் சொந்த ஊருக்குச் செல்வார்கள் என்பதனால் குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-8)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் சூத்திரதாரியை இனங்காண்பதில் அரசு தோல்வி



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியை இனங்காண்பதில் அரசாங்கத்தின் இயலாமையை மறைப்பதற்காக, ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரை பிரதான சூத்திரதாரியாக அறிவித்துள்ளனர். நௌபர் மௌலவி சஹ்ரானின் சகாவாக இருந்துள்ளாரே தவிர எந்த சந்தர்ப்பத்திலும் சஹ்ரானின் தலைவராக செயற்படவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். (நி-8)

# தகவல் திணைக்கள பணிப்பாளராக மொஹான் சமரநாயக்க நியமனம்

(கொழும்பு)

அரசாங்க தகவல் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக மொஹான் சமரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக இப்பதவியை வகித்த நாலக்க களுவெவ அண்மையில் பதவி விலகியிருந்தார்.

இதனையடுத்து, வெற்றிடமான பதவிக்கு மொஹான் சமரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னதாக இவர் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



# இளவரசர் பிலிப் மறைவிற்கு ஜனாதிபதி கோட்டா இரங்கல்



(கொழும்பு)

பிரித்தானிய இளவரசர் பிலிப்பின் மறைவிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரங்கல் வெளியிட்டுள்ளார்.

அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் இது குறித்த பதிவொன்றை இட்டுள்ளார்.

குறித்த பதிவில், பிரித்தானியாவின் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் துணைவர் பிலிப் இளவரசர் தனது 99 ஆவது வயதில் நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என பக்கிங்ஹாம் மாளிகை அறிவித்துள்ளது.

இளவரசர் பிலிப்பின் மறைவிற்காக மகாராணி எலிசபெத் மற்றும் அரசு குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களை வெளியிட்டுக் கொள்கிறேன்.

இராணுவத்திலும் சமூக சேவைகளிலும் இளவரசர் பிலிப் ஆற்றிய அளப்பரிய தொண்டு என்றென்றும் நினைவு கூரப்படும். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்கிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## 80 இலட்சம் பெறுமதியான போதைப்பொருளுடன் கைது

(கொழும்பு)

80 இலட்சம்ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் கொழும்பு மத்திய குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, மாளிகாவத்தை பகுதியில் வைத்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான 1.2 கிலோகிராம் ஐஸ் ரக போதைப்பொருளை கொழும்பு மத்திய குற்றத் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். 62 வயதான நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல் தரவைகளை அமைத்துத்தருமாறு கோரிக்கை



(தருமபுரம்)
கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட வட்டக்கச்சி கட்சன் வீதி கிராம மக்கள் மேய்ச்சல் தரவை இன்மையால்கால்நடைகள் அவதி உற்று வருவதாக தெரிவித்துள்ளனர்.

நீண்டகாலமாக மேய்ச்சல் தரவை இல்லாமையால் தமது கர்ல்நடைகள் பாரியளவில் அழிவடைந்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் தமக்கு அரசினால் வாழ்வாதாரத்துக்காக கால்நடைகள் வழங்கப்பட்டுள்ள நிலையிலும் மேய்ச்சல் தரை இல்லாததாலும் கால்நடை வைத்தியர் இல்லாததாலும் அவதியுற்று வருவதாக தெரிவித்தனர். எனவே தமக்கான மேய்ச்சல் தரவையை தந்துதவு மாறும் கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-8-316)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்; வாழ்வாதாரம் இழந்து நிற்கும் மீனவர்கள்

(கிளிநொச்சி)
**இந்திய மீனவர்களின் அத்துமீறல்களினால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக இரணைதீவு மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

தமது உடைமைகளைவிற்று மீன்பிடி தொழிலுக்கான பொருட்களை கொள்வனவு செய்கின்ற போதிலும் இந்திய மீனவர்களின் படகுகளினால் அவை சேதமாக்கப்படுவதாக இரணைதீவு மீனவர்கள் தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி இரணைதீவு மக்கள் தமது வாழ்வாதாரத் தொழிலாக மீன்பிடித்தொழிலையே மேற்கொண்டு வருகின்றனர்.

தமது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடியின்னால் தமது வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்படுவதாக இரணைதீவு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது மீன்பிடித்தொழிலுக்காக பயன்படுத்தப்படும் வலைகள், இரும்புக் கம்பிகள் என இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளினால் சேதமாக்கப்படுவதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே உடனடியாக தமது பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு எல்லை தாண்டிய இந்திய மீனவர்களின் வருகையினை நிறுத்துமாறு இரணைதீவு மீனவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (4-8)

# பசுவதையை உடன் நிறுத்த வேண்டும்

## சிவசேனை அமைப்பு

(நெளுக்குளம்)
அரசியல்வாதிகள் தமது அரசியல் பலத்தினை பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் மாடறுப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக சிவசேனை அமைப்பின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் தமிழ்த்திரு அ.மாதவன் தெரிவித்தார்.

இலங்கை அரசியல் அமைப்பில் சைவசமயத்திற்கு முன்னுரிமை விதி, மதமாற்றத் தடைச்சட்டத்தை ஏற்படுத்து, மாடுவெட்டத் தடைவிதி போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி அடையாள உண்ணா விரதப்போராட்டம் ஒன்று வவுனியா சிதம்பரபுரம் பழனிமுருகன் ஆலயத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், எமது பகுதிகளிலும் பசுவதை செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

சில அரசியல் வாதிகள் தமது அரசியல் பலத்தினை வைத்துக்கொண்டு சட்டத்திற்கு புறம்பான வகையில் அதிகளவான மாடுகளை வெட்டும் செயற்பாட்டினை முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே இந்த செயற்பாடுகள் உடனடியாக முற்றாக நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் ஒருவரது மனோநிலையை பயன்படுத்தி மதமாற்றத்தினை ஏற்படுத்தும் செயற்பாடுகளும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இவை தடுக்கப்பட்டு புதிய அரசியல் அமைப்பிலே இந்த விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி குறித்த உண்ணா விரதம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (4-8-299)



கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் புதிய இருமாடிக் கட்டடத்திற்கான அத்திபாரக் கல்லினை வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் நேற்று முன்தினம் நாட்டி வைத்தார். (படம்:-கிருஸ்ணகுமார்)

# விகாரை அமைக்க முயற்சி; கூட்டமைப்பு எம்.பிக்கள் நேரில் ஆய்வு



(முறிகண்டி)
கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரன் ஆலயத்தில் பௌத்த விகாரை அமைக்கவுள்ளமை தொடர்பில் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், எஸ். சிறிதரன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். குறித்த ஆலய வளாகத்தில் அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட எடுத்த முயற்சியினை அடுத்து அப்பகுதியில் பௌத்த விகாரை அமைக்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்கலாம் என தெரிவித்து குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது. (4-8-100-316)

## உலருணவு பொருட்கள் வழங்கல்

(அக்கராயன்)
முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வசந்தபுரம் மற்றும் முத்தையன்கட்டு இரண்டாம் கண்டம் ஆகிய கிராமங்களில் மிகவும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சிலவற்றிற்கு உலருணவுப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன. முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலனினால் 7 குடும்பங்களுக்கு இவ் உலருணவுப் பொருட்கள்வழங்கப்பட்டன.(4-8-350)

## அடிக்கல் நாட்டல் வைபவம்

(சிவநகர்)
கிளிநொச்சி சிவநகர் சிவன் சோலை கிராமத்தில் சித்தி விநாயகர் ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நாளை 12 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது என ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது. (4-8-254)

# கால்நடைகளின் உறைவிடமாக மாறியது பேருந்து நிலையம்



(அக்கராயன்)
வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் வீதி அமைத்து வழங்கப்படாததன் காரணமாக மாங்குளம் பேருந்து நிலையம் கால்நடைகளின் உறைவிடமாக மாறியுள்ளது. 2019 ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் குறித்த பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு புதுக்குடியிருப்பு பிரதேச சபையிடம் கையளிக்கப் பட்டது.

ஏ-9 வீதியில் இருந்து பேருந்து நிலையம் கடந்து புகையிரத நிலையத்திற்கு அருகில் துணுக்காய் வீதியினை சந்திக்கின்ற 400 மீற்றர் தூர வீதி இதுவரை அமைக்கப்படவில்லை.

இதன் காரணமாக மாங்குளம் நகரத்தில் பேருந்துகள் தங்கிச்செல்கின்ற போதிலும் ஒரு பேருந்து கூட மாங்குளம் பேருந்து நிலையத்திற்கு செல்வதில்லை. வீதி அமைக்கப்பட்டால் தான் மாங்குளம் செல்கின்ற பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குச் செல்ல முடியும். தற்போது புதிய பேருந்து நிலையம் கால்நடைகளின் உறைவிடமாகக் காணப்படுகின்றது. (4-8-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிவேக நெடுஞ்சாலையில் தீப்பற்றி எரிந்த தாங்கி ஊர்தி



(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலையில் கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த தாங்கி ஊர்தி ஒன்று நேற்று அதிகாலை விபத்துக்குள்ளாகி தீப்பற்றியுள்ளதாக எல்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீப்பரவல் அதிவேக நெடுஞ்சாலையின் தீயணைப்பு வாகனங்களினால் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீப்பற்றியதால் தாங்கி ஊர்திக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதுடன், சாரதியின் உதவியாளருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன. (நி-8)

# கற்றல் நடவடிக்கைகளுக்கான நாட்களை 150 ஆக குறைக்கத் தீர்மானம் - பீரிஸ்

(கொழும்பு)

**பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைளை 2021 ஆம் ஆண்டு 150 நாட்களாக குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.**

கல்வி அமைச்சில் வைத்து செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர்,

இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட வேண்டிய உயர்தர பரீட்சைகளை ஒக்டோபர் 4 ஆம் திகதியும் டிசெம்பரில் நடத்தப்பட வேண்டிய சாதாரண தர பரீட்சைகளை 2022 ஜனவரியிலும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.


இவ்வாண்டுக்கான உயர் தர பரீட்சைகள் ஒக்டோபர் 4 ஆம் திகதி ஆரம்பமாகி 30 ஆம் திகதி வரை நடைபெறும். அதேபோன்று சாதாரண தர பரீட்சைகள் 2022 ஜனவரி இறுதி வாரத்தில் ஆரம்பிக்கப் படும்.

அதேபோல் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு வருடத்தில் 200 நாட்கள் பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

2021 ஆம் ஆண்டு பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைளை 150 நாட்களாக குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2021 இற்கான சாதாரண தர பரீட்சையினை இவ்வருடம் டிசெம்பர் மாதம் நடத்த ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் ஒரு சில தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை ஒரு மாத காலத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான



பொதுப் பரீட்சைகளுக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தயாராக போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள காலத்தை மாணவர்கள் சிறந்த முறையில்பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)

# மூன்றாம் அலையை தடுப்பது மக்களின் கைகளிலே உள்ளது

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

புத்தாண்டு காலத்தில் பொது மக்கள் நடந்துகொள்ளும் விதத்தை பொறுத்தே மூன்றாம் அலை தோன்றுவதற்கான அல்லது தடுப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கத் தவறியமை, பண்டிகைக் காலங்களில் கொழும்பில் உள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் ஏராளமான மக்கள் கூட்டத்திற்கு வழிவகுத்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டில்கொரோனாத்தொற்று உறுதியாகும் நோயாளிகள் தொடர்ந்தும் அடையாளம் காணப்படும் இந்த சூழ்நிலையில், சமூகத்திலிருந்து அதிகளவிலான நோயாளிகள் பதிவாகலாம் என்றும் கூறினார்.

இது சுகாதார அறிவுறுத்தல்கள் மீறப்பட்டுள்ளமையை காட்டுவதாக சுட்டிக்காட்டிய அவர், இதுபோன்ற சூழ்நிலையில் பண்டிகை காலத்திற்குப் பின்னர் நாட்டில் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-8)



# உலக அழகி மகுடத்தை மீளளிக்க தீர்மானம்

(கொழும்பு)

தான் வென்ற திருமதி உலக அழகி மகுடத்தை மீளக் கையளிக்க தீர்மானித்துள்ளதாக கரோலின் ஜூரி தெரிவித்துள்ளார். (நி-8)

# எண்ணெய் விவகாரம் விசாரணைக்கு தனிப்படை

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெயில் புற்றுநோய் காரணியான "எப்லொடொக்ஷின்" அடங்கியுள்ளமை தொடர்பிலான சிறப்பு விசாரணைகளுக்குத் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக இந்தத் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 250 |
| தக்காளி | 60 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 60 | 50 |
| கோவா | 120 | 100 | 120 |
| கரட் | 170 | 180 | 200 |
| பூசணி | 60 | 60 | 80 |
| புடோல் | 120 | 80 | 120 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 220 | 180 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 220 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 160 |
| பயற்றங்காய் | 140 | 100 | 80 |
| லீக்ஸ் | 110 | 100 | 120 |
| பீற்றூட் | 80 | 80 | 120 |
| கறிமிளகாய் | 160 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 500 |
| போஞ்சி | 160 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 160 |
| கீரை – 1 பிடி | 50 | 40 | 50 |
| தேசிக்காய் | 130 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 75 | 50 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 180 | 160 | 300 |
| முள்ளங்கி | 50 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 |
| வல்லாரை | 80 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 80 | 120 |

# இறந்தவர் மீண்டும் உயிர் பெற்றதால் வைத்தியசாலையில் பரபரப்பு!

(கொழும்பு)

திடீர் உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நபர் உயிரிழந்து விட்டதாகக் கூறி பிரேத அறைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் உயிருடன் மீண்டுள்ள சம்பவம் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த மீனவர் (வயது-40) ஒருவர் திடீர் உடல்நலக் குறைவினால் பாதிக்கப்பட்டதை அடுத்து நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அவரைப் பரிசோதித்த நீர்கொழும்பு பொது வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் குறித்த நபர் உயிரிழந்துவிட்டதை உறுதிப்படுத்தியிருந்ததை அடுத்து உயிரிழந்ததாக கருதப்பட்ட நபரின் சடலம் பிரேத அறைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், உயிரிழந்ததாக கருதப்பட்டு பிரேத அறைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த நபரின் சடலத்தை பார்வையிடுவதற்காக அவரது குடும்பத்தார் சென்ற வேளையில் அவரது உடலில் அசைவுகள் காணப்பட்டுள்ளதை அவதானித்தனர். இது குறித்து மருத்துவமனை தரப்பிற்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, குறித்த நபர் மீண்டும் விடுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டதில் அவர் உயிருடன் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபரின் உடலில் சீனியின் அளவு குறைவடைந்தமையினால், அவர் சுயநினைவை இழந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த நிலையில், குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக உறுதிப்படுத்திய வைத்தியருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்பமான காலநிலையால் வீழ்ந்து மடியும் கால்நடைகள்

(அக்கராயன்)

**தற்போது நிலவுகின்ற கடும் வெப்பம் காரணமாக கால்நடைகள் உயிரிழக்கும் சம்பவங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகம் இடம் பெறுகின்றன.**



முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான கால்நடைகள் காணப்படுகின்றன. தற்போது நிலவுகின்றகடும் வெப்பம் காரணமாக நோய்த் தாக்கத்தினை எதிர் கொள்கின்ற கால்நடைகள் கால்நடை வைத்தியர்களின் சிகிச்சைகள் பலனின்றி உயிரிழக்கும் சம்பவங்கள் நிகழ்கின்றன.

கடந்த காலத்தில் மேய்ச்சலின்றி கால்நடைகள் உயிரிழப்புகளை எதிர்கொண்டுள்ள போதிலும் தற்போது மேய்ச்சல் காணப்படுகின்ற போதிலும் வெப்பத்தின் காரணமாக நோய்கள் ஏற்படுவதாக கால்நடை வளர்ப்பாளர்களினால் தெரிவிக்கப்படுகின்றது. கால்நடைகள் உயிரிழப்பதனால் கால்நடை வளர்ப்பாளர்கள் பலத்த இழப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

கால்நடைகளின் உயிரிழப்புகள் தொடர்பாக கால்நடை வைத்தியர்கள் சிறந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-8-350)

# சமுர்த்தி விற்பனை சந்தை திறந்து வைப்பு



(நெளுக்குளம்)

புதுவருடத்தை முன்னிட்டு சமுர்த்தி விற்பனைச் சந்தை வவுனியா வேப்பங்குளம் சமுர்த்தி வங்கிக்கு முன்பாகதிறந்து வைக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் கலந்து கொண்டார்.

புதுவருடத்தை முன்னிட்டு மக்களுக்குத் தேவையான அனைத்து பாரம்பரிய உள்ளூர் உற்பத்தி பொருட்களை ஒரே இடத்தில் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளும்படியாக சமுர்த்தி பயனாளர்களினால் குறித்த விற்பனை பொருட்கள் காட் சிப்படுத்தப்பட்டு, விற்பனை செய்யப்பட்டுவருகிறது. (4-8-299)

# முன்னாள் போராளியின் பெயரில் வீதி

## தவிசாளரிடம் விசாரணை

(முறிகண்டி)

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியின் பெயரில் திறக்கப்பட்ட வீதியின் பெயர்ப்பலகை விவகாரம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் நேற்று விசாரணை மேற் கொண்டனர்.

கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான குறித்த வீதியின் பெயரை வெற்றிவீதி என பெயர் சூட்டப்பட்டு கடந்த 28 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் பயங்கரவாத தடுப்பு பிரிவின் அறிவுறுத்தலிற்கு அமைவாக கிளிநொச்சி பொலிஸார் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதனை அழைத்து விசாரணை மேற்கொண்டனர்.

குறித்த பெயருக்கு சொந்த மானவர் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி எனவும், புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டதன் பின்னர் சமூகமட்ட செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தமைக்காக அவரது பெயரை பொதுமக்கள் சூட்டியதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

குறித்த வீதிப்பெயர்ப்பலகையை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்கள் குறிப்பிட்டதாகவும் தவிசாளர் தெரிவித்தார். (4-8-100)

# மல்லாவி வைத்தியசாலையின் வளங்களை அதிகரிக்க கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மல்லாவி ஆதார வைத்தியசாலையின் வளங்களை அதிகரிக்க வேண்டும் என அப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மல்லாவி ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ள போதிலும் கூடுதலான நோயாளர்கள் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கே அனுப்பப்படுகின்றனர். இது மல்லாவி வைத்தியசாலையின் வைத்தியர்கள் உட்பட பல்வேறு வளங்களின் பற்றாக்குறையினை வெளிப்படுத்துகின்றது.

மல்லாவி ஆதார வைத்தியசாலையின் வளங்கள் அதிகரிக்கப்படுமானால் மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுகளின் மக்கள் இயன்றளவு கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்படாது எனவும் வைத்தியசாலையின் வைத்தியர்கள் உட்பட வளங்கள் பெருக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

மல்லாவி ஆதார வைத்தியசாலையினை வளம் கொண்ட வைத்தியசாலையாக மாற்றுவதற்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் துணுக்காய், மாந்தை கிழக்கு பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன.(4-5-350)

# 'மன்னல்' மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான கலாசார விழா ஜூன் மாதம் இடம்பெறவுள்ள நிலையில் ஆண்டுதோறும் மன்னார் மாவட்டத்தின் சிறப்பை எடுத்துரைக்கும் விதமாக உருவாக்கப்படும் "மன்னல்" பிரதேச மலர் இம்முறை வெளியிடப்படவுள்ளது.

இந்த நிலையில் மன்னார் பிரதேச செயலக பிரிவை சேர்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் ஆக்கங்கள் மன்னல் மலரில் வெளியீடு செய்வதற்காக கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் மன்னார் பிரதேச செயலகத்தில் நேரடியாகவோ அல்லது கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், மன்னார் எனும் முகவரிக்கோ அல்லது **abimahathy18@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-8-285)




# கூட்டம் பிற்போடப்பட்டது

(நெளுக்குளம்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் அபிவிருத்தி சங்கக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் அ.லோகேஸ்வரன் தெரிவித்தார்.

விடுமுறையின்பின்னர் பாடசாலை ஆரம்பித்தவுடன் புதிய திகதி அறிவிக்கப்படும் எனவும் அதிபர் தெரிவித்தார். (4-8-299)

# கால்நடைகளால் பயிர்ச்செய்கை அழிவு

## விவசாயிகள் முறைப்பாடு



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் செல்வபுரம் கிராமத்தில் கால்நடை வளர்ப்பாளர்களின் கால்நடைகளினால் தொடர்ச்சியாக பயிர் அழிவுகள் ஏற்படுவதாக விவசாயிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற வவுனிக்குளம் சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் இம்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பாளர்களின் கால்நடைகளினால் காலபோகம், சிறுபோகங்களில் பெரும் அழிவுகள் ஏற்படுவதனால் பயிர்களுக்கு விவசாயிகள் காவலில் ஈடுபட வேண்டி உள்ளது. கால்நடைகளினால் ஏற்படும் அழிவுகள் தொடர்பாக அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் செல்வபுரம் விவசாயிகள் கூட்டத்தில் தெரிவித்தனர். (4-8-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணலில் இடப்பட்டாலும் தங்கத்தின் நிறம் மங்குவதில்லை. சாணை பிடிக்கப்பட்டாலும் வைரத்தின் பிரகாசம் குறைவதில்லை. ~எம்.இ.இஸ்மாயில்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## உங்கள் உணர்வு கண்டு உள்ளம் பூரித்தோம்

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் கைது செய்யப்பட்டதுதான் தாமதம், தமிழர் தரப்பு கொதித்தெழுந்தது.

என்ன நினைத்தாய் எம் தமிழினத்தை என்ற கர்ச்சிப்புகள் உலகெங்கும் ஒலித்தன.

யாழ்.மாநகர சபை முதல்வர் மணிவண்ணன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார் என்றதும் அமெரிக்கா தனது கவலையை வெளியிட்டது.

கனேடிய மாநகர முதல்வர் தரப்பு கண்டித்தது. இன்னும் வெளியில் பகிரங்கப்படுத்தாமல் சில நாடுகள் இலங்கை அரசிடம் என்ன நடக்கிறது என்று முகச்சுழிப்போடு கேட்டன.

அதன் விளைவு பங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் யாழ்.மாநகர முதல்வரைக் கைது செய்தது என்ற விடயம் நீக்கப்பட்டு, சாதாரண சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டதாகக் கணக்கு முடிக்கப்பட்டது.

எங்கே? பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாநகர முதல்வர் மணிவண்ணன் நீண்டநெடுங்காலம் சிறையில் அடைக்கப்பட்டு விடுவாரோ என்று ஏக்கமடையாமல்; தமிழன் ஒன்றுபட்டு குரல் கொடுத்தால், அஃது இந்த வையகம் எல்லாம் ஒலிக்கும் என்ற நம்பிக்கையோடு நம் தமிழினம் வெகுண்டெழுந்தபோது அதனைத் தாண்டி ஓடுவது கடினம் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொண்டனர்.

இவை ஒருபுறமிருக்க, யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் யாழ்ப்பாண நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது எங்கள் சட்டத்தரணிகள் புடைசூழ்ந்து நின்றதைப் பார்த்தபோது, உள்ளம் பூரித்துக் கொண்டது.

கட்சி அடிப்படைகளை ஒருபுறம் தள்ளி வைத்து விட்டு, எம் தமிழனுக்கு ஒன்றென்றால் விடமாட்டோம் என்பதுபோல ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் எங்கள் சட்டத்தரணிகள் களமிறங்கியதைக் கண்டபோது உள்ளம் பூரித்தது.

அதிலும் ஒருபடி மேலாக, யாழ்ப்பாண மாநகர சபையின் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற போதிலும் சட்டத்துக்கு முரணாக யாழ்.மாநகர முதல்வரைக் கைது செய்யவிடமாட்டோம் என்பதுபோல, சிரேஷ்ட சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஏனைய சட்டத்தரணிகளோடு சேர்ந்து வாதம் செய்ய வந்தார் எனில், எம் தமிழினம் இனத்தின் பேரால் ஒன்றுபட்டு விட்டது என்றுணர்ந்தபோது உள்ளம் பூரித்துக் கொண்டது.

# பாதை எப்படியானது என்பதை தெரிந்து கொண்டுதான் பயணத்தை ஆரம்பித்தேன்

## யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

பாதை எப்படியானது என்பதை தெரிந்து கொண்டுதான் பயணத்தையே ஆரம்பித்தேன். எனக்காக குரல் கொடுத்த அனைவருக்கும் நன்றிகள் என யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் கூறியுள்ளார்.

இது குறித்து நேற்று மாலை அவர் விடுத்துள்ள செய்தி குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

யாழ்.மாநகரை தூய்மையாக பேணும் ஒரு நன்நோக்கில் எம்மால் முன்னெடுக்கப்பட்ட முன்மாதிரியான நடவடிக்கை தொடர்பில் தவறான வியாக்கியானம் செய்து என்னை பொலிஸார் கைது செய்தபோது எனக்காக குரல் கொடுத்த அத்தனை உள்ளங்களுக்கும் நான் சிரம் தாழ்த்தி நன்றிகளை கூறிக் கொள்கிறேன்.

"தூய்மையான நகரம், தூய்மையான கரங்கள்" என்று நாங்கள் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிக்கு அமைவாக நடந்து கொள்வதே யாழ்.மாநகர மக்களுக்கான எனது பணியாகும். அந்த பணியை செம்மையாகவும், முன்மாதிரியாகவும் செய்வதற்கு எடுத்த முயற்சியை மிக தவறாக வியாக்கியானம் செய்து என்னை கைது செய்தார்கள்.

மிக நெருடலான அந்த சூழலில் மக்கள், உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் தலைவர்கள், சட்டத்தரணிகள், தூதுவராலயங்கள், ஊடகங்கள், புலம்பெயர் உறவுகள், நண்பர்கள், ஆதரவாளர்கள் எனக்காக கொடுத்த குரல் எனக்கு ஆறுதலளித்தது மட்டுமல்லாமல் என்னை பிரமிப்பில் ஆழ்த்தியது.

என்னுடைய பயணம் மிக நேர்மையானது, வெளிப்படையானது, மக்களுக்கானது. பாதை எப்படியானது என்பதை தெரிந்து கொண்டுதான் பயணத்தையே ஆரம்பித்திருக்கிறேன். ஆதலால் எந்தவொரு சூழ்நிலையிலும் என்னுடைய பயணம் நிற்கப் போவதில்லை. மக்களுக்கான எனது பயணம் தொடரும்,

எனக்காக குரல்கொடுத்த அத்தனை உள்ளங்களுக்கும், அமைப்புக்களுக்கும், மனநிறைவுடன் சிரம் தாழ்ந்து நன்றி கூறுகிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-3)

# மணிவண்ணன் கைது செய்யப்பட்டமை மக்களை திசை திருப்பும் செயற்பாடு

## எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச

(கொழும்பு)

யாழ்ப்பாண மாநகர முதல்வர் கைது செய்யப்பட்டமையானது மக்களின் கவனத்தை திசைதிருப்பும் செயற்பாடு என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாநகர முதல்வர் ஏதேனும் தமது கடமையின் போது தவறிழைத்திருந்தால் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டிய முறைகள் உள்ளன.

அதனைவிடுத்து அவரை பயங்கரவாதி போல் சித்தரித்து நாட்டில் அரசாங்கத்தினர் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள்.

ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய நபர்கள் இன்னும் அறியப்படாதுள்ளனர்.

எனவே, புதிய அச்சங்களை ஏற்படுவதை தவிர்த்து ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

(ம-3)

# தடை செய்யப்பட்ட மாத்திரைகளுடன் வவுனியாவில் மூன்று பேர் கைது


(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் தடை செய்யப்பட்ட மாத்திரைகளை வைத்திருந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வியாபார நிலையத்தில் தடை செய்யப்பட்ட மாத்திரைகள் இருப்பதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து குறித்த மூவரும் இராணுவப் புலனாய்வு பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிடம் இருந்து தடை செய்யப்பட்ட 100 மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-3)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



## கணவரை நேசியுங்கள் பெண்களே!

❖ நிந்தனைக்காரர்களைக் கண்டிக்காதே. அவர்கள் உங்களைப் பகைப்பார்கள். அறிவுள்ளவனைக் கண்டித்தாலும் அவன் உன்னை நேசிப்பான்.

❖ உன் சகோதரன் உனக்கு எதிராக ஏதாவது செய்திருப்பானேயானால், நீ போய் அவன் தனித்திருக்கையில் அவனுடைய தவறினைக் கண்டித்துச் சொல்.

❖ கருணை உள்ளவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் அவர்களுக்குக் கருணை கிடைக்கும்.

❖ உன்னுடைய கண் தீமையானதாய் இருந்தால், உன் உடல் முழுவதும் இருள் உள்ளதாயிருக்கும். உன்னுள்ளே இருக்கும் ஒளியே இருளாயிருந்தால் இருட்டு எவ்வளவு பெரியதாயிருக்கும்?

❖ கண்கள் உடலின் தீபமாயிருக்கிறது. உன் கண் ஒருமைப்பாடுடன் இயல்பானதாயிருந்தால் உன் உடல் முழுவதும் பிரகாசமுள்ளதாயிருக்கும்.

❖ அன்பையும், நற்காரியங்களையும் தூண்டும்படியாக நாம் ஒருவரை ஒருவர் கவனித்துக் கொள்வோமாக.

❖ இளம்பெண்கள் மனஅடக்கம் பெறவும், தங்கள் கணவரைக் காதலிக்கவும், குழந்தைகளை நேசிக்கவும் [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2021 முதல் 13.04.2022 வரை

## சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**சிம்ம இராசி வாசகர்களே!**

பிறக்கும் புத்தாண்டு குரு பார்வையோடு பிறப்பதால், நினைத்த காரியம் நிறைவேறும் ஆண்டாகவே அமைகின்றது. 9 ஆம் இடத்திற்கு அதிபதியான செவ்வாயும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியான சுக்கிரனும் பரிவர்த்தனை யோகம் பெற்றிருப்பதால், தொழில் வளம் மிகச் சிறப்பாக இருக்கும். பெரிய மனிதர்களின் ஒத்துழைப்போடு புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பொருளாதார நிலை உயரும். புத -ஆதித்ய யோகம் இருப்பதால் மகிழ்ச்சிக்குரிய தகவல் வந்து சேரும் வருடமாக இந்த வாரம் அமையும்.

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் உச்சம் பெற்று, தனலாபாதிபதியான புதனோடு இணைந்திருக்கின்றார். எனவே ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். அரசியல் மற்றும் பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு நல்ல பொறுப்பு கிடைக்கும். சகோதர வர்க்கத்தினர் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். தனவரவில் இருந்த தட்டுப்பாடுகள் அகலும். 'வாங்கியதைக் கொடுக்க முடியவில்லையே, கொடுத்ததை வாங்க முடியவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது விடிவுகாலம் பிறந்துவிட்டது. தடையின்றித் தனவரவு வந்து கொண்டேயிருக்கும். புகழ்மிக்கவர்களோடு இணைந்து புதிய தொழிலைத் தொடங்குவீர்கள்.

10 ஆம் இடத்தில் உள்ள செவ்வாய், சுக்கிரன் வீட்டில் பரிவர்த்தனை யோகம் பெறுகின்றார். தொழில் ஸ்தானம் வலுவாக உள்ளது. ஸ்தம்பித்து நின்ற தொழில் இனி வெற்றி நடைபோடும். வாடிக்கையாளர்கள் வந்த வண்ணமாக இருப்பர். வருமானம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக இருக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். அரசியல் பிரமுகர்களின் ஆதரவு கிடைக்கும். அடுத்தடுத்து நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடந்து கொண்டே இருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திறமைக்கான அங்கீகாரம் கிடைக்கும். ஊர் மாற்றம், இலாகா மாற்றங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தால், அதுவும் நிறைவேறும்.

6 ஆம் இடத்தில் சனி இருக்கின்றார். அதுவும் சொந்த வீட்டில் பலம் பெற்றிருக்கின்றார். 6 ஆம் இடம் என்பது எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றை குறிப்பதாகும். எனவே மறைமுக எதிர்ப்பும் சிறிதளவு கடனும் இருந்து கொண்டே இருக்கும். இதையெல்லாம் தாண்டி, குரு பகவானின் பார்வை உங்கள் இராசியில் பதிவதுதான் யோகம். அந்த குருவைப் பலப்படுத்த வியாழன் தோறும் விரதமிருந்து குரு பகவானை வழிபடுவதோடு, யோகபலம் பெற்ற நாளில் பாக்கிய ஸ்தானாதிபதிக்குரிய தெய்வங்களை வழிபட்டு வாருங்கள்.

### குருவின் வக்கிர இயக்கம்

ஆண்டின் தொடக்கம் முதல் 13.9.2021 வரை, கும்ப இராசியில் அதிசாரகதியில் குருபகவான் சஞ்சரிக்கின்றார். 16.6.2021 முதல் வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். மீண்டும் 14.9.2021 முதல் 12.10.2021 வரை, மகர இராசியில் குருபகவான் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை பஞ்சம -அஷ்டமாதிபதியானவர் குரு. அவர் வக்கிரம் பெறும் பொழுது பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படலாம். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. 6 இற்கு அதிபதி வக்கிரம் பெறுவது நன்மைதான் என்றாலும், 9 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால், தந்தை வழி உறவில் விரிசல்கள் வரலாம். சொத்துக்களை விற்கும் பொழுதும் வாங்கும் பொழுதும் பத்திரங்களில் கையெழுத்திடும் பொழுதும் நன்றாக சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

### குருப்பெயர்ச்சி காலம்

ஆண்டின் தொடக்கத்தில் கும்ப இராசியில் அதிசார கதியில் சஞ்சரிக்கும் குரு பகவான், மீண்டும் வக்கிர கதியில் மகர இராசிக்கு வந்து, 13.11.2021 அன்று முறையாக கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அதன்பிறகு 13.4.2022 இல் மீன இராசிக்கு பெயர்ச்சியாகிச் செல்கின்றார். கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை உங்கள் இராசியிலும் 3, 11 ஆகிய இடங்களிலும் பதிகின்றது.

இராசியைக் குரு பார்ப்பதால், இலட்சியங்கள் நிறைவேறும். நினைத்தபடி வாழ்க்கைப் பாதையில் மாற்றங்கள் ஏற்படும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். அனைத்து முன்னேற்றங்களும் அடுக்கடுக்காக வந்து சேரும். ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். மருத்துவச் செலவுகளில் இருந்து விடுதலை கிடைக்கும். குடும்ப முன்னேற்றத்திற்கு குந்தகம் விளைவித்தவர்கள், உங்களை விட்டு விலகுவர்.

### ராகு-கேது பெயர்ச்சி காலம்

21.3.2022 [illegible] ராகுவும் துலாத்தில் [illegible] சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 3 ஆம் இடத்திற்கு கேதுவும், 9 ஆம் இடத்திற்கு ராகுவும் வருகிறார்கள். 9 இல் ராகு சஞ்சரிக்கும் பொழுது பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினைகள் தீரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த நல்ல முன்னேற்றங்கள் உண்டு. தளராத முயற்சியும் தன்னம்பிக்கையும் உங்கள் நிலையை உயர்த்தும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு உழைத்த உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். புதிய வாகனங்களை வாங்கும் முயற்சியில் இருந்த தடை அகலும். ஆக்கபூர்வமாக சிந்தித்து செயற்படும் நேரம் இது என்பதால் தேக்க நிலை மாறும். திடீர் வரவும் வந்து சேரும்.

3 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் உடன்பிறப்புகளின் ஒற்றுமை பலப்படும். அவர்களின் இல்லங்களில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டுப் புதிய சொத்துக்களை வாங்கும் யோகம் உண்டு. பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். வழக்குகள் சாதகமாக அமையும். 'மூத்த சகோதரர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, அவர்கள் வாயிலாக ஆதாயம் தரும் தகவல் வந்து சேரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் ஒத்துழைப்போடு, புதிய ஒப்பந்தங்களை வரவழைத்துக் கொள்வீர்கள். இழந்த பொறுப்புகள், பதவிகள் கூட சிலருக்கு கிடைக்கும்.




### சனியின் வக்கிர காலம்

12.5.2021 முதல் 26.9.2021 வரை, மகர இராசியில் சனிபகவான் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். 6 இற்கு அதிபதி வக்கிரம் பெறுவது நன்மைதான் என்றாலும் 7 ஆம் இடத்திற்கும் அதிபதியாக சனி பகவான் இருப்பதால் குடும்பத்தில் பிரச்சினைகள் தலைதூக்கலாம். ஒரு சில காரியங்களில் ஏமாற்றங்கள், பண இழப்புகள் ஏற்படலாம். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால், பிரச்சினைகள் உருவாகலாம். பிள்ளைகளால் தொல்லைகளும் செலவுகளும் உண்டாகும். மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் மருந்துகளை உட்கொள்ள வேண்டாம். எதிலும் கவனம் தேவைப்படும் நேரம் இது.

### கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

14.4.2021 முதல் 3.6.2021 வரை, 4.6.2021 முதல் 21.7.2021 வரை மற்றும் 24.10.2021 முதல் 7.12.2021 வரை செவ்வாய் .- சனி பார்வை உள்ளது. இக்காலத்தில் மிகுந்த கவனம் தேவை. திடீர் விரயங்கள் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்கள் திசை மாறிச் செல்லும். வாங்கிய சொத்துக்களால் பிரச்சினைகள் ஏற்படலாம். மனக்கசப்பு தரும் தகவல் உறவினர்கள் வாயிலாக வரலாம். உயர்ந்த மனிதர்களின் பகையையும் உடன் பணிபுரிபவர்களால் உபத்திரவங்களையும் சந்திக்க நேரிடும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சலுகைகள் மறுக்கப்படலாம். வேலைப்பளு கூடும். வேலையை விட்டு விலகும் சூழ்நிலையும் ஒரு சிலருக்கு உருவாகலாம். தெய்வ வழிபாடுகளால் அமைதி காண வேண்டிய நேரம் இது.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டு புதிய வாய்ப்புகள் பலவற்றையும் வரவழைத்துத் தரும் ஆண்டாகவே அமையப் போகின்றது. கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். புதிய திருப்பங்களைச் சந்திக்கும் விதத்தில் குருவின் பார்வை பலம்கொடுக்கப் போகின்றது. எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். உற்றார், உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

தாய் மற்றும் உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். பிள்ளைகளின் கல்யாணக்கனவுகளை நனவாக்குவீர்கள். அவர்கள் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்களும் வெற்றிபெறும். பணிபுரியும் பெண்களுக்கு சம்பள உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். செவ்வாய் -சனி பார்வை காலத்தில், எதையும் யோசித்துச் செய்வது நல்லது.

### வளர்ச்சி தரும் வழிபாடு

வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருபகவானை வழிபடுவதோடு, தட்சிணாமூர்த்தியை யோகபலம் பெற்ற நாளில் வழிபட்டு வந்தால் எல்லா நாட்களும் இனிய நாட்களாக அமையும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலில் மிதந்து...

குறித்த நபர் தனியாக வசித்து வந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை வீட்டின் உட்பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடமியன், கொடிகாமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி.இராமேஸ்வரன் (வயது-41) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு மரண விசாரணை அதிகாரி வருகை தந்து விசாரணையை மேற்கொண்ட பின்னர் சடலம் சாவகச்சேரி வைத்தியசாலை பிரேத அறையில் வைக் கப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள் ளப்பட்டது.

பிரேத பரிசோதனையில் அதிக மது போதையே மரணத்திற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை நாகர்கோவிலைச் சேர்ந்த ஒருவர் குறித்த மதுபானப் போத்தலின் திரவத்தை அருந்திய நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உயிரிழந் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்தே வரணிப் பகுதி யைச் சேர்ந்தவரும் இதே திரவத்தை குடித்தமை அப்பகுதியைச் சேர்ந்தவர் களால் உறுதிப்படுத்தப்பட்டது. (ம-3,60)

## வடக்கில் 32...

வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின் றன.

இதன்படி நேற்றைய தினம் 678 பேருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோத னையில்,

யாழ்.மாவட்டத்தில் 19 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 12 பேருக் கும் (தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்) தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. (ம-3,18,33)

## கொரோனாவால்...

ழந்தோரின் எண்ணிக்கை 596 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## திருநெல்வேலி...

சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

"திருநெல்வேலி பாற்பண்ணை கிரா மம் 14 நாட்களாக கண்காணிப்பு வலய மாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த கிராமத்தில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் பாரதிபுரம் பகுதி யில் 88 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் பாரதிபுரம் தவிர்ந்த ஏனைய பகுதி நாளை திங்கட்கிழமை காலை 6 மணி தொடக்கம் கண்காணிப்பு வலயத் திலிருந்து விடுவிக்கப்படுகிறது" என்றும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் ஆ.கேதீஸ்வரன் கூறினார். (ம-3,33)

## யாழில் இயங்...

பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித் தார்.

புத்தாண்டு கொண்டாட்டத்தின் காரண மாக திரையரங்குகளில் பொதுமக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் சந்தர்ப்பம் அதிக மாகக் காணப்படுவதன் காரணமாக குறி த்த நடைமுறை பின்பற்றப்படவுள்ளதாக வும் தெரிவித்தார். (ம-3,33)

## தென்னிந்தியத்...

அவர் வலம்புரிக்கு அனுப்பி வைத்த கடி தத்தில் தென்னிந்தியத் திருச்சபையின் பெயர் வலம்புரியின் செய்தியில் வெளிவந் தமை முற்றிலும் தவறானது எனத் தெரி வித்துள்ளார்.

இதேவேளை தெல்லிப்பழை யூனி யன் கல்லூரியுடன் முரண்பட்டவர்கள் அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச் சபை என்று தெரியவருவதுடன் இந்தச் சபையினர் 2007ஆம் ஆண்டு தென் னிந்தியத் திருச்சபையில் இருந்து விலகிய வர்கள் என்றும் அறிய முடிகிறது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியு டன் முரண்பட்டவர்கள் என்ற செய்தியில் தென்னிந்தியத் திருச்சபையின் பெயர் வெளிவந்ததால் அச்சபை சார்ந்தவர் களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அசௌக ரியத்துக்காக வலம்புரி தனது மனவருத் தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. (ம-3)

## பிணை வழங்கி...

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாநகர சபை முதல்வர் விஸ்வ லிங்கம் மணிவண்ணன், வெள்ளிக் கிழமை இரவு யாழ்ப்பாணம் நீதி மன்றத் தில் பிணையில் விடுதலை செய்யப்படு வதற்கு முன்னதாகவே அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா, மணிவண்ண னுக்கு ஜனாதிபதி மன்னிப்பு அளிப்பதாகத் தன்னிடம் கூறியதாக ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன், மணிவண்ணன் நீதிமன் றத்தால் பிணையில் விடுதலை செய்யப் படுவதற்கு முன்னராகவே, மணிவண் ணன் பிணையில் விடுதலை செய்யப்படு வார் என்றும் அவர் மீது பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட மாட்டாது என்றும் சாதாரண சட்டத்தின் கீழேயே வழக்கு தொடரப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

அமைச்சரின் இந்தக் கூற்று இந்த நாட்டில் நீதிமன்றங்களும் பொலிஸாரும் பெயரளவில் மட்டுமே இருக்கின்றனவா? என்ற கேள்வியையும் ஜனாதிபதினதும் அவரின் அரசாங்கத்தினதும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்பவே அவை செயற்படுகின்றனவா? என்ற கேள்வியை யும் ஏற்படுத்தி உள்ளது.

அதேவேளை மணிவண்ணன் அரசி யல் உள்நோக்கம் கருதி, வேண்டும் என்றே கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்ற உண்மையையும் அமைச்சரின் கூற்று வெளிப்படுத்தி நிற்கின்றது.

மணிவண்ணனுக்கு ஜனாதிபதி மன் னிப்பு அளித்தது உண்மை என்றால், மணிவண்ணன் ஏதோ தவறு செய்துள் ளார் என்று அர்த்தப்படும். ஆனால், மணி வண்ணன் செய்தது தவறு என்று பொலி ஸாரினால் நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியவில்லை. ஆகவே, ஜனாதிபதி என்ன அடிப்படையில் மணிவண்ண னுக்கு "மன்னிப்பு" வழங்கியுள்ளார்?

அமைச்சர் ஏற்கெனவே கூறியது போலவே, மணிவண்ணன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் அவர் மீது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவில்லை.

ஆனால் அதேவேளை, யாழ்ப்பாண நீதிமன்றத்தில் பொலிஸார் மற்றும் மணிவண்ணன் தரப்பு வாத பிரதிவாதங் களைக் கேட்டு அறிந்த பின்னரேயே மணி வண்ணன் பிணையில் விடுதலை செய் யப்பட்டதாக அறிகின்றேன்.

ஆனால், மணிவண்ணனுக்கு ஜனாதி பதியினால் மன்னிப்பு வழங்கப் பட்டுள்ளதாக அமைச்சர் தேவானந்தா கூறியிருப்பதும் மணிவண்ணன் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப் படுவதற்கு முன்னதாகவே அவர் பிணையில் விடுதலை செய்யப்படுவார் என்றும் பொலிஸார் இவ்வாறுதான் நடந்து கொள்வார்கள் என்றும் அமைச்சர் முன்னதாகவே கூறியிருப்பது, இந்த நாட்டில் பொலிஸ் திணைக்களமும் நீதிமன்றங்களும் எந்தளவுக்குச் சுயாதீனத்தை இழந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதற்கான ஆதாரமாகக் காணக் கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான செயல்களை பொலிஸ் திணைக்களத்தையும் நீதிமன்றங்களையும் அவமதிக்கும் செயற்பாடுகளாகவும் கொள்ள முடியும்.

இதுதொடர்பில், ஜனாதிபதியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அதிகாரத்தில் உள்ளவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்பவே பொதுமக்கள் இம்சைப் பட போகின்றார்கள் என்றால் நீதிமன்றங்கள் எதற்காக? பொலிஸார் மக்கள் பொலிஸாரா, ஜனாதிபதியின் கையாட்களா? விடை வேண்டும் என்றுள்ளது. (ம-3,33)

## திருநெல்வேலி...

மதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி திருநெல்வேலி சந்தையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட வர்த்தகர்கள், மற்றும் பணியாளர்கள் கொண்ட வர்த்தக நிலையங்கள் தவிர்த்து, ஏனைய சகல வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தை வியாபாரிகள் இன்று காலை தமது வியா பார நடவடிக்கைகளை ஆரம்பிக்க அனு மதிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## பாக்கு நீரிணை...

கடப்பதற்கான பயணத்தை நேற்று சனிக் கிழமை அதிகாலை தலைமன்னாரில் இருந்து ஆரம்பித்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த நீச்சல் வீரர் ஒருவரின் 50 வருடங்கள் பழமையான கின்னஸ் சாதனையை முறியடிக்கும் நோக்கில் இலங்கை விமானப் படையைச் சேர்ந்த நீச்சல் வீரர் ரோசன் அபேசுந்தர நீச்சல் பயணத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிய வருகின்றது.

குறித்த வீரர் இன்று ஞாயிற்றுக்கிழமை மீண்டும் தலைமன்னாரை வந்தடைவார் என தெரிவிக்கப்படுகின்றது. (ம-3,285)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 10/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1112
வெற்றி இலக்கங்கள்
கன்னி 4 3 2 9 6 0
கும்பம் 0 2 9 4 5

மெகா பவர்
திகதி 10/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0813
B 03 04 32 39 79

மஹஜன சம்பத
திகதி 2021/04/10
சீட்டிழுப்பு இலக்கம் 4453
A 4 0 9 6 5 5

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 10.04.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2748
U 06 07 12 60

தன நிதானய
திகதி - 2021.04.10
சீட்டிழுப்பு இலக்கம் - 490
F 06 28 36 57

சீட்டிழுப்பு வாரம் 068
சீட்டிழுப்பு திகதி 10.04.2021
வெற்றி இலக்கங்கள் 18 30 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,695,060

அத கோடிபதி
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1249
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 10.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 127,443,010
வெற்றி இலக்கங்கள் 17 53 66 76 Q

சனிதா
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3579
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 10.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,053,100
வெற்றி இலக்கங்கள் 02 04 13 73 U

ராசி
சுப்பர் ஜக்பொட் 20,000,000/=
வெற்றி இலக்கங்கள் 02 17 27 49
மிதுனம்
திகதி: 10.04.2021
வெற்றி வாரம்: 3130
வர்ணம்: இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,141,120

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1423
நிறம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 10/04/2021
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் U 23 25 33 37
அடுத்த சுப்பர் ஜக்பொட 51,615,707/=

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 426
திகதி 10.04.2021
வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 02 12 25
விதி எண் 6
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 12,191,308
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

FALC
FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச் வகுப்புக்கள்

- இலகுவாக எழுத, வாசிக்க சரியான உச்சரிப்புடன் கதைக்க இலகு வழியில் கற்பிக்கப்படுகிறது.
- சர்வதேச டிப்ளோமா வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ( DELF A1, A2, B1 & B2 )
- எம்முடன் இணைவோர் 6 மாத காலத்தில் சரளமாக பிரெஞ்ச் பேசுகிறார்கள்.
- ஆசிரியர் V. ஜெகன் (Trained in France - 2007 ) ( 15 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமிக்க பயிற்றப்பட்ட ஆசிரியர் )
- 6 மாத காலத்தில் Certificate மற்றும் Diploma ஐப் பெற்றுக்கொள்ளமுடியும்.
- 2006 தொடக்கம் இன்று வரை 1600 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் எம்மிடம் French கற்றுள்ளார்கள்.

இல. 19, பலாலி வீதி, ஆரியகுளம்,
021 221 7781, 077 978 9456

இல. 23 / 2, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டிக்குளி.
021 221 9497, 076 937 0456
(C-1945)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

வாடகைக்கு
யாழ். நகருக்கு அருகில் பிரதான வீதியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் நல்ல அமைதியான சூழலில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு இல
077 162 2760
(6541)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-1895)
எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம், புத்தூர், கோப்பாய், நெல்லியடி, கொடிகாமம், மானிப்பாய், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், கிளிநொச்சி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி
(C-1925)
0768226240 DHL

அன்னா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-1927)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

கெட்டி மேளம்
சர்வதேச திருமண சேவை
தரகர் கட்டணம் இல்லை
உங்கள் வீட்டில் விரைவில் கெட்டி மேளம் ஒலிக்க இன்றே அழையுங்கள்!

| மணமகள் தேவை | | | | மணமகன் தேவை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 02 | 1995 | கட | Qatar | 01 | 1994 | சிம் | D.Officer |
| 03 | 1993 | சி | Sales Rep | 05 | 1984 | மி | S.Executive |
| 04 | 1982 | து | Project Officer | 07 | 1993 | மி | Radiologic |
| 06 | 1990 | சி | HND in English | 10 | 1991 | மீ | Q.surveyor |
| 08 | 1994 | கும் | Australia | | | | |
| 09 | 1990 | கும் | Doctor/MBBS | | | | |

(6536)
CALL - 0758475753, 0213147463
keddimelaminfo@gmail.com
keddimelam.com
258,Thiruganasamanther Street,Trincomalee,Srilanka
REGISTERED


# மரண அறிவித்தல்



## திருமதி பிரியதர்சினி ஈஸ்வரானந்தன்

**பிறப்பு : 13.06.1942 இறப்பு : 10.04.2021**

மன்னாரைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிரியதர்சினி ஈஸ்வரானந்தன் நேற்று (10.04.2021) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - டெய்சி தம்பதியரின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான சம்பந்தர் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஈஸ்வரானந்தனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் நகுலேஸ்வரியின் மைத்துனியும் காலஞ்சென்ற விக்கினராஜா (விக்கி) மற்றும் தயாளினி (தயா - USA), மகிந்தன் (பனை அபிவிருத்திச் சபை - யாழ்ப்பாணம்), மகேந்திரன் (கண்ணா - கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்), ஜனகன் (ஜனா - பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் உதயதாஸ் (USA), ஹம்சா (ஆசிரியை - நெல்லியடி மத்திய கல்லூரி), ஜமுனா (ஆசிரியை - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் லக்சிகா, கம்சிகா, சஜானி, அபிநயா, கேசரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(11.04.2021)* ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் நாவலர் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 528, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
077 501 8189
077 390 5115
077 630 4334
(6551)
தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka


வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 304


Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 11.04.2021 தொலைபேசி : 021 222 3378





## கைதின் மர்மம் என்ன?









## வெல்லப்போவது யார்?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## அந்தக் காலச் சமயமும் இந்தக் காலச் சமயமும்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

மத்திய அமைச்சுக்களில் செயலாளர் பதவியையும் இதர உயர் பதவிகளையும் வகித்த சிவஞானசோதி அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம். அவரின் மறைவு எமக்குப் பேரிழப்பாகும். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவருக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் மீண்டும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சில நிமிடங்கள் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** எங்கட யாழ்ப்பாண மாநகர முதல்வர் மணிவண்ணனைக் கைது செய்தது இன அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்ற செயலாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்க வேணும் என்றார்.

**மூப்பர்:** விதானையார் கூறியதை ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

**விதானையார்:** ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அரசாங்கம் குழம்பிப் போய் இருக்குது போல.

**சிறாப்பர்:** ஏன் விதானையார் அப்படிச் சொல்லுறியள்.

**விதானையார்:** பின்ன, முதல்வர் மணிவண்ணனைக் கைது செய்யிற விடயத்தில அரச தரப்பிட்ட ஒரு நிதானம் இருக்கல்ல என்பதைப் புரிந்து கொள்ள முடியுது.

**சாத்திரியார்:** என்ன இருந்தாலும் மணிவண்ணனின்ர அரசியல் பக்கத்திற்கு காலசூழல் நல்ல களம் அமைத்துக் கொடுத்திருக்குது. இனி அவற்ற அரசியல் செல்வாக்கு ஏறுமுகம்தான்.

**விதானையார்:** அது சரி யாழ்ப்பாண நகரத்தில பூட்டப்பட்ட கடைகளில சில கடைகள் மட்டும் தான் திறக்கப்பட்டிருக்குது. ஏனைய கடைகளின்ர நிலைமை என்னவாம்?

**மூப்பர்:** கொரோனா முடிய கடையைத் திறக்க விடுவினமாக்கும்.

**பண்டிதர்:** ஓமோம், தென்பகுதியைத் தலைமையகமாகக் கொண்டு யாழ். நகரத்தில் இயங்குகிற வர்த்தக நிலையங்களை பூட்டாமல் விட்டது ஏன்? எண்டல்லோ யாழ்ப்பாண வர்த்தகர்கள் கேள்வி எழுப்புகினம்.

**சிறாப்பர்:** அதெண்டால் உண்மைதான். யாழ்ப்பாணத்தில இயங்குகிற சிறப்பு வர்த்தக நிலையங்களைப் பூட்டாமல் விட்டதற்குள் யாழ்ப்பாண வர்த்தகர்களின்ர வயிற்றில அடிக்கிற உள்நோக்கம் இருக்கிறதாகப் பரவலாகப் பேசப்படுகுது.

**வாத்தியார்:** எதைச் செய்தாலும் அதில ஒரு நீதியும் தர்மமும் இருக்கவேணும். அதைவிட்டிட்டு ஒரு பக்கம் சார்ந்து செயற்பட்டால் அதனை எவரும் கண்டு கொள்ளுவினம் தானே!.

**மூப்பர்:** தமிழ்-சிங்களப் புத்தாண்டிலதான் கொஞ்ச வியாபாரம் நடக்கும். நாசமாப்போன கொரோனா அதையும் விட்டுவிடவில்லை. என்ன செய்யிறது எங்கட வர்த்தகர்களின்ர கஷ்ட காலம் எண்டுதான் சொல்ல வேணும்.

**பண்டிதர்:** தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில நடக்கிற சம்பவம் என்ன மாதிரியாகப் போகுது.

**வாத்தியார்:** அதை யேன் கேட்கிறியள். மாணவர்களைத் தாக்கிற அளவில சமய அமைப்புகள் மதவெறி கொண்டு இயங்குகினம்.

**கங்காணி:** என்ன மாணவர்களைத் தாக்கினவியளோ?

**வாத்தியார்:** ஏன் கங்காணியார் கொரோனாவோட பேப்பர்களும் வாசிக்கிறதில்லைப் போல.

**பண்டிதர்:** அந்தக் காலத்தில மிஷனரிமார் பாடசாலைகளை அமைத்து கல்விப் பணி செய்தினம். நிலபுலங்களை வாங்கிப் பாடசாலைக்குக் கொடுத்தினம். ஆனால் இப்ப பாடசாலைக்கு வழங்கின காணிகளை பறிக்கிறதுக்கெண்டு ஒரு கூட்டம் அலையுது. இதுதான் அந்தக் காலச் சமயத்திற்கும் இந்தக் காலத்துச் சமயத்திற்கும் உள்ள வித்தியாசம்.

**சாத்திரியார்:** என்ன இருந்தாலும் மாணவர்களைத் தாக்குகிற அளவுக்கு நிலைமை போயிருக்கக்கூடாது. சமயவாதிகள் மாணவர்களைத் தாக்குகிறது என்பது மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சேவைக்குக் களங்கத்தை ஏற்படுத்துகிறதாகத்தானே அமையும்.

**விதானையார்:** பாடசாலைகளுக்குத் தான் காணி கட்டடம் அவசியம். எனவே சம்பந்தப்பட்ட மிஷனரியினர் பெருந்தன்மையோடு நடந்து கொள்ளவேணும் எண்டு ஆலடியில ஒரு கோரிக்கையை முன்வைப்பம். விதானையார் விசுவலிங்கம் முன்வைத்த கருத்தை ஆலடியின் அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டனர். அதனோடு ஆலடியில் சில நிமிடம் நிசப்தம் நிலவியது. நிசப்தத்தைக் கலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:** கோப்பாய் கல்வியியல் கல்லூரியில தங்கவைக்கப்பட்டுள்ள கொரோனாத் தொற்றாளர்களுக்கான கவனிப்பு மிக மோசமாக இருப்பதாக அங்க தங்கியிருக்கிறவர்கள் தங்கட உறவினர்களுக்குக் கூறிக் கவலைப்பட்டிருக்கினமாம்.

**சிறாப்பர்:** அதென்ன கிளிநொச்சியில கொரோனாத் தொற்றாளர்களை நல்ல முறையில கவனிப்பதாக அங்க தங்கியிருந்த யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் கூறியிருக்கிறார்.

ஆனால் கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் இருக்கிற கொரோனாத் தொற்றாளர்களுக்கு அடிப்படை வசதிகள் கூடச் செய்து கொடுக்கப்படவில்லை என்றால் அது பிழைதானே.

**வாத்தியார்:** இது விடயத்தில சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேணுமெண்ட தீர்மானத்தை ஆலடியில நிறைவேற்றுவம். இவ்வாறு வாத்தியார் கூற, குறித்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

சாத்திரியார் சதாசிவம் எழும்பும்போது; பிறக்கின்ற பிலவ தமிழ்ப் புத்தாண்டு நாட்டில் அமைதியையும் சாந்தியையும் தரட்டும்.

எல்லோருக்கும் எங்கட புத்தாண்டு வாழ்த்துக்கள் எனக் கூறினார்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகம் சன்னதமாடியது பெற்றோரை இழந்த மூன்று பிள்ளைகளும் நிர்க்கதியாய்

உச்சிப் பொழுதின் வெப்ப உக்கிரம் வலுக்கொண்டு வதைத்த வண்ணம் இருந்தது. மனைவியைக் கொலை செய்துவிட்டு குடும்பத் தலைவரும் தற்கொலை செய்து கொண்டுள்ளார். அதனால் அவர்களது மூன்று பிள்ளைகளும் நிர்க்கதியாகியுள்ளனர் என்ற செய்தி சித்திரை மாதம் முதலாம் திகதி இடியாய் விழுந்தது. காலை எழுந்த தாய் வீட்டுப் பணிகளை முடித்தபின் ஆறு வயதுச் சிறுவனுக்கு தலைவாரி ஆடை அணிவித்துப் புத்தகப்பையும் கையில் கொடுத்து பாடசாலைக்குப் போய்வா என அன்புடன் வழியனுப்பி வைக்கிறாள்.

காலை பாடசாலை சென்ற ஆறு வயதுச் சிறுவன் வீடு வருகின்றான். பசியும் தாகமும் அவனை வாட்ட வீடு சென்று அம்மாவிடம் உணவு உண்டு பசி தீர்க்கலாம் என்ற எண்ணத்துடன் வந்தவனுக்கு ஏமாற்றம். தாய் உணர்வற்ற நிலையில் தரையில் சாய்ந்து கிடக்கிறாள் உயிர்பிரிந்து. மகனைக் கண்ட தந்தை எதையும் வெளிக்காட்டாமல் வந்த மகனிடம் "ஒரு போயிலைத்துண்டு வாங்கி வா" என அனுப்பி வைக்கிறார். எதுவுமே புரியாத பாலன் பறந்து செல்கிறான் கடைக்கு. சந்தர்ப்பத்தை எதிர்பார்த்த தந்தை தன்னையும் மாய்த்துக்கொண்டார். கடைக்குச் சென்று வந்த சிறுவன் தந்தையைக் காணாமல் தேடுகிறான். தூக்கில் தொங்கிய தந்தை, தரையில் கொலையுண்டு கிடக்கும் தாய். இருவரையுமே இழந்த நிலையில் மூன்று பிள்ளைகள்.

சந்தேகமும் வன் முறையும் சூழ்ந்த குடும்ப வாழ்வு அநாதையாக்கியது அந்த மூன்று குழந்தைகளையும். சித்திரை மாதம் முதலாம் திகதி அனைவரின் காதுகளிலும் இந்தத் துயரச் செய்தியே விழுந்தது.


## யார் அந்த சிவஞானம் குகனேஸ்வரி?

1985 ஆம் ஆண்டு தைமாதம் 22 ஆம் திகதி பிறந்த இவள் 4 ஆண் சகோதரர்களுடனும் 6 பெண் சகோதரிகளுடனும் கூடப்பிறந்தவள். ஏற்கனவே தந்தையை இழந்து தவித்தவள். மூன்று பிள்ளைகளின் தாயான இவள் பிள்ளைகளை வளர்ப்பதிலே மிகவும் பாடுபட்டவள். அடிக்கடி கணவரினால் உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டவள். குடும்ப வன்முறை காரணமாக பிள்ளைகளைப் பரந்தன் சிவபுரத்திலிருந்து வட்டக்கச்சிக்குக் கொண்டு வருவதுமே இவளது நீண்ட வாழ்க்கையாக இருந்தது. பிள்ளைகளைப் பற்றி கனவுகளைச் சுமந்த தாயவள் கணவரினால் மூக்கு, வாய் பொத்தப்பட்டு நெரித்துக் கொல்லப்பட்டாள்.

## யார் இந்த வேலாயுதம் சிவஞானம்?

1982 ஆம் ஆண்டு தை மாதம் 23 ஆம் திகதி பிறந்த இவருக்கு ஒரு ஆண் சகோதரரும் இரண்டு பெண் சகோதரிகளும் உள்ளனர். கூலி வேலையை வழக்கமாய்ச் செய்துவந்தவர். ஆரம்ப காலங்களில் குடும்பத்தில் ஒற்று மையாகவும் அன்பாகவும் நடந்து வந்தவர். மனைவி மீது கொண்ட தேவையில் லாத சந்தேகம் காரணமாக தனது மனைவியின் உயிரைப் பறித்து தன்னுயிரையும் மாய்த்துக் கொண்டார்.

## நடந்தது என்ன?



## குகனேஸ்வரிக்கு என்ன நடந்தது?

இவர்களின் குடும்பத்தில் ஒரே பிரச்சினை. மனைவிமீது கணவர் தீவிர சந்தேகம். 3ஆம் மாதம் 31 ஆம் திகதி பிரதேச செயலகத்திலிருந்து சகோதரிக்கு போன் வந்தது. உங்கட அவர் 4500 தந்தவர் வந்து எடுத்துக்கொண்டு போங்கோ என்று. குடும்பத்தில் அடிக்கடி தகராறு காரணமாக ஒவ்வொரு மாதமும் பிரதேச செயலகத்தில் ஐயாயிரம் ரூபா கட்ட வேண்டும் என்று பணிக்கப்பட்டது. ஆனாலும்அவர்இதுவரை காலம்பங்குனி மாதம் மட்டும்தான் கட்டியிருந்தார். 4500 ரூபாயைக் கட்டிவிட்டு 500 பஸ்ஸ°க்கு தேவையென்று வாங்கி அதிகம் குடித்துவிட்டு கூலி வேலைக்குப் போயிருக்கிறார்.

தங்கச்சி அந்த 4500 ரூபா வையும் பிரதேச செயலக பெண்கள் பிரிவில் எடுத்துக்கொண்டு பிள்ளைகளுக்கு சோற்றுப் பார்சலும் மீனும் மரக்கறிகளும் வாங்கி வந்தா. நடந்து வரும் போது தங்கச்சியைக் கண்ட வேறொரு பெண் தங்கச்சியின்ர புருசனுக்கு போன் பண்ணி உன்ர மனுசி இதால போறாள் என்று தகவல் கொடுக்க அவரும் சந்தேகப்பட்டு வேலைத்தளத்திலிருந்து வீட்டுக்கு வந்து மலசலகூடத்திற்கு மேலே ஏறி ஒளித்துப் படுத்திருந்தார். தங்கச்சி வந்து உடுப்பு மாற்ற அறைக்குள் நுழைய தங்கச்சியின்ர புருசன் படபடவென்று மலசல கூடத்திலிருந்து இறங்கி மூக்கு, வாயைப் பொத்தி தொண்டையை நெரித்துக் கொலை செய்தார். தங்கச்சி உடுப்பு மாற்றக் கழற்றிய சட்டைகள் கீழே கிடந்தன. தங்கச்சி அதிகம் கொடுமைப்படுத்தப்பட்டாள். பிள்ளைகளை மாறிமாறி அங்குமிங்கும் என்று நாய் காவிச் செல்வது போல காவி வருவாள். ஒழுங்கா காலைச் சாப்பாடுகூட சாப்பிட வழியில்லை. கடும் கஷ்டம். ஆனாலும் காட்டிக்கொள்ளமாட்டாள். பலமுறை எங்களுக்கு தனக்கு நடக்கும் கொடுமை பற்றிச் சொல்லியிருந்தாள். நாங்கள் அவற்றை தங்கச்சியின்ர புருசனிடம் கேட்டால் அவர் கதையால எங்களை மடக்கிப் போடுவார். அப்படியொன்றும் நடக்கவில்லை. நானேன் அப்படிச் செய்யிறன் என்பார்.

கணவரின் அதீத சந்தேகம் தான் கட்டிய மனைவியையே கொலை செய்ய வைத்தது. கணவரின் சந்தேகத்திற்கு வெறுமனே மனைவி மட்டும் காரணமா? இல்லை சூழ்ந்திருக்கின்ற சிலரின் பிழையான பார்வைகளும் பிழையான தகவல்களுமே சந்தேகத்தை வசைப்படுத்த வைத்தது. கணவர் கூலி வேலைக்குச் சென்றவர். அங்கு அவருக்கு மூன்று தடவைகள் தகவலாளர்களிடமிருந்து அழைப்பு வந்தது. அதன் பின்னரே வேலைத்தளத்தைவிட்டு மனைவியைக் கண்காணிக்கச் செல்கின்றார். உறுதியான தகவலா? நம்பகத்தன்மையுடையதா? அடுத்தவரின் கதைகேட்டு மனைவியைச் சந்தேகப்படலாமா? மனைவிக்கும் எனக்குமிடையிலான சந்தேகத்தை எப்படி நீக்கலாம் அல்லது எப்படி குறைக்கலாம் என்று சிந்தித்து ஆராயாமலே எடுக்கப்படுகின்ற முடிவுகள் இப்படியான ஒரு விபரீத முடிவுகளையே தரும்.

## சிவஞானத்திற்கு என்ன நடந்தது?

மனைவிமீது சந்தேகம் கொண்ட கணவன் மனைவியைக் கொலை செய்து விட்டு கொலை செய்த அறையில் பாய் விரித்து அதில் மனைவியைப் படுத்தி அதன் மேல் போர்வையால் போர்த்தி மூடிவிட்டார். மனைவிக்கு இப்படி நடந்து போட்டுதே என்று பதகளித்திருந்த வேளை பாடசாலைவிட்டு நண்பகல் 12 மணியளவில் ஆறுவயதுச் சிறுவன் வீடு வருகின்றான். வந்த மகனிடம் இருபது ரூபாவைக் கொடுத்து தனக்கு ஒரு போயிலைத் துண்டு வாங்கிவரும்படி சொல்கின்றார். சிறுவனும் காசை வாங்கிக்கொண்டு கடைக்குச் செல்கிறான். கடைக்காரரிடம் காசை நீட்டி போயிலை தரும்படி கேட்கிறான். கடைக்காரரோ இந்த இருபது ரூபாய் காசு கிழிஞ்சு கிடக்குது. வேறு காசு கொண்டு வாங்கோ என்று திருப்பி அனுப்பி விடுகிறார். இந்த நேரத்தில் தனது மனைவியைக் கொலை செய்த அறையில் தானும் தூக்கிட்டு தனதுயிரை மாய்த்துக் கொண்டார். பசியோடும் தாகத்தோடும் வந்த சிறுவன் தந்தையார் கடைக்குப்போகும் படி பணித்ததற்கிணங்க கடைக்குச் சென்றுவிட்டு வீட்டுக்கு வந்து அப்பா... அப்பா... என்று அழைக்கின்றான். அப்பாவைக் காணவில்லை. ஒருவாறு ஒரு அறையில் தாயையும் தந்தையையும் காண்கிறான். தாய் தந்தை பற்றிய தகவல்களை அயல்வீட்டாருக்கு ஓடிச்சென்று "அம்மா நித்திரையாக் கிடக்கிறா, அப்பா தூக்கில தொங்கிறார்" எனத் தாயார் இறந்ததைக்கூட உணர்ந்து கொள்ள முடியாத அவனது பருவம். அயலவர்கள் கூடி பரந்தன் சிவபுரத்தில் அமைந்துள்ள சம்பவ வீட்டிற்கு விரைந்தனர். அயலவர்கள் திகைத்து நின்றனர் அவர்களது சடலத்தைக் கண்ட போது.

## முட்டாள்தினத்தில் நடந்ததனால் உறவினர்கள் நம்பவில்லை

அயல் வீட்டாரினாலும் ஏனையவர்களினாலும் கொலைச்சம்பவத்தை உறவினர்களுக்குத் தெரியப்படுத்தியபோது அவர்கள் யாவரும் நம்பவில்லை. ஏனெனில் அன்றையதினம் முட்டாள்தினமாக இருந்த காரணத்தினால் நம்பவில்லை. பகிடிக்குச் சொல்கிறார்கள் என்று நினைத்தார்களாம்.

தாய் தந்தையை இழந்து தவிக்கும் கிருசிகா (வயது-16), கலைக்குமரன் (வயது-13), கபிசனன் (வயது-6). இந்த மூன்று பிள்ளைகளின் நலனுக்காக யார் உதவப் போகிறார்கள். இந்தப் பிள்ளைகளின் மனவடுக்களை யார் நிவர்த்தி செய்யப் போகின்றார்கள். அம்மா அப்பா இருக்கின்றார்கள் என்ற தைரியத்துடன் வாழ்ந்தவர்களுக்கு மீண்டும் நம்பிக்கையை கட்டியெழுப்ப இந்தச் சமூகம் என்ன ஏற்பாடுகளைச்செய்யப்போகின்றது.

மனைவியைக் கொலைசெய்த கணவன் மதுபாவனை பாவித்திருந்தார். அளவற்ற போதை இவருக்கு உத்வேகத்தைக் கொடுத்தது. மூன்று பிள்ளைகளின் வாழ்வியல் நகர்வு எப்படி அமையப் போகின்றது என்பதை எண்ணும் போது பயம்தான் விடையாயிருக்கிறது.

கொலைகளுக்கும் தற்கொலைகளுக்கும் சுதந்திரம் அதிகரித்துவிட்டன. அதனால் சுடுகாடாகிப் போகின்றதே எம் தலைமுறையின் வாழ்வுப் பயணம்.


ஜெயம் ஜெகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## மூன்று மீன்கள்



'வினோதமாக இருக்கிறது. மீன்கள் தரையில் எல்லா இடங்களிலும் தாவிக் குதித்து விழுகின்றன' என யோசனை செய்தான் மீனவன்.

அந்தப் பாதி புத்திசாலியான இரண்டாவது மீன் மூச்சை இறுக்கிக் கட்டுப்படுத்த மறந்து விட்டது. சுவாசத்துடன் மீன் உயிருடன் இருப்பதைப் பார்த்து மீனைத் தன் கூடைக்குள் போட்டுக் கொண்டான் மீனவன்.

தன் முன்னால் தரை யில் வந்து விழும் மீன்களைப் பற்றி யோசித்துக் குழம்பிப் போயிருந்த மீனவன், தண்ணீருக்குள் உற்றுப் பார்க்கத் திரும்பினான். தனது குழப்பத்தில், கூடையை மூடாமல் விட்டிருந்தான் மீனவன்.

அதை உணர்ந்த அரை புத்திசாலியான மீன், தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, கூடையை விட்டு நழுவி வந்து, தண்ணீருக்குள் விழுந்து புத்திசாலியான மீனைத் தேடிப் பிடித்து அதன் பின்னால் மூச்சு வாங்கிப் பதுங்கிக் கொண்டது. மூன்றாவது முட்டாள் மீனோ இதை எதையுமே புரி ந்து கொள்ளவில்லை.

முதல் மீனும், இரண்டாவது மீனும் மூச்சை அடக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், மூன்றாவது மீன் எதையும் சரியாகக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"உங்களுக்கு மிக்க நன்றி. இப்போது நான் புரிந்து கொண்டு விட்டேன்" என்று சொல்லி விட்டு தண்ணீரை விட்டுத் தாவிக் குதித்து மீனவனின் பின்னால் போய் விழுந்தது மூன்றாவது மீன்.

முதலிரண்டு மீன்களையும் இழந்துவிட்ட மீனவன் இப்போது வந்து விழுந்த மீனுக்கு மூச்சுத் துடிப்பு இருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் அம் மீனைத் தூக்கிக் கூடைக்குள் போட்டு விட்டான்.

மீனவன் சளைக்காமல் வலை யைக் குளத்துக்குள் மீண்டும் மீண்டும் வீசியும் முதலிரண்டு மீன்களும் வலையில் சிக்காமல் நீரின் அடியாழத்துக்குள் போய்விட்டன. மூன்றாவது மீன் கிடைத்தவுடன் கூடையை எச்சரிக்கையுடன் இறுக மூடி வைத்திருந்தான் மீனவன்.

கடைசியாக வலையில் மீன்கள் மாட்டாததைக் கண்ட மீனவன் தனது முயற்சியைக் கை விட்டவனாய் கூடையைத் திறந்தான். உள்ளிருந்த மீனுக்கு சுவாசம் நின்றுவிட்டதை உணர்ந்த மீனவன், தான் வளர்க்கும் பூனைக்கு இரையாக அதை வீட்டுக்கு எடுத்துச் சென்றான். (முற்றும்)

# மகாபாரதம்




விதுரர் உடன் வனத்திற்குச்சென்று பாண்டவர்களுடன் சேர்ந்திருந்தார். செய்தி அறிந்த பீஷ்மர் திருதராட்டிரனிடம் சென்று " விதுரரை நீ காட்டுக்கு அனுப்பவில்லை. அறத்தை நாட்டை விட்டு அனுப்பி விட்டாய். இனி அஸ்தினாபுரத்தில் இருள் சூழும்"என்றார்.

திருதராட்டினன் மீண்டும் நாட்டுக்கு வரச் சொல்லி அழைப்பு அனுப்ப விதுரர் திரும்பினார். விதுரர் காடு சென்று திரும்பியது அறிந்த துரியோத னன் அவர்கள் ஏதோ சமாதான முயற்சியில் ஈடுபடுவதாக எண்ணி திருதராட்டினிடம் சென்று "பாண்டவர்கள் இங்கு திரும்பி வந்தால் நான் தற்கொலை செய்து கொள்வேன்" என்றான்.

அப்போது வியாசர் தோன்றி திருதராட்டிரனிடம் "துரியோதனனின் தீய செயல்களை தடுத்து நிறுத்தாவிடின் பேரழிவு ஏற்படும் என எச்சரித்து மறைந்தார்.

மைத்ரேய மாமுனிவர் காட்டில் சந்தித்தார். சூதாட்டத்தால் தான் இந்த வினை என உணர்ந்தார்.

பீஷ்மர், விதுரர், துரோணர், கிருபர் ஆகியோர் இருந்தும் இந்த கொடுமை எப்படி நேர்ந்தது என வியந்தார். மனம் வரு ந்தினார்.

நாடு சென்று துரியோதனனை சந்தித்து அவனை வன்மையாகக் கண்டித்தார். ஆனால் துரியோதனனோ அவரை எதிர்த்து பேசினான். கோபமுற்ற முனி, "பீமனால் மாண்டு தரையில் கிடப்பாய். இது உறுதி" என்றார்.


துவாரகையில் கண்ணனுக்கு வனம் சென்ற செய்தி எட்டியது. அவர் காட்டுக்கு வந்து ஆறுதல் சொன்னார். "பகைவரிடம் சத்திரியர் இப்படி அடங்கிக் கிடப்பதா. அவர்களிடம் மோதி அழித்திட வேண்டாமா?" எனச் சகோதரர்கள் எண்ணினர்.

திரௌபதியும் இக் கருத்தைக் கொண்டிருந்தாள். ஆனால் தருமர் தாம் கொண்ட கொள்கையில் இருந்து மாறுபட விரும்பவில்லை.

"உயிர் போவதாய் இருந்தாலும் சத்தியத்திலிருந்து பிற ழப் போவதில்லை. பெரியப்பாவின் கட்டளையை 13 ஆண் டுகள் நிறைவேற்றியே தீரவேண்டும்" என தம்பியரிடம் உறுதியாகக்கூறினார்.

நிபந் தனைக்குரிய காலம் முடிந்தபின் என்ன செய்வது எனத் தீர்மானிப்போம்" என அவர்களை அமைதிப்படுத்தினார். இத்துடன் சபா பர்வம் முற்றிற்று. (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



### கொரோனா யாழ்ப்பாணத்தில் எல்லை கடந்து தாண்டவமாடுகிறதே என்ன செய்ய சொல்லுங்கள்?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**யாழ்-மாநகர முதல்வர் மணிவண்ணன் கைது என்னத்தைச் சொல்கிறது வியா சரே?**

தமிழினம் ஒன்றை மட்டும் புரிந்துகொள்ள வேண்டும். இனி இந்த ஜென்மத்தில் தமிழனத் திற்கு உரிமைகள் தரப்படாது என்பதே அது

தமிழினம் என்ன செய்தாலும் அதை பேரி னவாத அரசு கழுகுக் கண்கொண்டு பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.

தமிழினத்தால் மேற்கொள்ளப்படும் எதையும் பயங் கரவாதம் என்ற காயை நகர்த்தி அந்த இன த்தை மீளவிடாத செயற்பாடு நடந்து கொண்டே இருக்கும். இதைப் புரியாத வரை எதுவும் நடக்காது அவ்வளவுதான்.

**நேதாஜி — வதிரி**

**மணிவண்ணன் விடுதலைக்காக ஒன்று பட்டவர்கள் அரசியல் கைதிகளின் விடு தலைக்காகவும் ஒன்றுபட்டால்?**

ஒன்றுபடவேண்டும். ஒன்றுபட்டால் ஏதும் நன்மை கிட்டும்தான்.

ஆனால் அரசியல் கைதிகளின் விடுத லையை வலியுறுத்தி பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான யாத்திரை மாபெரும் எழுச்சி பூர்வமாக நடந்தது நினைவிருக்கிறதல் லவா?

அந்த எழுச்சியால் ஏதும் நன்மை நடந்ததா என்ன?

அரசியல் கைதிகள் என சிறைகளில் எவரும் இல்லை என்ற அறிக்கையுடன் அரசின் வேலை முடிந்து விட்டதல்லவா? புரிந்து கொண்டால் சரி.

**தேரோவிதா — மந்துவில்**

**அறிவுபூர்வமா ஏதாவது சொல்லுங்க வியாசரே?**

ஏன் சோகமா இருக்கிறீர்கள் என்ற மனை வியின் கேள்விக்கு உண்மை சொல்பவன் மனிதன்.



பொய் சொல்பவன் பெரிய மனிதன். சோகமாவே இல்லையே என சமா ளித்து தப்பித்து விடுவான் மகா மனிதன்.




**தமிழ் — யாழ்ப்பாணம்**

**2009ற்கு முன்-2009ற்கு பின் தமிழர் கள் நிலை எப்படி?**

**2009ற்கு முன்**
ஒற்றுமை - தேசப்பற்று - உழைப்பு - உண்மை - நேர்மை - அவதானம் - தற்காப்பு - தற்சார்பு - நேரம் தவறாமை - கடமையை கண்ணெனப்பார்த்தல் - எதிலும் நிதானம்- ஏழைகளுக்கு உதவுதல்.

**2009ற்கு பின்**
ஒற்றுமையின்மை - தேசப்பற்றின்மை - உழைப்பை நம்பாமல் பணம் தேட நினைக்கின்றமை - எதிலும் பொய் - நேர்மை தவறி நடத்தல் - நேரத்தை கணக்கிலும் எடாமை - கடமையை மதியாமை - நிதானம் தவறிநடத்தல் - துரோகம் -இனப்பற்றின்றி நடத்தல் - இப்படி செல்லிக் கொண்டே போகலாம்.

**சசி — நெல்லியடி**

**எல்லாவற்றிலும் சாதிய நோய் வரு கிறதே என்ன செய்ய?**

பாலில் வீழ்ந்த துளி விடமாய் இந்த கொடிய நோய் எங்கோ ஒரு மூலையில் இருக்கத் தான் செய்கிறது.

சாதிகள் இல்லையடி பாப்பா என்ற பாரதியின் பாட்டை மேடையில் பாடிவிட்டு வீடு வந்து வேலைக்காரனை வெளியே வைத்துப் பேசு வதுதான் ஊருக்கான உபதேசம் என்பார் கள்.

இப்பேற்பட்ட உபதேசக்காரர்கள் இன்னும் இந்த சமூகத்தில் இருக்கிறார்கள் என நினை க்கும் போது வெட்கித் தலை குனியத் தோன்று கிறது.



### யாழ்-மாநகர முதல்வர் மணிவண்ணன் கைது என்னத்தைச் சொல்கிறது வியா சரே?

**ஆருகாஷ் — யாழ்ப்பாணம்**

**கொரோனா யாழ்ப்பாணத்தில் எல்லை கடந்து தாண்டவமாடுகிறதே என்ன செய்ய சொல்லுங்கள்?**

என்னைப் பொறுத்தவரை இந்தக் கொரோனா வுக்கு ஏதும் பெயர்வைத்தால் நல்லதோ என்று தோன்றுகிறது.

அவ்வளவுக்கு கட்டுக்கு மீறிச் செல்கிறது.

இப்படியே அடங்காமல் செல்வதால் அடங்கா கொரோனா என்றும் சொல்லினம் போல.

ஏதோ இனியாவது அடங்கினாச் சரி.

**மருது — விளான்**

**பிழையைச் சுட்டிக்காட்டி ஏதோ தங் களை அறிவாளிகளாய் நினைப்பவர் கள் இருக்கத்தான் செய்கிறார்களே?**

என்ன சொல்ல இதுதான் இன்றைய நிலை. கொள்ளிவால் பேய்க்கு கோடி விளக்கம் கொடுக்கும் அறிவாளிகள் எம் தேசத்தில் தான் வாழ்கிறார்கள் என நினைக்கும் போது அடடா இந்த அறிவாளிகளை நாசாவுக்கு அனுப்பினால் என்ன என்றே தோன்று கிறது.

தெரிந்ததைத் தெரியும் என்பது ஒருரகம். தெரியாததைத் தெரியாது என்பது இன் னொரு ரகம். தெரியாததைத் தெரியும் என் பது வேறொரு ரகம் அவ்வளவே

**சுதன் — குப்பிழான்**

**தமிழ் மக்கள் புலிகளை மறந்தாலும் சிங்களதேசம் அதை நினைவுபடுத்திக் கொண்டிப்பது ஏன்?**

இலங்கையில் பயங்கரவாதம் வேரூன்றி யுள்ளது. அதை அழிக்கவேண்டும். அழிப் பதற்கு பல நாடுகள் ஒத்துழைப்பு வழங்கின. அங்கிருந்த மக்களை கருத்தில் எடுக்காது குண்டு மழை கொட்டி பயங்கரவாதத்தை அழித்துவிட்டோம் என்ற அறிவிப்பு வந்தது.

ஓ... அப்படியா, அப்படியென்றால் தமிழினத் துக்குக் கொடுக்க வேண்டியதை கொடுங் கள் எனபல தரப்பும் கேட்டது.

இதை மறைக்க தமிழ் மக்கள் மறந்தாலும் அதை அவர்கள் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கிறார்கள். அட இறந்த உடலுக்கு வைத்தியம் பார்த்த கதை நினை வுக்கு வருகிறதல்லவா?

**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை **021 567 1532** எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு



ஆறு வயதில் அடி எடுத்தேன்
அறிவெனும் கனத்தை நோக்கி
ஆறில் வைத்த என் கால்கள்
இன்று பதினெட்டில்
நிற்கின்றன...

பகைத்த நண்பர்கள்
பழைய தோழர்கள்
கற்பித்த ஆசிரியர்கள்
காலம் பல கடந்தாலும்
கல்வி நிலை மாறாது...

பன்னிரெண்டு தனில்
படிக்கும் எனக்கு
பல நண்பர்கள் தந்தே
பல பல நல் ஆசான்கள் தந்ததே
இவ் அழகிய பாடசாலை

இன்னும் ஒரு வருடங்கள்
என் கல்விப் பயணங்கள்
போதாது இந்த ஒருவருடங்கள்
ஒரு வருட நிறைவை எண்ண
என் கண்களில்
கண்ணீர் பெருக்கு...

நான் எங்கு சென்றாலும்
என்னை வயிற்றில் சுமந்த தாய்
கல்வியில் சுமந்த பாடசாலை
இரண்டும் என்றும்
என் கண்களே...

**வீரராசா சீலன்,**
**தேறாங்கண்டல், துணுக்காய்.**

# நவபூமிப் புறநானூறு காண் தமிழே!

தமிழகமே தமிழகமே எழுக எழுகவே!
புற நானூற்றில் தமிழ் அழிவு அன்று
சேர சோழ பாண்டிய மோதல்கள்
ஆரியமும் சோனகமும் மீதியை அழித்தது
வெள்ளைத் துரைமாரும் பாதியை
அழிக்க கங்காணியானோம்
இன்று இந்தித் துரைமார்க்கு
சப்பாணி கட்டி எல்லையில் மரணங்கள்
தமிழகத்தில் அதிமுக, திமுக மோதலே
இருபதாம் நூற்றாண்டின் சிறப்பு!
தமிழின அக மோதல்களே தேர்தல் வெற்றிகள் இன்று
கொண்டாடப்படுவதற்கல்ல இவை சிந்திப்பதற்கே!
இந்தி அடிமைத்துவம் இதுவே என உணர்கவே!
தேர்தல் வெற்றி தமிழுக்கு வெற்றியல்ல
தேர்தல் வெற்றி தமிழினப் பாகுநிலை காணீர்
தமிழகமே தமிழகமே சிந்தி நீ சிந்தி நீ
ஈழத் தமிழின அழிப்புக்கு அடி ஆதரவு இந்தி
ஈழத்தின் விறல் வேங்கைகள் தமிழைத் தாங்கும் என்றும்
அமிழ்தினும் இனியது தமிழ் பாரெங்கும் முழங்குமே

**யாழ் ஆனந்தன்**

# கனவுகளின் பாதையில்

கனவுகளின் பாதையில்
தொடர்கிறது என் பயணங்கள்
நிஜமான உறவுகள்
நிலையற்றதான பின்
என் தனிமைகளை துணைகொண்டு
கற்பாறைகளில் நடக்கிறேன்
நிழற்படமாய் வந்து செல்லும்
காட்சிகளின் மத்தியிலும்
உன்னை மட்டும் தேடுகிறேன்
என் கனவுகளின் பாதைகளில்

**வ. யட்ஷாயினி, கந்தர்மடம்**

# மௌனத்தின் தேடல்- 523



## புலம்பெயர்வு

போரின் வலி தாங்காது
போக்கிடமும் தெரியாது
புலம் பெயர்வுகையிலே
பாரம் தோளில் பசியில்
சோர வாடிய பாலகன்
காவும் பாசத் தந்தையின்
பரிவு பாராட்டுதற்குரியதே

**வைகைவாசன்,**
**நல்லூர்.**

## துயர் துடைப்போம் வாரீர்

சமூகம் ஒன்று அல்லலுற்று விடியல் நோக்கியே
மெதுவாய் நகர்கிறது
பாலகன் ஒருவன் பசியினால் வாடி
தந்தையின் தோள்களிலே
ஆதரவு பெற்றான்
எங்கிருந்து வந்தோம் போகும் இடம் எது?
என்ற உண்மைதனைப் புரிந்து கொண்டு
அன்பும் கருணையுமாய் துயர் துடைப்போம் வாரீர்

**த.காமினி, நாவலர் வீதி**

## தந்தையின் தோள்களில்

பாரினில் நமக்கென வந்த
முதல் நண்பன் இவனே
பயணங்கள் நீளும்
போது ஆசனமாய்
தூக்கத்தின் போது
பஞ்சு மெத்தையாய்
தோள்களிலே இடம்
கொடுப்பான்– இவன்
கோயில்களில் வணங்கும்
சாமி அல்ல
எம்மையே தூக்கிச் சுமக்கும் சாமி

**திவ்யா, வதிரி**

## கொதித்த குருதிக்குள்

வேடந்தாங்கல் என
வேடதாரிகள் வலைக்குள்
சிக்கிய வேற்றுநாட்டு
உலோகப் பறவைகள்
கொட்டிய கொத்துக்
குண்டுகளால் எரிமலைக்
குழம்பாய்க் கொதித்த
குருதிக்குள் எஞ்சிய
உயிர்கள் பாசச்சுமையும்
பாரவண்டிலாய் குடும்பத்
தலைவரின் குன்றா முயற்சி

**சாமிபக்திரன்**
**காவலூர்**

# மௌனத்தின் தேடல்- 524



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## தந்தை ஒரு சுமைதாங்கி

வாழ்வில் எந்த நிலை வந்தாலும் தன் மகனை அன்போடு
தோளில் சுமக்கும் தந்தையே! இன்று நீ அவனை
இப்படிச் சுமக்கலாம்– ஆனால் உன்னை அவன் வயதான காலத்தில்
சுமப்பான் என்பது சந்தேகமே அதனால் தான் நம் உலகில்
இன்று முதியோர் இல்லங்கள் வெகுவாக அதிகரித்து வருகிறது

**சுப்பிரமணியம் ஜெயரூபன், பருத்தித்துறை**

## பாசப்பிணைப்பு

அப்பா எனும் மூன்றெழுத்துக்கு இலக்கணமாய்
அன்பு பிள்ளை தனை அரவணைத்து ஆறாத துயரிலும் அன்புடனே
தோள் தனில் ஏற்றி துஞ்சிடாத துணிவுடனே
தூரதேசம் நோக்கி புறப்படுவதுதான் ஏனோ?

**ஆ.பாலமதுஜா, யா/ மெதடிஸ்த பெண்கள் உ.பா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி கைது அதிர்வலைகள் எவ்வாறு அமையும்?

உதயமானது யாழ்.மாநகர காவல் படை என்ற தலைப் போடு வெளிவந்த பத்திரிகைச் செய்திகள் பார்த்தபோது மிக நல்ல திட்டம் என மக்கள் பேசிக்கொண்டனர்.

யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் மக்களின் நலன்கருதி தூய்மை பேணும் வகையில் அருமையான திட்டங்களை ஆரம்பிக்கின்றார் எனப் பலர் பேசக் கேட்டு மனம் பூரிப்படைந்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து கட்சிக்கு விரோதமாக நடந்தார் எனக் கட்சியை விட்டு நீக்கப்படுவதாகக் கட்சித் தலைமையினால் அறிவிக்கப்பட்டவரே முதல்வர் மணிவண்ணன்.

அதன் பின்னர் அவர் அதற்கு எதிராக வழக்குத் தொடர்ந்தும் ஏலவே முதல்வராய் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இமானுவேல் ஆனல்ட் பதவி பறிபோக அநேகரின் ஆதரவுடன் யாழ்.மாநகர ஆணையாளராகத் தெரிவு செய்யப்பட்டார் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன்.

இது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு இன்னும் கடுப்பேறியதென்றே கூற வேண்டும்.

ஆம் "மணி அணி" என அவரின் ஆதரவாளர்களை அடையாளப்படுத்தி அவர்களுக்கு எதிராகவும் செயற்பட ஆரம்பித்தது அக்கட்சி.

ஆனால் அவை அனைத்தையும் தடையாய் எண்ணாது எதிர்த்து நின்றதை அவர்களின் சட்டரீதியான அணுகுமுறை பறைசாற்றி நின்றது.

மாநகர முதல்வர் கதிரையில் இருந்ததும் முதல்வர் மணிவண்ணனின் முதல் வேலை யாழ். நகர கழிவு கால்வாய்களைத் தூர்வாருவதைக் கையில் எடுத்தார்.

பகலில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் அத் தூய்மைப் பணியை இரவில் மேற்கொண்டதும் அரசியல்வாதிகள் முதல் பொதுமக்கள் வரை அவரின் அச்செயற்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்து தூய்மைப் பணி ஊழியர்களுக்கு உணவு வழங்கி ஊக்கப்படுத்தியதையும் நாம் இங்கு கவனித்துக் கொள்ள வேண்டும்.

அதிலும் அந்த அணியில் ஒரு தொழிலாளியாக முதல்வர் மணிவண்ணன் செயற்பட்டார்.

இது மக்கள் நலனில் அவரின் அக்கறையை எடுத்துக் கூறுகிறது என ஒரு சாரார் பாராட்டினாலும் இது தனது அரசியல் ஆதாயத்திற்கானது எனச் சிலர் கருத்துரைத்தமையினையும் இங்கு பதிவிடுவது முறையானது.

இவ்வாறு மணிவண்ணனின் சமூக சிந்தனையில் உதித்த விடயமே யாழ்.மாநகர காவல்படை.


இந்தப் படை மாநகர எல்லைக்குள் குப்பை கொட்டுபவர்கள், வீதியில் பொது இடங்களில் எச்சில் துப்புபவர்கள் மற்றும் சூழலுக்கு எதிர்மறையான செயற்பாடுகளைச் செய்பவர்களுக்கு எதிராக தண்டப்பணம் அறவிடும் பணியினைச் செய்வார்கள் என அறிவிக்கப்பட்டது.

ஐவர் கொண்ட அந்த காவல் படைக்கு மேக நீல நிற மேல் சட்டையும் கடும் நீல நிற கால்சட்டையும் வழங்கப்பட்டிருந்தது.

இச் செயற்பாடானது தமிழீழ விடுதலைப்புலிகளின் தமிழீழ காவல் துறையின் சீருடையை ஒத்ததாக உள்ளது எனவும் யாழ். மாநகர முதல்வர் தமிழீழ விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்ய முயல்கிறார் எனவும் ஆளும் அரச எதிர்த்தரப்புகளிடம் இருந்து கண்ட[illegible] இவ்விடயம் [illegible] அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணன் மற்றும் மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் ஆகியோர் கடந்த 8 ஆம் திகதி யாழ். பொலிஸாரால் அழைக்கப்பட்டு சீருடை தொடர்பில் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

பொலிஸாரின் விசாரணைக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மணிவண்ணன், கொழும்பு மாநகர காவல் பணியில் உள்ள காவலர்களின் சீருடையை ஒத்த சீருடையினையே பயன்படுத்தினோம் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல் துறையினரின் சீருடையினை தாம் பயன்படுத்தவில்லை எனவும் விளக்கமளித்தார்.




மணிவண்ணன் மட்டுமல்லாமல் யாழ்.மாநகர காவல் படை நியமனம் வழங்கப்பட்ட ஐவரையும் அழைத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, கடந்த 8 ஆம் திகதி மாநகர காவல் படை விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் தேசிய பாதுகாப்புச் சபை கூடி ஆராய்வு செய்ததுடன் சில முக்கிய தகவல்களை எடுத்ததாகவும் அறிவிக்[illegible] முன்றையநாள் இரவு [illegible]வாத தடுப்பு விசாரணைக் குழுவினால் முதல்வர் மணிவண்ணன் கைது செய்யப்பட்டார்.

பயங்கரவாத தடுப்பு விசாரணைக்குழுவினால் மணிவண்ணன் வவுனியாவில் வைத்து விசாரணை செய்யப்பட்டு நேற்று முன்தினம் இரவு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மணிவண்ணன் கைது விவகாரம் வடக்கு-கிழக்கு தமிழர் பிரதேசங்களில் கடும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் தெற்கில் இக்காவல் படைக்கு எதிராக கடும் பிரசார நடவடிக்கைகளையும் காண முடிகிறது.

மணிவண்ணனை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் கைது செய்தமை தவறானது எனவும் உடன் அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் தமிழ் அரசியல்வாதிகள் அறிக்கை வெளியிட இவ்விவகாரம் இன்னும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதில் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட மணிவண்ணனுக்கு ஆதரவாக குரல் கொடுத்த சட்டத்தரணி சிறிகாந்தா கூறுகையில்,

மாநகர காவல் படை என்ற பெயரை மட்டும் வைத்துக்கொண்டு இவ்வாறான செயற்பாடுகளைச் செய்வது அரசியல் சர்ச்சைகளையே ஏற்படுத்தும்.

மாநகர காவல் படையாக நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட குழுவிற்கு பொலிஸாருக்கு வழங்கப்படும் எவ்விதப் பயிற்சியும் வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் ஒரு சிறு தடியைக் கூட கையில் வைத்திருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்ததுடன் இவ்விடயத்தை அரசியல் ஆக்காமல் மணிவண்ணனை பயங்கரவாத விசாரணையில் இருந்து விடுவித்து சாதாரண சட்ட நடவடிக்கையூடாக அணுகலாம் எனக் கூறியிருந்தார்.

எது எவ்வாறு இருந்தாலும் வெறுமனே ஒரு சீருடை என்ற விவகாரத்தை வைத்து பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பிரயோகிப்பது என்பது முறையன்று.

அத்துடன் யாழ்.மாநகர முதல்வர் என்ற வகையில் மணிவண்ணன் இவ்வாறான செயற்பாட்டை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் மேற்கொண்டிருந்தால் இவ்வாறான பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

எது எப்படியோ, யாழ்.மாநகர சபையின் ஆட்சிக்கால முடிவிற்கு இன்னும் சொற்பகாலங்களே இருக்கும் நிலையில் மாநகர முதல்வர் மணிவண்ணன் பயங்கரவாத விசாரணைக் குழுவினரால் கைது செய்யப்பட்டமை பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

அது தமிழர் பிரதேசங்க ளில் ஒரு மாதிரியாகவும் சிங்கள பிரதேசங்களில் வேறொரு மாதிரியாகவும் அமையும்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்டிகிதேரா மர்மக் கடிகாரம்


## மாயமில்லை மந்திரமில்லை

(சென்றவார தொடர்ச்சி...)

அது, விலைமதிக்க முடியாத பொருள்களை ஏற்றி வந்திருக்கிறது.

அந்தக் கப்பல் அமிழ்ந்த தீவின் பெயர் 'அன்டிகிதேரா' மதிப்பு வாய்ந்த பொருள்களை வழமையாகக் காட்சிப்படுத்துவது போல, அந்தப் பொருள்களும் அருங்காட்சியகத்தில் வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. முடிந்தது விஷயம். இரண்டு ஆண்டுகள், அங்கு எடுக்கப்பட்ட சிலைகள், பாத்திரங்கள், விலைமதிக்க முடியாத பொருள்கள் அனைத்தையும் மக்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

ஆனால், யாருமே சீண்டாமல், ஒரு பக்கத்தில் துருப்பிடித்திருந்த உடைந்த துண்டுகளும் அங்கு காணப்பட்டன. அப்போது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை, 'பல மில்லியன் டொலர்கள் செலவு செய்து அவற்றை ஆராயப்போகிறார்கள்' என்று. இன்று 'அன்டிகிதேரா பொறிமுறை' (**Antikythera Mechanism**) என்ற பெயரில் உலகமே வியந்து, புராதன கணினியென்று ஆச்சரியப்படும் கருவியின் உடைந்த பாகங்களே அவை.



1902 ஆம் ஆண்டு அருங்காட்சியகத்துக்குப் பார்வையாளராக வந்த முன்னாள் அமைச்சரான, 'வேலரியோஸ் ஸ்டெய்ஸ்' அந்தப் பாகங்களை உன்னிப்பாகக் கவனித்தார். அதிலிருந்த பெரிய பாகத்தில் பற்களுள்ள சக்கரங்கள் இருப்பது போல அவருக்குத் தோன்றியது. "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பான பொருள்களில் பற்சக்கரங்களா?" என்று வியந்தார்.

அன்று பற்றிக்கொண்டதுதான், இன்றுவரை எரிந்துகொண்டிருக்கிறது. அதைக் கேள்விப்பட்ட ஜேர்மன் ஆராய்ச்சியாளரான 'ஆல்பர்ட் ரேம் என்பவர் வந்தார். அதைப் பார்வையிட்டு, அது ஒரு வானிலையை கணிக்கும் கருவியென்று அறிக்கை கொடுத்தார். அந்தக் கருவியை இனி அன்டிகிதேரா என்று நாமும் அழைக்கலாம். 1957ஆம் ஆண்டளவில், இங்கிலாந்தைச் சேர்ந்த 'டெரெக் பிரைஸ் அன்டிகிதேராவைத் தொடர்ச்சியாக ஆராயும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். நான்கு பெரிய துண்டுகளையும், பல சிறிய துண்டுகளையும், அதன் பாகங்களாகக் கண்டெடுத்திருந்தார்கள். அவற்றில் பெரிய பாகத்தில் வளைவுடனான பற்சக்கரங்களும், வரிசைகொண்ட கோடுகளிலான அளவுகளும் காணப்பட்டன.

இரண்டாயிரம் ஆண்டுகள் கடலடியிலிருந்ததால், துருப்பிடித்த பாகங்களினுள்ளே என்ன இருக்கின்றன என்பது தெரியவில்லை. பிரைஸ், பல ஆண்டுகளாக அவற்றை ஆராய்ந்தார். அன்டிகிதேரா சிக்கலான பொறிமுறை கொண்டதெனத் தெரிந்தது. அதற்குமேல் எதுவும் செய்ய முடியவில்லை. 1970ஆம் ஆண்டு, லேசர் கதிர்களைக்கொண்டு ஆராய்ந்ததில், அதன் ஆச்சரியங்கள் மெல்ல மெல்ல விலகின. பல சக்கரங்கள் அதனுள் பொருத்தப்பட்டிருந்ததற்கான அடையாளங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

அன்டிகிதேரா கருவியின் முன்பகுதி என கணிக்கப்பட்ட பாகத்தில் பல குறிப்புகள் எழுதப்பட்டிருந்தன. அவற்றில், வெள்ளி, புதன், செவ்வாய், வியாழன், சனி ஆகிய கோள்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. அந்தக் குறிப்புகளிலிருந்தும், சக்கரங்களின் அடையாளங்களிலிருந்தும், சந்திரன், சூரியன் ஆகியவற்றின் வருடச் சுழற்சிகளையும், கிரகணங்களின் நாட்களையும் அளக்கக்கூடியவாறு கருவி அமைக்கப்பட்டிருப்பது தெரிந்தது. அத்துடன் ஏனைய ஐந்து கோள்களின் விவரங்களும் இருக்கின்றன என்றும் தெரிந்தது. அதனடிப்படையில், அன்டிகிதேராவின் மாதிரியை உருவாக்கினார்கள். ஆனால், எதையோ தவறவிட்டதுபோல, அது முழுமையாக இருக்கவில்லை.

கண்டெடுக்கப்படாத பாகங்களைச் சரியாக ஈடுசெய்ய முடியவில்லை.

ஆனால் 2004 ஆம் ஆண்டு, உலகரீதியாகப் பல நிபுணர்கள் ஒன்றுசேர்ந்த குழுவொன்று உருவாக்கபபட்டது. அதில் பலதுறை வல்லுநர்களும் இருந்தார்கள். படத்தயாரிப்பாளரும், கணிதவியலாளருமான 'டோனி ஃபிரீத்' என்பவரின் மேற்பார்வையில் அந்தக்குழு அமைக்கப்பட்டது. மில்லியன் டொலருக்கும் அதிகமான பணம் ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது. இங்கிலாந்திலிருந்து எட்டுடன் எடைகொண்ட CT ஸ்கேன் இயந்திரம், ஏதென்ஸ் நகரத்துக்குக் கொண்டுவரப்பட்டு பாகங்கள் ஆராயப்பட்டன. அதன் மூலம் கிடைத்த முடிவுகள் யாருமே நம்ப முடியாத ஆச்சரியம்கொண்டவை.

உலகப் பிரசித்திபெற்ற 'ஹெவ்லெட் பேக்கர்ட்' நிறுவனமும் அந்தக் குழுவினருடன் இணைந்தது. பத்தாண்டுகளுக்கு மேலாக அன்டிகிதேராவை அக்கக்காக ஆராய்ச்சி செய்தனர். இறுதியாக 2016ஆம் ஆண்டு, தங்கள் முழுமையான அறிக்கையை வெளியிட்டார்கள். சிரிஸ்கேன் மூலம், அதை ஆராய்ந்த போது, நவீன கைக்கடிகாரத்தின் பற்சக்கரங்களும், அவை இயங்கும் பொறிமுறையையும் ஒத்ததாக அன்டிகிதேரா உருவாக்கப்பட்டது தெரிய வந்தது.

15-க்கும் மேற்பட்ட பற்சக்கரங்கள் வளையங்கள் அதில் பொருத்தப்பட்டிருந்தன. அவை அனைத்தும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து சுற்றக் கூடியவாறு காணப்பட்டன. பித்தளை உலோகத்தால் அந்தச் சக்கரங்கள் உருவாகியிருந்தன. பெரிய சக்கரத்தில் 223 பற்கள் இருந்தன. அதுபோல, வெவ்வேறு அளவு கொண்ட சக்கரங்களும் பற்களும் காணப்பட்டன.

ஒரு சதுரமான பெட்டி போன்ற அமைப்பில், முன்பக்கமும் பின்பக்கமும் முடிவுகளைக் காட்டும் முட்கள் சுற்றும்விதத்தில் அண்டிகிதேரா இருந்தது. உள்ளிருந்து இயங்கும் பொறிமுறை மூலம், சதுரப் பெட்டியின் இரண்டு பக்கங்களிலும் பல விதமான முடிவுகளை ஒரே சமயத்தில் கணிக்கக் கூடியவாறு இருந்தது. சந்திரகிரகணம், சூரிய கிரகணம், அவற்றின் சுழற்சி, சனி, வியாழன், செவ்வாய், புதன், வெள்ளி ஆகிய கோள்களின் நிலைகள், திசைகள், பகல், இரவு மற்றும் ஒலிம்பிக் போட்டிக்கான நாட்காட்டி ஆகிய அனைத்தையும் ஒரே சமயத்தில் கணிக்கக்கூடியவாறு இருந்தது. அந்தப் பாகங்களில் மொத்தமாக 3,500 எழுத்துகள் காணப்பட்டன. கிடைக்காத பாகங்களில் மொத்தமாக 20,000 எழுத்துகள் இருந்திருக்க வேண்டும்.

இன்றைய நவீன ஆராய்ச்சியாளர்கள் ஒன்றுசேர்ந்து பத்தாண்டுகளுக்கு மேல் உழைத்தும் அன்டிகிதேராவின் முழுமையான பொறிமுறையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், 2,100 ஆண்டுகளுக்கு முன்னர், சிக்கலான பொறிமுறையுடன் அதை ஒருவர் உருவாக்கியிருப்பது நம்ப முடியாதது. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தான் கைக் கடிகாரங்களே வடிவமைக்கப்பட்டன. ஆனால், அது போன்ற அமைப்புடன், பல முடிவுகளை ஒன்றாகக் காட்டக்கூடிய சிக்கலான கருவி உருவாக்கப்பட்டிருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.


அன்டிகிதேரா பொறிமுறையைப் புராதனக் கணினி என்றே பலர் சொல்கிறார்கள். அதிகபட்சக் கணித அறிவுள்ள ஒருவரால் மட்டுமே அப்படியொரு கருவியின் செயற்பாட்டை கணிக்க முடியும். அப்படி கணித்திருந்தாலும், 2,100 ஆண்டுகளுக்கு முன்னர், நுணுக்கமான பற்சக்கரங்க்ளை வெட்டியெடுத்துப் பொருத்துவதென்பது சாத்திய மேயில்லாதது.

அப்படிப் பார்க்கும்போது, அதை உருவாக்கிய காலப்பகுதியில் வாழ்ந்த மேதைகளைக் கணக்கில்கொண்டால், கி.மு. 190-களில் வாழ்ந்த 'ஹிப்பார்கோஸ்' எனும் வானிலை ஆராய்ச்சியாளரையும், கி.மு. 250-களில் வாழ்ந்த ஆர்க்கிமிடிஸையும்தான் சொல்லலாம். இவர்களில் ஒருவரே அன்டிகிதேராக் கருவியை உருவாக்கியிருக்க முடியும். சமீப முடிவுகளின்படி, இதை ஆர்க்கிமிடிஸ் உருவாக்கியதாகத்தான் கருதுகிறார்கள்.

'அதெப்படி 2,100 ஆண்டுகளுக்கு முன்னர் கடிகாரப் பொறிமுறைகொண்ட கணிப்பொறியை உருவாக்கினார்கள்?' என்று நாம் அதிசயித்துக் கொண்டிருக்க, கை மணிக்கட்டுகளில் கடிகாரம் போன்றவற்றை அணிந்தபடி, 4,000 ஆண்டு சுமேரியக் கடவுள்களின் சிலைகள் நம்மைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருக்கின்றன. அவர்களைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தால், இந்த ஜென்மத்துக்கும் மர்மங்களாக அடுக்கிக்கொண்டே போகலாம்! (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பூக்களாய் மலர்வோம்"



"பழுத்த மரம்தான் கல்லடிபடும்' என்பார்கள் பெரியோர்கள். நம் மீது விமர்சனங்கள் வருகின்றன எனில், நாம் வளர்கிறோம் என்று அர்த்தம். விமர்சனங்களே நாம் முகம் பார்க்கும் கண்ணாடி. விமர்சனங்களைக் கவனியுங்கள்... முதலில் வலிக்கும். ஆனாலும் நம் வெற்றிக்கான வழிகளை விமர்சனங்களே எடுத்துச் சொல்லும்.

இன்றைக்குப் பலருக்கும் விமர்சனங்களைத் தாங்கிக்கொள்ளும் பக்குவம் இல்லை. விமர்சனக் கற்களை ஏற்று வெற்றிக்கான படிகளை அமைத்துக் கொள்ளாமல், வீண் கோபத்துக்கோ அல்லது கழிவிரக்கத்துக்கோ ஆளாகி விடுகிறார்கள். விமர்சனங்களோ, வீண்பழிச் சொற்களோ, அவமானத்துக்கு ஆளாவதோ... எதை எதிர்கொண்டாலும் மனம் தளராமல் முன்னேற கற்றுக்கொள்ள வேண்டும்.

விவசாயி ஒருவனிடம் வயதான கழுதை ஒன்று இருந்தது. ஒரு நாள் அது பாழுங்கிணற்றில் தவறி விழுந்தது. உடனே அது பயத்தில் பெரும் குரலில் கத்தத் தொடங்கியது.

விடயம் அறிந்த விவசாயி, 'என்ன செய்யலாம்?' என்று யோசித்தான். கழுதையோ வயதானது. உபயோகம் இல்லாதது. பாழுங் கிணறோ மூடப்பட வேண்டியது. ஆகவே, கழுதையை வெளியே கொண்டு வருவதைவிட, கிணற்றை மூடிவிடலாம் என்று தீர்மானித்தான்.

நண்பர்களையும் உறவினர்களையும் உதவிக்கு அழைத்தான். மண் வெட்டிகளுடன் வந்த அவர்கள், மண்ணை வெட்டி வெட்டி, கிணற்றுக்குள் வீசினார்கள்.

தன்னை உயிருடன் புதைக்கவே மண்ணை வாரிப் போடுகிறார்கள் என்று புரிந்ததும் பரிதாபமாகக் கதறத் தொடங்கியது கழுதை. அதன் கதறலைக் கேட்டு யாரும் பரிதாபப்படவில்லை. சற்று நேரத்தில் கழுதையின் கதறல் நின்றுவிட்டது. கழுதைக்கு என்ன நேர்ந்தது என்று கிணற்றுக்குள் எட்டிப் பார்த்த விவசாயி வியப்படைந்தான்.

உள்ளே, கழுதை தனது உடலைக் குலுக்கி, தன் மேல் விழுந்த மண்ணைக் கீழே உதறிவிட்டு மேலே அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தது. இப்படி ஒவ்வொரு முறையும் தன் மேல் போடப்படும் மண்ணையும் குப்பைகளையும் உதறிக் கீழே தள்ளிவிட்டு, அதன் மேல் ஏறி நின்றுகொண்டது. இப்படி அடி மேல் அடி ஏறி வந்த கழுதை, இறுதியில் மேலே வந்து கிணற்றுச் சுவரைத் தாண்டி வெளியே குதித்து ஓடிப் போனது!

நீங்களும் உங்களை நோக்கி எறியப்படும் கற்களையும் குப்பைகளையும் ஒதுக்கிவிட்டு, அடியெடுத்து வைத்து மேலே செல்லப் பழகுங்கள். உங்களை அவமானப்படுத்துவதற்காகச் செய்யப்படும் காரியங்களையும் சொல்லப்படும் வார்த்தைகளையும் உங்களை ஊக்குவித்து உந்தித் தள்ளும் நிகழ்வுகளாக எடுத்துக் கொள்ளுங்கள்.

எது ஒன்றும் நம் முதுகின் மேல் இருந்தால் சுமை. அதையே இறக்கி வைத்து விட்டால், அது நாம் ஏறி நிற்கக் கூடிய மேடை!

இயற்கைகூட இதே தத்துவத்தை வேறு விதமாக நமக்குத் தினம் தினம் சொல்லிக் கொடுக்கிறது.

ஒரு செடி நன்றாக வளர உரம் தேவை. உரமாகப் போடப்படுவது என்ன? மக்கிய குப்பையும் சாணமும்தானே? நம் மீது குப்பையையும் சாணத்தையும் கொட்டுகிறார்களே என்று செடி, ஒரு நாளும் நம்மைப் போல் ஆதங்கப்படுவது இல்லை. மாறாகச் செடிகள் அந்த அசிங்கமான உரங்களை ஏற்று நல்ல நல்ல பூக்களாக மாற்றி நமக்கு அளிக்கின்றன.

நாம் இந்தச் செடிகளைப் போல் இருக்க வேண்டாமா? மக்களின் ஏளனங்களையும் அவமதிப்புகளையும் உரமாக ஏற்று பூக்களாய் மலர்ந்து சிரிக்க வேண்டாமா!

# எது சாதனை?



சாதிக்க வேண்டும் என்று நினைப்பது தவறில்லை. ஆனால், அது எப்படிப்பட்ட சாதனை என்பதில் மட்டும் தெளிவு இருக்க வேண்டும். உதாரணமாக, ஜப்பானைச் சேர்ந்த தாகேரு கோபயாஷியை (Takeru Kobayashi) எடுத்துக்கொள்வோம். இவர் 2014 ஆம் ஆண்டு, கனடாவில் நடந்த பீட்ஸா சாப்பிடும் போட்டியில், 62 சிலைஸ் பீட்ஸாக்களை 12 நிமிடங்களில் தின்று தீர்த்திருக்கிறார்.

இவரைப்போலவே, வெகு நீளமாக தாடி வளர்த்து, மீசை வளர்த்து, நகம் வளர்த்து கின்னஸ் சாதனை படைத்தவர்களும் உண்டு. அதேநேரத்தில், உலகில் வளர்ச்சி அடையாத நாடுகளிலிருந்து வந்து ஒலிம்பிக் போட்டிகளில் சாதித்து தங்கள் நாட்டுக்குப் பெருமை சேர்த்தவர்களும் உண்டு. ஆக, எதில் சாதனை புரிகிறோம் என்பது முக்கியம்!

ராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேச மொழிக் கதை இது...
ஒரு சீடன் குருவைத் தேடி வருகிறான். முகமெல்லாம் பரவசம். குரு கேட்கிறார்...
"என்னப்பா இவ்வளவு சந்தோஷம்...?"
"நான் பதினாலு வருஷம் தவம் செஞ்சதுக்கு எனக்கு ஒரு சித்தி கிடைச்சிருக்கு."
"அப்படியா... என்ன அது?"
"தண்ணியில நடக்குற சித்தி. நம்ம ஊரு ஆற்றை தண்ணி மேல நடந்தே கடந்துடுவேன்."

இதைக் கேட்டு குரு புன்முறுவல் பூத்தார். "ஏம்ப்பா... இதுக்குப் போய் ஏன் பதினாலு வருஷம் தவம் இருக்கணும். பத்து ரூபா கொடுத்தா ஓடக்காரன் அக்கரைக்குக் கொண்டுபோய் சேர்த்துடப் போறான்." குருவின் பதிலைக் கேட்டு விதிர்விதிர்த்துப் போனான் சீடன்.

ஆக, சாதனை என்பதன் ஆரம்பப்புள்ளி நம் விருப்பத்திலிருந்தே ஆரம்பிக்கிறது. மற்றவர்களுக்குப் பயனளிக்கும் என்றால்தான் அது சாதனை. மற்றப்படி, அது சுயநலம், சுயதம்பட்டம்.

ஒரு சீன நாடோடிக்கதை. ஒருவன் தன் நண்பனையும், தான் வளர்க்கும் நாயையும் அழைத்துக்கொண்டு ஏரிக்கரைக்குப் போனான். தன் கையிலிருந்த பந்தை ஏரியை நோக்கி விட்டெறிந்தான். அவனுடைய நாய் தண்ணீரின் மேல் ஓடிப் போய் அந்தப் பந்தை தன் வாயில் கௌவிக்கொண்டு வந்தது. மறுபடியும் அவன் பந்தை எறிந்தான். நாய் தண்ணீரின் மேல் நடந்து போய் அந்தப் பந்தை எடுத்து வந்தது. நண்பன் சொன்னான்:

"அடடா... உன் நாய் என்ன பிரமாதமா தண்ணி மேல நடக்குது..."
இவன் சொன்னான்... "நீ வேற... அந்த நாய்க்கு நீந்தத் தெரியலை!"



"கட்சி வேட்பாளர் பட்டியலில் எதிர்க்கட்சியினர் சிலர் பெயர் இருப்பதைக் கண்டு யாரும் திகைக்க வேண்டாம். அவர்களெல்லாம் ஓரிரு நாட்களில் நமது கட்சிக்கு வந்துவிடுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்"
-தஞ்சை ப்ரணா



"புலவரே, அண்டைநாட்டு மன்னர் அதிக சன்மானம் தருவதாக நம் மன்னரிடம் சொன்னீர்களா?"
"ஆமாம்,அதற்கென்ன?"
"நம் மன்னரும் புலவர் வேடம் போட்டுக் கொண்டு கிளம்பிச் சென்றுவிட்டார்!"
-திருப்பூர் சாரதி



"கூட்டத்துக்குள் நுழைஞ்சு வரும்போது என் செல்போனை எவனோ அடிச்சுட்டான் தலைவரே!"
"அட...அது உன் செல்போனாய்யா?"
-எஸ்.முகம்மது யூசுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியின் பாய்ச்சல் கைகொடுத்த கண்டெய்னர்




சூயஸ் கால்வாயில் சிக்கிக்கொண்ட எவர்கிறீன் கப்பல் மீட்கப்பட்டு மீண்டும் மிதக்க ஆரம்பித்துவிட்டது. இதனால் கடல்வழிப் பாதையில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல் கொஞ்சம் கொஞ்சமாக பழைய நிலைக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறது. ஆனால், எவர்கிறீன் உண்டாக்கிய சிக்கலால் நிறுவனங்கள் எதிர்கொள்ளப் போகும் நட்டம் சர்வதேச சந்தையில் அடுத்த சில மாதங்களுக்கு பல அதிர்வுகளை உண்டாக்கலாம் என்கிறார்கள்.

அன்றாட அடிப்படை நுகர்வுப் பொருட்களுக்குக்கூட நாடுகள் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கிற சூழலில் இது ஒரு சங்கிலித் தொடர் போல பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. **Domino effect** தியரியில் சொல்லப்படுவது போல இந்தச் சரக்குக் கப்பல்களில் ஏற்படும் ஒரு சிறு பிசகு கூட ஒட்டுமொத்த உலகையும் ஸ்தம்பிக்க வைத்து விடுகிறது.

இன்று நினைத்த மறுகணமே உலகின் எந்த மூலையில் இருந்தும் விரும்பிய பொருட்களை நுகரக்கூடிய மாற்றத்தை மக்கள் வாழ்வில் உண்டாக்கியதற்கு முக்கிய காரணி சர்வதேச வணிகத்தில் சரக்குக் கப்பல்களின் வருகை. சரக்குக் கப்பலும் கண்டெய்னர் கொள்கலன்களின் பாவனை அதிகரித்து விட்டது.

இலங்கையின் தேயிலை லண்டன் ஹோட்டல் அறைகளில் அருந்தப்படுகின்றது. டென்மார்க்கின் பால் பவுடர் சவுதி அரேபியாவில் பயன்படுத்தப்படுகிறது. சீனாவில் தயாரிக்கப்படும் மூலப் பொருட்களைக் கொண்டு ஜேர்மனியில் விமானம் தயாராகிறது. வங்கதேசத்தில் தைக்கப்படும் ஆடைகள் கனடா ஹைஸ்ட்ரீட்களில் விற்கப்படுகின்றன. இன்றைய உலகமயமாக்கப்பட்ட வாழ்க்கையில் நம் மனம் ஆசைப்படும் எதுவுமே கைக்கு எட்டும் தூரமே.

ஒரு காலத்தில் மிகவும் செலவு கூடியதும், சிக்கல் நிறைந்ததும், சிரமம் மிகுந்ததுமாக இருந்த சர்வதேச வர்த்தகத்தை ஒரு சிறிய பெட்டிக்குள் அடைத்த கதை நம்மை ஆச்சரியத்தின் உச்சிக்கே அழைத்துச்செல்லும்.

உலக உற்பத்தியில் 80 சதவிகித பொருட்களின் பரிமாற்றம் சரக்குக் கப்பல்கள் மூலமாகவே நடைபெறுகின்றன. கிட்டத்தட்ட 4 ட்ரில்லியன் டொலர்களுக்கும் மேலான மதிப்புள்ள பொருட்கள் உலக சந்தைக்குக் கடல் வழியாகவே அனுப்பப்படுகின்றன. உலகப் பொருளாதாரத்தைத் தாங்கி, தூக்கி நிறுத்தும் ஒரு முக்கியத்துறை இந்தச் சரக்குக் கப்பல் வணிகம்.

## கடல்வழி வணிகம் எப்படி ஆரம்பித்தது?

நாடுகளுக்கு இடையேயான கடல் வணிகம் பண்டைக்காலம் தொட்டே நடந்து வருகிறது. சிலப்பதிகரத்தில் வரும் பூம்புகார் நகரில் மிகப்பெரிய துறைமுகம் இருந்ததாகவும் தமிழர்கள் அக்காலத்திலேயே அண்டை நாடுகளுடன் கடல் வணிகத்தில் ஈடுபட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது. நாகரிகங்கள் பெரும்பாலும் ஆற்றுப்படுக்கையை மையம் கொண்டே தோன்றியதன் முக்கிய காரணமும் இதுவே.

கிரேக்கர்கள் எண்ணெய் அல்லது மதுவை கொண்டு செல்ல சீல் செய்யப்பட்ட குவளைகளை அல்லது ஆம்போராக்களை அந்தக் காலத்தில் பயன்படுத்தினர். பிற்காலத்தில் மதிப்புமிக்க பொருட்களை தங்கள் படகில் ஏற்றிச் செல்ல பெரிய டிரங்க்குகளைப் பயன்படுத்தினர்.

1956 வரை, சர்வதேச சரக்குகள் துறைமுகத் தொழிலாளர்களால் கைமுறையாக தொகுக்கப்பட்டு கப்பல்களில் ஏற்றப்பட்டன. அதேபோல், கப்பல் இலக்கு துறைமுகத்தை அடைந்ததும் இந்தச் செயல்முறை மீண்டும் கையாளப்பட்டது. ஒவ்வொரு தனிப்பட்ட பொருளும் சாக்குப் பைகளிலும், பரல்களிலும், மூட்டைகளிலும் திணிக்கப்பட்டு, ஒவ்வொன்றாய் எடுத்து கப்பலில் ஏற்றி இறக்க அதிகளவான மனித வளம் தேவைப்பட்ட இந்தச் செயல்முறை அதிகளவு நேரத்தையும் எடுத்துக் கொண்டது. இது கடினமானது மட்டுமல்ல மிகவும் ஆபத்தானதாகவும் இருந்தது. கப்பல்கள் கடலில் மிதப்பதை விட துறைமுகங்களில் தங்கியிருந்த காலப்பகுதியே அதிகமாக இருந்தது. இதனாலேயே சாதாரண குண்டூசிக்குக் கூட யானை விலை, குதிரை விலை நிர்ணயிக்கப்பட்டது.

இவ்வளவு சிக்கல் மிகுந்ததாக இருந்த கடல்வழி வணிகத்திற்கு தீர்வாக இரண்டு வரப்பிரசாதங்கள் கிடைத்தன. ஒன்று சரக்குக் கப்பல்கள், இரண்டு கண்டெய்னர்கள். இந்த இரண்டு தீர்வுகளையும் இரு கையில் ஏந்தி தமிழ் சினிமாவில் மக்களின் தலைவிதியை மாற்ற எங்கிருந்தோ புறப்பட்டு வரும் ஹீரோ போல வந்தார் மால்காம் மெக்லீன்.

## யார் இந்த மால்காம் மெக்லீன்?

1913ஆம் ஆண்டு அமெரிக்காவின் வட கரோலினாவில் பிறந்த மால்காம் மெக்லீன் ட்ரக் சாரதியாக தன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கி பின்னர் ட்ரக் கம்பனிக்கே உரிமையாளரானார்.

ஒருமுறை இவர் கப்பலில் ஏற்ற சரக்குகளை ட்ரக்கில் கொண்டு சென்ற வேளையில், இந்த ஏற்றுதல் இறக்குதல் செயல்முறை எவ்வளவு நேர விரயத்தை ஏற்படுத்துகிறது என்பதை உணர்ந்தார். நெடுஞ்சாலைகளில் ஏற்படும் நெரிசலையும், வழக்கமான சரக்குக் கப்பல்களின் திறனற்ற ஏற்றுதல் மற்றும் வெளியேற்றல் நடைமுறைகளையும் சமாளிக்க முடிந்தால் பெரிய நன்மைகள் கிடைக்கும் என்று சிந்தித்தார். ஒரு ட்ரெய்லரின் சரக்குக் கட்டுப்பாட்டு பகுதியை அப்படியே வெளியே தூக்கி நேரடியாக கப்பலுக்குள் கொண்டு செல்ல முடிந்தால், நேரம், உழைப்பு மற்றும் செலவுகளில் பெரும் சேமிப்பை காணலாம் என அவர் நினைத்தார்.

ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான அளவில் கப்பல்களில் ஏற்றக்கூடிய நிலையான அளவிலான ட்ரெய்லரை ஏன் உருவாக்கக்கூடாது என்ற எண்ணம் உதித்தது. உதித்த ஐடியாவை உடனடியாக மால்காம் மெக்லீன் செயலாற்றினார். அவரே தனது நிறுவனத்தில் கண்டெய்னர்களை உருவாக்கினார். ஜனவரி 1956இல் இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட டி-2 டாங்கர்களை வாங்கி கொள்கலன்களை கொண்டு செல்லும் விதமாக கப்பல்களை மீள் உருமாற்றினார்.

ஐடியல் எக்ஸ் என அழைக்கப்படும் ஒரு டாங்கரில் இருந்து முதல் கொள்கலன் கப்பலை அவரே உருவாக்கினார். அடுத்த ஆண்டு, ஒரு பெரிய கொள்கலன் கப்பலான கேட்வே சிட்டியைக் கட்டினார். 1968இல் முதலாவது நவீன சரக்குக் கப்பல் களத்தில் குதித்தது. அதைத் தொடர்ந்து அவரது நிறுவனம் சீ-லேண்ட் சர்வீஸ் என்று மறுபெயரிடப்பட்டது.

முதல் கண்டெய்னர் 1956இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் 58 கண்டெய்னர்கள் அமெரிக்காவின் நியூயோர்க் துறைமுகத்திலிருந்து ஹட்சன் துறைமுகத்திற்கு அனுப்பப்பட்டது. 1956-களில் ஒரு கார்கோ ஏற்றுவதற்கு ஒரு தொன்னிற்கு 5.8 அமெரிக்க டொலர்கள் செலவானது. இதுவே மால்காம் மெக்லீன் உருவாக்கிய கண்டெய்னர் கார்கோவை மொத்தமாக ஏற்றுவதற்கு ஒரு தொன்னிற்கு 0.15 சென்ட்ஸ் மட்டுமே செலவானது. அதுமட்டுமல்ல கண்டெய்னர்களின் வருகை கப்பலில் பொருட்களை ஏற்றி இறக்குவதை மிகவும் இலகுவாக்கியது. அதுவரை கப்பலில் ஏற்றி இறக்குவதற்காக மட்டுமே சுமார் ஒரு வாரம்வரை துறைமுகத்தில் தேங்கி நின்ற கப்பல்களில், ஒரு கண்டெய்னர் 7 நிமிடங்களில் ஏற்றப்பட்டது. மொத்த சரக்கையும் வெறும் 8 மணி நேரத்திலேயே கையாண்டு முடித்தனர்.

மால்காம் மெக்லீனின் இந்த நடவடிக்கைக்கு துறைமுக சரக்கு கையாளும் தொழிலாளர்கள் தொடங்கி பல தரப்பிலும் எதிர்ப்புகள் வந்தன.

ஆனால் இந்தச் சிக்கல்களுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைத்து சரக்குக் கப்பலையும் அதில் கண்டெய்னர் பயன்பாட்டையும் அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது வியட்நாம் யுத்தம்.

ஆரம்பத்தில் பிரான்ஸ்க்கும் வியட்நாமுக்கும் இடையில் நடந்த யுத்தம் பிரெஞ்சு படைகளின் பின்வாங்கலுக்கு பின் அது வடக்கு, கிழக்கு வியட்நாமுக்கு இடையிலான யுத்தமாக மாறியது. இதனால் நாட்டில் சோஷலிசத்தை பரப்ப வடக்கு வியட்நாமை சேர்ந்த ஹோசின் மின் என்பவர் முயற்சி செய்தார். உடனே அமெரிக்காவுக்குக் கோபம் கொப்பளிக்க வியட்நாமிற்குத் தம் படையை அனுப்பி வைத்தது. கிட்டத்தட்ட 60,000 படை வீரர்களை அமெரிக்கா அனுப்பிய பிறகு தான் அப்போதைய கடல்வழி போக்குவரத்து முறையை வைத்து இது சாத்தியம் இல்லை என்பதை அமெரிக்கா உணர்ந்தது.

தேவையான ஆயுதம் மற்றும் பொருள் விநியோகம் செய்ய வசதி இல்லாததால் அமெரிக்க இராணுவம் தடுமாறத் தொடங்கியது. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள நினைத்த மால்காம் மெக்லீன் இந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக்கொண்டார். 1960களின் நடுப்பகுதியில் அமெரிக்கா இராணுவ உயர் அதிகாரிகளை சந்தித்த மால்காம் மெக்லீன் தனது கண்டெய்னர்களை ப்ரமோட் செய்தார். இந்த ஐடியாவை ஏற்றுக்கொண்ட அமெரிக்க அரசால் வியட்நாமில் இருந்த தம் இராணுவத்துக்கு உணவு, மருந்து, ஆயுதம் என அனைத்தையும் முறையாகவும் விரைந்தும் வழங்க முடிந்தது.

'கொள்கலன்களின் தந்தை' என புகழப்பட்ட மால்காம் மெக்லீன் 2001 ஆம் ஆண்டில் 88 வயதில் இறந்தபோது, அவரை 'நூற்றாண்டின் நாயகன்' என்று கௌரவித்தது. அவர் அன்று ஆரம்பித்து வைத்த புரட்சியினால்தான் பன்னாட்டு வியாபாரம் தலைதூக்கியது. அதனால்தான், இன்று நாம் நுகரும் அத்தனை பொருட்களும் நம் கைகளுக்கு எட்டும் தூரத்திற்கு வந்துள்ளன.

ஆரம்பத்தில் வெறும் 58 கண்டெய்னர்களையே கொண்டு சென்ற சரக்குக் கப்பல்கள் தற்போது கிட்டத்தட்ட 24,000 கண்டெய்னர்கள் வரை ஏற்றக் கூடிய அளவு மிகப்பிரமாண்டமாக வளர்ந்துள்ளது. உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொண்ட ஒரு பொது அளவில், வடிவில், தயாரிக்கப்பட்ட கண்டெய்னர்களை தாங்கிச் செல்லும் சரக்குக் கப்பல்கள் உலகை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றன. மில்லியன் கணக்கான பொருட்கள் மிகக் குறைந்த விலையில், அதிக பாதுகாப்போடு உலகின் ஒரு மூலையில் இருந்து மறு மூலைக்கு கொண்டு செல்லப்பட்டன.


அடுத்த தடவை நீங்கள் வீதியில் செல்லும்போது உங்கள் கண்ணெதிரே செல்லும் கண்டெய்னர் ட்ரக்குகளில் உலகின் இன்னொரு மூலையில் வசிக்கும் ஒரு மனிதன் பயன்படுத்தப் போகும் ஏதோ ஒரு பொருளோ, அல்லது அதைத் தயாரிக்கத் தேவைப்படும் மூலப்பொருளோ சென்று கொண்டிருக்கும். அவற்றை காவிச்செல்ல துறைமுகங்களில் சரக்குக் கப்பல்கள் தயாராகிக்கொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## எங்கே என் தந்தை

காலத்தின் பதிவு 65



சாண்டில்யன்

"அந்த நிலையில்?"

"நிலையில்?"

"சுயநிலை மறந்தேன்?"

"ஓகோ!"

"எண்ணங்கள் சுழன்றன."

"என்ன எண்ணங்கள்?"

"தந்தையைப் பற்றிய எண்ணங்கள்" என்றாள் காஞ்சனாதேவி துயரத்துடன்.

அவள் பேதை உள்ளத்தை அப்பொழுதுதான் அவன் புரிந்து கொண்டான். அடுத்தடுத்து நேர்ந்த துரித நிகழ்ச்சிகளால் அவள் தந்தையை அனைவரும் மறந்துவிட்டதை அப்பொழுதுதான் எண்ணிப் பார்த்தான் அவன். அந்த எண்ணத்தின் விளைவாக, "ஆம் ஆம். உன் தந்தையை மறந்துவிட்டோமே. அவர் இப்பொழுது எங்கிருக்கிறார்?"

என்று வினவினான் அதிர்ச்சியுடன்.

"எனக்குத் தெரியாது" என்றாள் காஞ்சனாதேவி. "உனக்குத் தெரியாதா!"

"தெரியாது" என்றாள் காஞ்சனாதேவி, கவலை தோய்ந்த குரலில்.

"நீயும் அவரும் எப்பொழுது பிரிந்தீர்கள்?" என்று மீண்டும் கேட்டான் அவன்.

"நீங்கள் என்னைவிட்டுப் பிரிந்த அன்றிரவே."

"பீமன் வீரர்கள் என்னை அழைத்துப் போனதுமா?"

"ஆம். நீங்கள் வீரர்களுடன் சென்ற அரை ஜாமத்துக்கெல்லாம் அநபாயர் அந்த இல்லத்தில் தோன்றி என்னையும் தந்தையையும், பணிப் பெண்களையும் அவசர அவசரமாக அழைத்துக் கொண்டு வெளியேறினார். எங்கள் பெட்டி பேழைகளும் துரிதமாக அவருடன் வந்த வீரர்களால் அப்புறப்படுத்தப்பட்டன.

வெளிநாட்டுப் பிரமுகர் வீதியின் முகப்பிலேயே நான் வேறு தந்தை வேறு பணிப் பெண்கள் வேறாக, வெவ்வேறு திக்குகளில் பிரிந்து அழைத்துச் செல்லப்பட்டோம். இரண்டு நாள்கள் நான் சிறைக் காவலன் ஒருவன் இல்லத்தின் தங்கியிருந்தேன். இன்று காலை அநபாயர் வந்து உங்கள் விசாரணை பற்றிக் கூறினார். அவசர அவசரமாக என்னையும் அழைத்துக்கொண்டு நீதி மண்டபமம் வந்தார். பிறகு நடந்ததை நீங்கள் அறிவீர்கள் ஆனால் தந்தை எங்கிருக்கிறார். என்ன ஆனார் என்பது எனக்குப் புரியவில்லை. அமீரின் பாதுகாப்பில் இருப்பதாக சீனக் கடலோடியிடம் அநபாயர் சற்று முன்பு கூறியது தான் எனக்குத் தெரியும். இந்தப் பாலூரில் தந்தையை எங்குதான் தங்க வைத்திருப்பார் அநபாயர்?"

இதற்குத் திடமான பதில் எதையும் இளைய பல்லவனால் கூற முடியவில்லை. அநபாயன் போக்கு எதுவும் ஊகிக்க முடியாத புதிராயிருந்தது அவனுக்கு. ஆகவே அவன் காஞ்சனாதேவிக்குச் சொன்ன பதிலில் உணர்ச்சியிருந்ததேயொழிய தெளிவு லவலேசமும் இல்லை. "காஞ்சனா! உன் தந்தையை அநபாயர் எங்கு தங்க வைத்திருக்கிறாரோ எனக்குத் தெரியாது.

நான் பாலூரில் கால்வைத்த நாளாக நேரிட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் பிரமையை ஊட்டக் கூடியனவாகவே அமைந்து இருக்கின்றன. கனவில் நடப்பது போல் நிகழ்ச்சிகள் துரிதமாக நடந்திருக்கின்றன. நாம் அனைவரும் வெறும் பதுமைகள் போல் அநபாயரால் நடத்தப்பட்டிருக்கிறோம். அவர் இயக்கும் வழியில் நாம் இயங்குகிறோம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்லுவேன். அநபாயர் உடலில் உயிர் இருக்கும் வரை உன் தந்தைக்கு ஆபத்து ஏதுவும் இல்லை. ஆனால் உன் தந்தை இருக்குமிடத்தையோ, அநபாயா இந்த இரவில் எதற்காக எங்கு போயிருக்கிறார் என்பதையோ என்னால் ஊகிக்க முடியவில்லை" என்று உணர்ச்சி ததும்ப கூறிப் பெருமூச்சு விட்டான் இளையபல்லவன்.

அவ்விருவரும் ஊகிக்க முடியாத, ஏன் கனவிலும் நினைக்க முடியாத, மிகவும் ஆபத்தான இடத்தைத்தான் அந்தச் சமயத்தில் அநபாயன் அணுகிக் கொண்டிருந்தான்.

### தோப்பில் தெரிந்த தீபம்

இயற்கை தன் இன்பத்தையெல்லாம் அள்ளிச் சொரிந்தும் அதை அனுபவிக்க முடியாமல் தந்தை எங்கிருக்கிறார் என்று கடாரத்துக் கட்டழகி எண்ணி ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில், நீண்ட நாள் நண்பன் தானிருக்க அமீரைத் துணைகொண்டு சோழ குல இளவல் சென்றுவிட்டானே என்பதால் கருணாகர பல்லவன் கருத்துருகிக் கலங்கிய அந்த வேளையில், நள்ளிரவு நெருங்கிக் கொண்டிருந்தாலும் மக்கள் நடமாட்டமோ காவலின் கெடுபிடியோ சிறிதும் குறையாத அந்த நேரத்தில், அச்சத்தை அணுவளவும் அறியாத அநபாய குலோத்துங்கன், அராபிய நாட்டவனும் அத்தியந்த நண்பனுமான அமீருடன் பாலூரின் அரச வீதியை மிகச் சாவதானமாக அணுகிக் கொண்டிருந்தான்.

அவனைத் தாங்கி வந்த புரவி மட்டுமன்றி, அமீரைத் தாங்கிய புரவியும் கூட அந்தச் சோழ நாட்டு அரசகுல வீரனின் கருத்தை நன்றாகப் புரிந்து கொண்டதுபோல் அமைதியாகவும் அலட்சிய நடைபோட்டும் நடந்தது. வடநாட்டு வர்த்தகர்களைப் போல் அந்த இருவரும் வேடமணிந்திருந்ததன் விளைவாக அவர்கள் உடைகளை இடுப்புக்கு மேல் அடியோடு மறைத்துத் தலையிலும் முக்காடாக வளைந்து, முகங்களின் மேல் நீண்டு சற்றே தொங்கி முகங்களின் மேற்பாகத்தை ஓரளவு மறைந்திருந்தாலும் பார்வையை மட்டும் மறைக்காத காஷ்மீரத்துச் சால்வைகள்கூட, கடற்புறமிருந்து வந்த காற்றில் அதிகமாகப் பறக்காது உடல்களுடன் ஒட்டி அமைதியையும் எச்சரிக்கையையும் காட்டின. பாலூர் அன்றிருந்த பயங்கர நிலையில் அத்தனை அமைதியும் எச்சரிக்கையும் தேவையாக இருந்தன.

புரவியில் அமர்ந்து, விலகிய மக்கள் கூட்டத்திடையே சர்வசாதாரணமாகச் சென்று கொண்டிருந்த அநபாயன், எதிரே அடிக்கடி புரவிகளில் வந்து கொண்டிருந்த காவலர் கூட்டத்தையும் தெருக்கள் சேரும் மூலை விடுதிகளின் ஓரங்களிலெல்லாம் சாதாரண மக்களைப்போல் காணப்பட்டாலும் கழுகுப் பார்வையாகப் போகிறவர் வருகிறவர்களைக் கண்காணித்த ஒற்றர்கள் எண்ணிக்கையும்.

தலையை அதி கமாகத் தூக்காமல் கண்ணை மாத்திரம் லேசாகத் தூக்கி ஊடுருவிப் பார்த்து, பாலூரின் மூலை முடுக்குகள்கூடப் பரிபூரண எச்சரிக்கையுடன் பாதுகாக்கப் படுவதை உணர்ந்தான். தவிர தெரு மூலைகளில் அசட்டையுடனிருப்பதாகக் காணப்பட்ட ஒற்றர்களின் இடைகளில் குறுவாள்கள் காட்சியளித்ததையும் கண்ட சோழர் குல இளவல், தான் சற்று நிலை பிசகி யாரென்பதை வெளியிட்டுவிட்டால் அந்தக் குறுவாள்களுக்கும், ஏன் மூலை வீடுகளின் மறைவிலிருக்கக் கூடிய பெருவேல்களும் கொண்டான்.

இத்தகைய காவலிருந்து தனது நண்பர்களைத் தப்புவிக்க வேண்டுமானால் சாதாரண மனிதப் பிரயத்தனால் அது சாத்தியமல்லவென்பதையும் பெரும் தந்திரத்தாலும், சாகசத்தாலுமே அதைச் சாதிக்க முடியுமென்மையும் சந்தேகத்துக்கிடமின்றி உணர்ந்து கொண் டான் அநபாயன். அந்தச் சமயத்தில் அவன் எண்ணங்கள் மறுநாளிரவு தப்பிச் செல்லும் முறைகளைக்கூட அவ்வளவாகக்கவரவில்லை. இத்தனைபல மான காவலை மீறி அப்பொழுது வந்த காரியத்தைச் சாதிக்க வேண் டுமே என்ற கவலை அவன் இதயத் தைப் பெரிதும் கௌவிக் கொண்டிருந்தது.

அந்தக் கவலையைச் சிறிதும் வெளிக்குக் காட்டாமலே பல வீதிகளையும் கடந்து அரச வீதியின் முகப்புக்கு வந்துவிட்ட அநபாயன், அந்த வீதியில் மற்ற வீதிகளை விட இரண்டு பங்கு காவல் இருந்ததையும், வீதிக்குள் நுழையும் ஒவ்வொரு புரவியும் நிறுத்திச் சோதிக்கப்படுவதையும் கண்டதும் குதிரையின் நடையை அதிகமாகத் தளர்த்தி முகத்தைக் குனிந்த வண்ணமே அமீரை அழைத்தான்.

அந்த அழைப்பின் விளைவாகதான் புரவியை அநபாயனின் புரவிக்கு வெகு அருகில் கொண்டு வந்து விட்ட அமீர் "ஏன் அழைத்தீர்கள்?" என்று வினவினான். இருவரும் தலையைத் தூக்காமலும், மிகுந்த எச்சரிக்கையுடனும் குதிரைகளை நிறுத்தாமல் மெல்ல நடத்திக் கொண்டே சம்பாஷணையைத் துவங்கினார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : உரிமைக்குரல்
இயற்றியவர் : வாலி
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



நேத்து பூத்தாளே ரோஜா மொட்டு
பறிக்க கூடாதோ லேசா தொட்டு
நேத்து பூத்தாளே ரோஜா மொட்டு
பறிக்க கூடாதோ லேசா தொட்டு
கட்டி போடாத குமரி சிட்டு
கண்கள் பாடாதோ காதல் மெட்டு
கட்டி போடாத குமரி சிட்டு
கண்கள் பாடாதோ காதல் மெட்டு
நேத்து பூத்தாளே....

கிட்ட வந்தாலே கோபம் வரும்
விட்டு போனாலே தாபம் வரும்
கிட்ட வந்தாலே கோபம் வரும்
விட்டு போனாலே தாபம் வரும்

தத்தி தள்ளாடும் தங்க குடம்
வந்து சேராதோ அந்தப்புரம்
தத்தி தள்ளாடும் தங்க குடம்
வந்து சேராதோ அந்தப்புரம்

உன்ன பூவா நெனப்பேன்
நெனச்சு கையால் எடுப்பேன்
எடுத்து நெஞ்சோடணைப்பேன்
அணைச்சு எல்லாம் முடிப்பேன்
அணைச்சு எல்லாம் முடிப்பேன்
நேத்து பூத்தாளே...

பெட்டை பின்னோடு சேவல் வரும்
சேவல் பின்னோடு ஆவல் வரும்
பெட்டை பின்னோடு சேவல் வரும்
சேவல் பின்னோடு ஆவல் வரும்

ஆவல் வந்தாலே காதல் வரும்
காதல் வந்தாலே ஊடல் வரும்
ஆவல் வந்தாலே காதல் வரும்
காதல் வந்தாலே ஊடல் வரும்

இந்த காதல் கணக்கு
நமக்கு கண்ணில் இருக்கு
இதுக்கு காலம் எதுக்கு நெருங்க நேரம் ஒதுக்கு
நெருங்க நேரம் ஒதுக்கு

நேத்து பூத்தாளே ரோஜா மொட்டு
பறிக்க கூடாதோ லேசா தொட்டு

அம்மன் தேராட்டம் ஆடிக்கொண்டு
அன்ன கிளியாட்டம் பாடிக்கொண்டு
அம்மன் தேராட்டம் ஆடிக்கொண்டு
அன்ன கிளியாட்டம் பாடிக்கொண்டு

அர்த்த ஜாமத்தில் தேடிக்கொண்டு
நித்தம் வருவாளோ அல்வா துண்டு
அர்த்த ஜாமத்தில் தேடிக்கொண்டு
நித்தம் வருவாளோ அல்வா துண்டு

இந்த மாமன் மயக்கம்
விடிஞ்சா தீரும் வரைக்கும்
மனசு தாவி குதிக்கும்
ஒடம்பு தீயா கொதிக்கும்
ஒடம்பு தீயா கொதிக்கும்

நேத்து பூத்தாளே ரோஜா மொட்டு
பறிக்கக் கூடாதோ லேசா தொட்டு (2)

# இனியும் இனிது!

சீனாவிலிருந்து இந்தியா வந்த ஒருவர், விமான நிலையத்தில் டாக்ஸி பிடித்தார். ஹோட்டலுக்குப் போகும் வழியில் டாக்ஸி சாரதியிடம் இந்தியாவைக் கிண்டல் செய்து கொண்டே வந்தாராம்.

டாக்ஸிக்கு முன்னால்போன ஒரு பேருந்தைப் பார்த்துவிட்டு, “சீனாவில் பேருந்துகள் அதிவேகமாகச் செல்லும். இந்தியாவில் பேருந்துகள் ஆமைபோலப் போகின்றன” என்றார் அந்தச் சீனர்.

ஒரு மேம்பாலத்துக்குக் கீழே டாக்ஸி போனபோது, மேலே ரயில் கடந்து சென்றது. அதைப் பார்த்துவிட்டு, “சீனாவில் சாதா ரயில்களே புல்லட் ரயில்போல வேகமாகப் போகும். இங்கே ரயில் என்ன மாட்டு வண்டிபோல நகர்கிறது?” என்றாராம், இப்படியே செல்லும்போது சீனாவுடன் ஒப்பிட்டு இந்தியாவைக் கிண்டல் செய்திருக்கிறார் அவர். டாக்ஸி சாரதி பதில் எதுவும் சொல்லாமல் அமைதியாகக் காரைச் செலுத்தினார்.

டாக்ஸி ஹோட்டலை அடைந்தது. “கட்டணம் எவ்வளவு?” என்று சீனர் கேட்டதும், “ஐந்தாயிரம் ரூபாய்” என்றார் டாக்ஸி சாரதி. சீனர் அதிர்ச்சியாகி, “என்ன அநியாயம் இது... உங்கள் ஊரில் கார்,பேருந்து, ரயில் எல்லாமே மெதுவாக ஓடுகின்றன. ஆனால், டாக்ஸி மீற்றர் மட்டும் இவ்வளவு வேகமாக ஓடுகிறதே?” என்று கேட்டாராம். “ஏனெனில், அது மேட் இன் சைனா” என அமைதியாகச் சொன்னாராம் டாக்ஸி சாரதி.

மனிதர்களிடமிருந்தே கதைகள் பிறக்கின்றன. பல்வேறு நிலைகளைச் சேர்ந்த மனிதர்களை நித்தமும் தங்கள் பணிக்காக சந்திக்கும் சாரதிகள் உண்மையில் சிறந்த கதை சொல்லிகள்! ஆனால், டாக்ஸியில் ஏறும் பலர், சாரதிகளோடு பேசுவதுகூட இல்லை. குறைந்தபட்சம் பெயரைக் கேட்பதுகூட இல்லை. போக வேண்டிய இடத்தைச் சொல்வதுடன் உரையாடல் முடிந்து விடுகிறது. அதற்கு மேல் அவர்களுடன் பேச எதுவுமே இல்லை என்பதே பெரும்பான்மையானவர்களின் மனவோட்டமாக இருக்கிறது. விளைவு, காதில் ஹெட்போன்கள் குடியேறிவிடுகின்றன.

நான் பயணம் செய்த டாக்ஸியின் சாரதி, அண்மையில்தான் ஒரு கிராமத்திலிருந்து மும்பை வந்திருந்தார். மனிதர்களின் இந்த அணுகுமுறையையும் டாக்ஸி செலுத்துவதில் இருக்கும் கஷ்டங்களையும் பட்டியல் போட்டுவிட்டு, “எவ்வளவு வருமானம் கிடைத்தாலும் இந்தத் தொழில் வேண்டாம். சம்பளம் குறைவாக இருந்தால்கூடப் பரவாயில்லை. சொந்த ஊருக்கே போயிடலாம்னு இருக்கேன்” என்றார். விருப்பமே இல்லாமல், குடும்பத்தினரின் வற்புறுத்தலால் டாக்ஸி ஓட்ட வந்திருக்கிறார்.

மாற்றத்தை மனித மனம் ஏற்பதில்லை. இருப்பதற்கு சொகுசாய்ப் பழகிவிட்ட மனித மனம் ஒரு சிறிய மாற்றம் நிகழ்ந்தால்கூட நிம்மதி இழந்து விடுகிறது. வங்கி அதிகாரிகள், அரசு அலுவலர்கள்கூட பதவியுயர்வை ஏற்றுக்கொண்டால், வேறு இடத்துக்கோ ஊருக்கோ மாறுதல் செய்து விடுவார்கள் என்று அஞ்சி, ‘புரமோஷனே வேண்டாம்’ என்று எழுதிக் கொடுத்துவிட்டு, சாதாரண அலுவலராகவே பணிபுரிந்து ஓய்வு பெறு வார்கள்.

‘ட்ரான்ஸ்ஃபர்’ அதாவது, மாறுதல் என்பதே ஒரு தண்டனை என்பது போன்ற ஒரு சித்திரத்தை இடைப்பட்ட காலத்தில் நம் சமூகம் தவறுதலாக உருவாக்கிவிட்டதே முக்கிய காரணம்.

‘மாற்றம் வேண்டாம். இருப்பதே போதும்’ என்று நம்மில் பலரும் நினைப்பதற்கு, ‘இருப்பதை விட்டுவிட்டுப் பறப்பதற்கு ஆசைப்பட வேண்டாம்’ என்பது போன்ற அறிவுரைகளைச் சொல்லி வளர்க்கப்பட்டதும் ஒரு காரணமாக இருக்கக்கூடும். இதுபோன்ற பல பழமொழிகள் காலப்போக்கில் தவறுதலாகப் புரிந்துகொள்ளப்பட்டு விட்டன என்றே நினைக்கிறேன். ‘கையில் வைத்திருக்கும் வெற்றிக் கோப்பையைப் பத்திரப்படுத்திவிட்டு அடுத்த வெற்றியை நோக்கி நடைபோடு’ என்பதே அந்தப் பழமொழி சொல்ல வருவது.

அதாவது ‘திட்டமிட்டுப் படிப்படியாக அடுத்தடுத்த வெற்றிகளை நோக்கி நடைபோடு’ என்பதுதான் அது சொல்லும் உள்ளர்த்தம் என்று எனக்குத் தோன்றுகிறது. அதுமட்டுமல்ல, ‘பெரிதினும் பெரிது கேள்’ என்று அதன்பிறகு பாரதி சொன்னதைப் பலரும் மறந்துவிட்டோம்.

‘மாற்றம்’ என்பதைப் பற்றிப் பேசும்போது ‘மனசே ரிலாக்ஸ் ப்ளீஸ்’ பற்றி எப்படிப் பேசாமல் இருக்க முடியும்?



ஒரு சிறிய இடைவெளிக்குப் பிறகு, அதாவது 25 வருடங்களுக்குப் பிறகு நாம் சந்தித்துக் கொள்கிறோம். பல்லாயிரம் ஆண்டுகள் நெடிய மானுட சரித்திரத்தில் இந்த இடைவெளி என்பது மிகமிகச் சொற்பமானதுதான்.

ஆனால், இந்த 25 ஆண்டுகளில்தான் அசாத்தியமான வேகத்தில் பல மாற்றங்கள் நடைபெற்றதாக நான் நினைக்கிறேன். 25 ஆண்டுகளுக்கு முன்பு, சமூக வலைத்தளங்கள் இல்லை. பத்திரிகைக்கு வாசகர் கடிதம் எழுதுவதைத் தவிர ஒருவர் தன்னுடைய கருத்துகளைத் தெரிவிக்க வேறு வழியே இல்லை.

காடு, மலை தாண்டும் பயணங்கள் இன்று எளிய வழிகளாகி விட்டன. ருசியான உணவகம் தேடி அலைந்த காலம் போய் இன்று நினைத்த இடத்தில் நினைத்ததை வாங்கிச் சாப்பிடும் ஆப்கள் வந்து விட்டன.

கண்ணுக்குத் தெரியாத மாய வலையாய் அறிமுகமாகி இன்று ஆளுயர நம்மை டேட்டா புள்ளிகளாய் மாற்றி விட்டது இன்டர்நெற். புஜ பலத்தை மட்டுமே நம்பியிருந்த மனிதர்களின் வாழ்க்கையை, தொழிற்புரட்சி காலத்தில் அறிமுகமான இயந்திரங்கள் முற்றிலுமாக மாற்றியமைத்தன.

(அடுத்த வாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடிடியில் வெளியாகும் 'பரமபதம் விளையாட்டு'




த்ரிஷா நடிப்பில் உருவாகி, நீண்ட நாட்களாக வெளியாகாமல் இருந்த 'பரமபதம் விளையாட்டு' திரைப்படத்தை பண்டிகை தினத்தன்று நேரடியாக ஓடிடியில் வெளியிடவுள்ளனர்.

கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள இந்தப் படத்தை திருஞானம் இயக்கியுள்ளார்.

நந்தா, ரிச்சர்ட், வேல ராமமூர்த்தி உள்ளிட்ட பலர் இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

கொரோனா காரணமாக சுமார் ஓராண்டாக வெளியாமல் இருந்த இப்படத்தை தற்போது நேரடியாக ஓடிடியில் வெளியிடவுள்ளதாக கடந்த மாதம் அறிவிப்பு வெளியானது.

அதன்படி, நீண்ட நாட்களாக வெளியாகாமல் இருந்த படத்தை பண்டிகை தினத்தன்று நேரடியாக ஓடிடியில் வெளியிடவுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் ஏப்ரல் 14ஆம் திகதி தமிழ் புத்தாண்டன்று 'பரமபதம் விளையாட்டு' படத்தை நேரடியாக ஓடிடியில் வெளியிடவுள்ளதாக படக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# விஜய் ஜோர்ஜியா பயணம்



நடிகர் விஜய் தளபதி 65 திரைப்படத்திற்காக ஜோர்ஜியா சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.


இதன்போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் வைரலாகியுள்ளன.

இயக்குநர் நெல்சன் இயக்கும் தளபதி 65 திரைப்படத்தின் பூஜை நடைபெற்றிருந்தாலும், படப்பிடிப்பு ஆரம்பிக்கப்படவில்லை. சட்டசபை தேர்தலை தொடர்ந்து படப்பிடிப்பு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதன்படி சட்டசபை தேர்தல் நிறைவடைந்த நிலையில், படப்பிடிப்பிற்காக விஜய் ஜோர்ஜியா சென்றுள்ளார்.

சன்பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த திரைப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அக்ஷய் குமாருக்கு கொரானா



பிரபல பொலிவுட் நடிகர் அக்ஷய்குமாருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தன்னுடன் தொடர்பில் இருந்தவர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரையும் பி.சி ஆர். பரிசோதனை மேற்கொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் மருத்துவர்களின் ஆலோசனையின்படி அவர், கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி வீட்டில் தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொண்டுள்ளார்.

# ஹீரோவாக அறிமுகமாகும் நடிகர் சதீஷ்



பிரபல நகைச்சுவை நடிகர் சதீஸ் ஹீரோவாக நடிக்கும் திரைப்படத்தின் பூஜை அண்மையில் நடைபெற்றது.

பெயரிடப்படாத இந்த திரைப்படத்தில் குக்வித் கோமாளி புகழ் பவித்ரா, சதீஸிற்கு ஜோடியாக நடிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த திரைப்படத்தின் ஒட்டுமொத்த படப்பிடிப்பும் சென்னையில் நடைபெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பமானது ஐ.பி.எல்.திருவிழா

கடந்த முறை தன்னை நிரூபிக்கத் தவறிய கப்டன் கூல் டோனியின் போர்ம் தான் அணியின் வெற்றிப் பயணத் தைத் தீர்மானிக்கும்.

### சென்னை சுப்பர் கிங்ஸ்

கடந்த ஐ.பி.எல்.தொடரில், அதுவரை சந்திக்காத வீழ்ச்சியைச் சந்தித்தது சுப்பர் கிங்ஸ். தொடர் சொதப்பல்களால், முதல் முறையாக பிளே ஓப் வாய்ப்பைத் தவற விட்டது யெலோ ஆர்மி. அதனால் இம்முறை மீண்டும் தங்கள் பலத்தை நிரூபிக்க டோனியின் படை காத்திருக் கிறது. அடிபட்ட சிங்கத்தின் மூச்சுக் காற்றுத்தான் கர்ஜனையைவிட பலமாக இருக்குமே!

சுரேஷ் ரெய்னா, பிராவோ ஆகியோர் திரும்ப வந்திருப்பது, ஷர்துல் தாக்கூர், சாம் கரண், உத்தப்பா ஆகியோர் போர் மில் இருப்பது சென்னைக்கு மிகப்பெரிய பலம். மொயீன் அலி இருப்பதால் ஹிட் டருக்கான இடத்தை அவர் நிரப்பலாம். ஸ்பின்னுக்குச் சாதகமான மைதானங் கள் அதிகம் இருக்கும்போது, நல்ல ஆஃப் ஸ்பின்னர் இல்லாதது பின்னடைவாக அமையலாம். கடந்த முறை தன்னை



நிரூபிக்கத் தவறிய கப்டன் கூல் டோனி யின் போர்ம்தான் அணியின் வெற்றிப் பயணத்தைத் தீர்மானிக்கும்.

### டில்லி கப்பிட்டல்ஸ்

கப்டன் ஷ்ரேயாஸ் ஐயர் காயம் கார ணமாக விலகியிருப்பதால், ரிசப் பண்ட் டில்லி அணியை வழிநடத்தவிருக் கிறார். கடந்த சில மாதங்களாக பட்ஸ் மனாக பட்டையைக் கிளப்பிவரும் ரிசப் பண்ட் இந்தப் பொறுப்பை எப்படிக் கையா ளப்போகிறார் என்பது அந்த அணியின் வெற்றி வாய்ப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இது பலமாகவும் அமைய லாம், பலவீனமாகவும் அமையலாம்.

கடந்த சீசனில் சொதப்பிய பிரித்வி ஷா, விஜய் ஹசாரே தொடரில் ஒரு இரட்டைச் சதம், மூன்று சதங்கள் என வேற லெவல் போர்மில் இருக்கிறார். அவரோடு தவான், பண்ட், ரஹானே, ஹிட்மேயர், ஸ்டாய் னிஸ், பில்லிங்ஸ், ஸ்மித் என மிகப் பெரிய பட்டாளமே இருக்கிறது. பட்டிங் குக்கு இணையாக பந்துவீச்சும் முன் னணி வீரர்கள் நிரம்பிய குழுவாகவே இருக்கிறது. ரபாடா, நோர்கியா, கிறிஸ் வோக்ஸ், அஷ்வின், அக்ஷர், அமித் மிஷ்ரா, இஷாந்த்ஷர்மா, உமேஷ் யாதவ் என சர்வதேச அனுபவம் கொண்ட வர்கள் இருப்பது அவர்களுக்கு மாபெரும் சாதகம். கடந்த முறை தவறிய கோப் பையை டில்லி அணி இம்முறை கைப் பற்றக்கூடும்!

### கொல்கத்தா நைட்ரைடர்ஸ்

மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வெல்வதற்குத் தகுதியான ஓர் அணியாகக் காட்சியளிக்கிறது நைட்ரை டர்ஸ். ஷகிப் அல் ஹசன், பென் கட்டிங், ஹர்பஜன் சிங் என அனுபவ வீரர்களை இந்த ஏலத்தில் வாங்கியிருப்பது அவர் களுக்கு நிச்சயம் கைகொடுக்கும். ரஸல், நரைன் போன்றவர்கள் போர்மில் இல்லையென்றாலும் அவர்கள் இட த்தை நிரப்ப சரியான ஆட்கள் இருப்பது முந்தைய சிக்கல்களை சரிசெய்துவிடும்.

கம்மின்ஸ், லாகிஃபெர்குசன், நரைன், ஷகிப், குல்தீப், வருண் சக்கரவர்த்தி, பிரசித் கிருஷ்ணா, ஷிவம் மாவி, ஹர் பஜன், பவன் நெகி என அவர்கள் பந்து வீச்சில் ஃபயருக்குப் பஞ்சமே இல்லை. எப்படியான காம்பினேஷனோடும் களம் காணலாம். வீரர்களின் பிட்னஸ்தான் இவர்களுக்குப் பெரிய எதிரியாக இருக் கும். ரஸல், வருண் சக்கரவர்த்தி, நாகர் கோட்டி போன்றவர்கள் ஓயாமல் காய மடையக்கூடியவர்கள். வீரர்களை மோர் கன் எப்படிக் கையாள்கிறார் என்பதே அவர்களின் வாய்ப்பை நிர்ணயிக்கப் போகிறது.

### மும்பை இந்தியன்ஸ்

ஹாட்ரிக் ஐ.பி.எல்.கோப்பை வென்ற முதல் அணி என்ற மகத்தான சாதனை யைப் படைக்கக் காத்திருக்கிறது மும்பை இந்தியன்ஸ். ஒவ்வொரு ஆண்டும் மேலும் மேலும் பலமடைந்து கொண்டி ருக்கிறது ரோஹித்தின் அணி. இம் முறை தங்கள் ஜாம்பவான் மலிங்காவை இழந்தாலும் ஆடம் மில்னேவை வாங்கி அந்த இடத்தை ஈடுகட்ட முயன்றிருக் கிறார்கள். டிரென்ட் போல்ட், கூல்டர் நைல் போன்ற அட்டகாச பௌலர்கள் இருப்ப தால் எந்த பிரச்சினையும் இருக்காது.

சூர்யகுமார் யாதவ், இஷன் கிஷன், பாண்டியா பிரதர்ஸ் என எல்லோரும் சர்வதேச அரங்கில் ரவுண்டு கட்டி அடித் திருக்கிறார்கள். அது அணிக்கு நம்பிக் கையை அதிகரிக்கும். கொஞ்சம் பலவீன மாக இருந்த சுழற்பந்துவீச்சை பியூஷ் சாவ்லாவின் வருகை பலமாக்கும். பும்ரா, ஹர்திக், ரோஹித் போன்றவர்கள் பிட்டாக இருப்பது மும்பை இந்தியன் ஸுக்கும் முக்கியம், இந்தியன்ஸுக்கும் முக்கியம்!

### பஞ்சாப் கிங்ஸ்

தங்களின் மோசமான வரலாற்றை மாற்றும் முயற்சியின் முதல் அடியாக அணியின் பெயரை மாற்றியிருக்கிறது பஞ்சாப் நிர்வாகம். கிங்ஸ் லெவன் பஞ் சாப் இப்போது பஞ்சாப் கிங்ஸ் ஆகி யிருக்கிறது. பெயரை மாற்றிய கையோடு கோடிகளைக் கொட்டி ஜை ரிச்சர்ட்சன், ரைலி மெரிடித், ஷாரூக் கான் என இளம் வீரர்களை வாங்கியிருக்கிறார்கள். இத ற்கு முன்பு அந்த அணியில் விளையாடிய காஸ்ட்லி வீரர்களைப்போல் இல்லாமல், இவர்கள் மிளிரவேண்டியது அவசியம்.

முருகன் அஷ்வின், ரவி பிஷ்னாய் தவிர்த்து முன்னணி ஸ்பின்னர்கள் இல் லாதது ஒரு பலவீனம். கே.எல்.ராகுல், மயாங்க் அகர்வால், கிறிஸ் கெய்ல், டேவிட் மலான், நிகோலஸ் பூரண் என இவர்களின் டாப் ஆர்டர் ஏலியன் லெவ லில் இருக்கிறது. இவர்கள் ஒருசேர கிளிக் ஆனால், எந்த எதிரணியும் ஆட் டம் கண்டுவிடும். புதிய மிடில் ஆர்டரும் பந்துவீச்சாளர்களும் கைகொடுத்தால் எதிர்பார்த்த மாற்றம் பஞ்சாப்புக்குக் கிடைக்கும்.

### ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்

ஈ சாலாவாவது கப் அடிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இற ங்கப்போகிறது கோலியின் படை. கோலி, டிவில்லியர்ஸ் என்ற மாஸ் பட்டிங் கோம்போவில் இப்போது மக்ஸ்வெல் இணைந்திருக்கிறார். அவர் நன்றாக ஆடினால், ஆர்.சி.பி.பட்டிங் வேறு லெவ லில் இருக்கும். ஆனால், அவரது ஐ.பி.எல். ரெக்கார்டுதான் அந்த நம்பிக்கையைக் குலைக்கிறது.

4 வெளிநாட்டு வீரர்கள் யார், மிடில் ஆர்டரில் ஆடப்போகும் இந்திய வீரர் யார், எத்தனை வேகப்பந்துவீச்சாளர்கள் ஆடப்போகிறார்கள் என்பதுபோன்ற கேள் விகளுக்கு கோலி சரியான பதிலைத் தேடவேண்டும். 15 கோடி ரூபாய் கொட்டி வாங்கப்பட்டிருக்கும் ஜேமீசன் இன்னும் இந்தியாவில் நிரூபிக்கவில்லை. அவர் மீதும் பெரிய நெருக்கடி இருக்கும். சுருக் கமாகச் சொன்னால், இவர்களின் வெற்றி வாய்ப்பு கோலி, மக்ஸ்வெல் ஆகியோர் கையில்தான். கோலி கப்டன்சியிலும் மக்ஸ்வெல் பட்டிங்கிலும் புதிதாக, சரியாக ஏதேனும் செய்தால் மட்டுமே கனவு காணலாம்.

### ராஜஸ்தான் றோயல்ஸ்

புதிய கப்டன் சஞ்சு சாம்சன் தலை மையில் முதல் முறையாகக் களமிறங்க வுள்ளது ராஜஸ்தான் ராயல்ஸ். ஸ்டீவ் ஸ்மித்தைக் கழற்றிவிட்டது, மோரிஸ், முஸ்தாஃபிசுர் போன்றவர்களை வாங் கியது என ஏலத்தில் மிகச் சிறப்பாகச் செயற்பட்டிருக்கிறார்கள். களத்திலும் முடிவுகள் சரியாக அமைந்தால், மீண்டும் ஒரு முறை ராஜஸ்தான் சம்பியன் ஆகலாம்.

ஆர்ச்சர் காயத்தால் பெரும்பாலான போட்டிகளில் ஆடமுடியாது. அது அவர் களுக்கு மிகப்பெரிய இழப்பாக அமையும். இளம் இந்திய பட்ஸ்மன்கள், குறிப்பாக கப்டன் சஞ்சு சாம்சன் சீராக விளை யாடவேண்டியது அவசியம். தெவேதியா வரை பட்டிங், 7 பௌலிங் ஆப்ஷன் என அட்டகாசமான பிளேயிங் லெவனை அவர்களால் களமிறக்க முடியும். இதுவே அவர்களின் மிகப்பெரிய பலமும்கூட.


### சன்ரைசர்ஸ் ஐதராபாத்

வெளிநாட்டு வீரர்களில் யாரைக் களமிறக்குவது என்பதே ஐதராபாத் அணிக்கு மிகப்பெரிய தலைவலியாக இருக்கும். கப்டன் வார்னர், ரஷீத் கான் விளையாடுவது உறுதி. மீதமிருக்கும் 2 இடங்களுக்கு ஜேசன் ராய், ஜானி பேர் ஸ்டோ, கேன் வில்லியம்சன், ஜேசன் ஹோல்டர், முகமது நபி, முஜீபுர் ரஹ் மான் என முரட்டுத்தனமாக 6 வீரர்கள் இருக்கிறார்கள். யாரைத் தேர்வு செய் வார்கள் என்பது அவர்களுக்கே வெளி ச்சம்.

புவி, விஜய் சங்கர் இருவரும் மீண் டும் வந்திருப்பதால் அணி வழக்கம் போல் பலமாகவே இருக்கிறது. யார்க்கர் மன்னன் நடராஜன், சந்தீப் ஷர்மா, சித்தார்த் கௌல், கலீல் அஹ்மது, பசில் தம்பி என இந்திய வேகப்பந்து வீச்சா ளர்கள் அதிகம் இருந்தாலும் முன்னணி இந்தியஸ்பின்னர்கள் இல்லாதது ஒரு குறை. ஷபாஸ் நதீம் சிறப்பாகச் செயற் படாவிட்டால், ரீம் காம்பினேஷனில் நிறைய மாற்றங்கள் செய்யவேண்டிய அவசியம் ஏற்படும். வீரர்களின் பிட்னஸ் அணிக்கு மிகப்பெரிய சவால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்டோன் ஹேரன்ஞ் (இங்கிலாந்து)



(கடந்த வார தொடர்ச்சி)

எவ்வித இயந்திரங்களோ முறையான போக்குவரத்து சாலைகளோ வாகனங்களோ இல்லாத அந்தக் காலத்தில் அவை எப்படி எடுத்து வரப்பட்டிருக்கும் என்பது இன்றளவும் புரியாத புதிராகத்தான் இருக்கிறது.

ஆனால் குறிப்பிட்ட வேறு சிலர் இந்த நீலக்கற்கள் வேல்ஸிலிருந்து கொண்டு வரப்பட்டவை அல்ல அருகிலிருக்கும் சிறு மலைக்குன்றிலிருந்து கொண்டு வரப்பட்டவை என்று குறிப்பிட்டுள்ளனர்.

12 ஆம் நூற்றாண்டில் ஹண்டிங்டன் அரசை ஆண்டு வந்த பேரரசன் ஹென்றி என்பவன்தான் அதன் அமைப்பைப் பார்த்து "ஸ்டோன் ஹேன்ஞ்" என்று பெயரிட்டான். "தொங்கும் கற்கள்" மற்றும் "கற்களால் ஆன கல்லறை" என்று இருவேறு பொருட்படும்படியான அந்தச் சொல் அதன் பிறகுதான் புழக்கத்துக்கு வந்தது.

புராதனப் பொருட்கள் சேகரிக்கும் நுட்பமான சிலரின் ஆய்வுப்படி பிரிட்டனின் குடிமக்களில் சிலர் மற்றும் அவர்களின் பாதுகாவலர்கள் 400 இற்கும் மேற்பட்டோர் ஐரிஷ் உயர்குடிமக்கள் வைத்த பெருவிருந்தில் கலந்து கொண்டபோது திட்டமிட்டுக் கொல்லப்பட்டனர். இதனால் வெகுண்டெழுந்த அரேலியஸ் ஆர்மேடியஸ் என்னும் மன்னன், தனது தம்பி பெந்த்ராகன் தலைமையில் 15 ஆயிரம் வீரர்களை அனுப்பி அங்கிருந்த ஐரிஷ் படையை தோற்கடித்து அவர்களை அடிமையாக்கி அபூர்வமான அந்தக் கற்களை அவர்கள் மூலமாகவே எடுத்து வந்தான். பின்னர் அந்தக் கற்களைப் பயன்படுத்தி இறந்து போன பிரிட்டிஷ் குடிமக்களின் நினைவாக ஸ்டோன் ஹேன்ஞ் நினைவிடத்தை நிறுவினான் என்று குறிப்பிடுகின்றனர்.



1660 இல் ஜான் ஆபரி என்கிற பழம்பொருட்கள் சேகரிப்பாளர் ஒரு ஆய்வில் ஈடுபட்டார். இந்த இடம் பழங்குடிமக்களின் பாதியார்கள் வசிப்பிடம் என்று குறிப்பிட்டார். ஆனால் அவரது ஆய்வு அறிவியல் பூர்வமானது இல்லை என்பதால் அது குறித்து எந்த முக்கியத்துவமும் தரப்படவில்லை.

(தொடரும்)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2280

### செந்தாளன்

நாம் நினைக்கின்ற எண்ணங்கள் உயர்வாக இருந்தால்...



நாம் செய்கின்ற செயல்களும் உயர்வாகவே இருக்கும்!

### தரண்யா


வறுமை



ஏழையிடம் சொல்லிப்பார் கொடிய நோயை பற்றி... நக்கலாக சிரிப்பான், அதை விட கொடியது வறுமை என்று...!

### ரூபன்

பணம் பணம் என தேடி அலையும் பெரும்பாலான பெற்றோருக்கு தெரியவில்லை



வீட்டில் விலைமதிப்பற்ற செல்வம் அன்புக்காய் ஏங்குகிறது என்று...

### வித்தியா

கஷ்டத்தை கடவுள் கொடுப்பது உன்னை துன்பப்படுத்துவதற்காக இல்ல...




எத்தனை உறவுகள் போலியானது என்பதை உனக்கு உணர்த்தவே...!

### ஐங்கா

அன்பான அம்மாவும் தோழமையான அப்பாவும் கிடைத்த குழந்தைகள் யாரும் "தடு" மாறியதும் இல்லை... "தடம்" மாறியதும் இல்லை...!

### கரன்

நமக்கானது எதுவும் நம் கையை விட்டு போகாது.



நம் கையை விட்டு போகும் எதுவும் நமக்கானது கிடையாது...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 248

# எங்கோ தவறு நடந்துகொண்டிருக்கிறது

ஒரு மனிதன் சிசுவாக கருத்தரித்த நாளிலிருந்து மரணிக்கும்வரை பல விடயங்களை புதிது புதிதாக கற்றுக் கொண்டே இருக்கிறான். அன்னையினுடைய கருப்பையிலே சிசுவாக இருக்கும் அந்த சிறிய மனிதன் கிரகிதிதுக் கொண்ணடிருக்கும் விடயங்கள் ஏராளம்.

அதேபோல மரணப்படுக்கையிலும் முன்பு தெரிந்திராத பல விடயங்களையும் அனுபவங்களையும் அவன் கற்றுக் கொள்கிறான். ஒரு மனிதன் தன் வாழ்க்கை காலத்திலே பெற்றுக் கொண்ட அனுபவத்தையும் அறிவையும் இன்னொரு மனிதன் அப்படியே உள்வாங்கி அறிந்து வாழ்க்கையை அதிலிருந்து தொடர முடியுமாக இருந்தால் மனித சமுதாயம் எவ்வளவோ முதிர்ச்சி பெற்றிருக்கும். முன்னேறியிருக்கும்.

ஆனால் எமது முன்னோர்கள் தமது வாழ்க்கையிலே பெற்ற அனுபத்தை உள்வாங்கிக் கொள்ளும் வல்லமையை நாம் வளர்த்துக்கொள்ளவில்லை. வளர்த்துக்கொள்ள நாம் விருப்பப்பட வுமில்லை. நாம் புதிதாக அனுபவப்பட்டுத் தெழியவே ஆசைப்படுகிறோம். மனிதன் இந்த பூவுலகிலே தோற்றம் பெற்று 50 ஆயிரம் வருடங்கள் நிறைவடைந்திருக்கின்றன.

அதாவது 2 ஆயிரம் தலைமுறையினர் வாழ்ந்து முடித்திருக்கிறார்கள். இந்த 2 ஆயிரம் தலைமுறையினரும் வாழ்க்கையில் பெற்ற அறிவும் அனுபவமும் நம்மிடம் இருக்கிறதா? அவறறிற்கு என்ன நடந்தது. இதனால் தான் கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்று சொல்லுவார்கள்.

எமது முன்னோர்களினது வாழ்க்கை அனுபங்களையும் அறிவையும் அப்படியே நாம் பெற்றிருந்தால் நாம் கற்றுக்கொண்டது உண்மையிலேயே உலகளவாகக்கூட இருந்திருக்கலாம். எம்மை சுற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் முதியவர்கள் ஒவ்வொருவரும் அனுபவ பொக்கிஷங்கள். அவர்களிடம் குவிந்திருக்கும் அனுபவ அறிவு அளவு கடந்தது.

எமது முதியவர்கள் உடல்ரீதியாகவும் மனநிலை ரீதியாகவும் ஆரோக்கியமாக வாழ்கிறார்களா? சமூகத்திலே அவர்களிற்கு உரியநிலை வழங்கப்படுகிறதா? சிறு குழந்தைகள் போலவே வயதானவர்களும் இலகுவில் நோய் வாய்ப்படும் தன்மை உடையவர்கள்.



சிறுவர்களிற்கு வழங்கப்படும் அதே கவனிப்பு முறைகள் முதியவர்களிற்கும் வழங்கப்படுகிறதா?. அவர்களுடன் ஆற அமர இருந்து பேசி அவர்களின் மன உணர்வுகளை பகிர்ந்து கொள்ள எவ்வளவு நேரத்தை ஒதுக்கிக்கொள்கிறோம். அவர்களின் சொந்த விருப்பு வெறுப்புகள் மதிக்கப்படாமல் நாம் இட்ட சட்ட வரையறைக்குள் அவர்கள் வாழ்ந்து முடிக்க வேண்டும் என்று எண்ணிக் கொள்கிறோமா? இவ்வாறாக தொடர்ச்சியான பல வினாக்கள் எம் மனதிலே எழுந்தவண்ணமே இருக்கின்றன.

சிறுவர்கள் போலவே முதியவர்களும் பிடிவாதத்தன்மை உடையவர்கள். இது கடவுளின் இயற்கை. எனவே இந்த யதார்த்தத்தை விளங்கிக்கொண்டு சிறுவர்களை புரிந்துகொள்வது போல எமக்கு பெரியவர்களையும் புரிந்து கொள்ள முடியாமல் போனதன் காரணம் என்ன? இவர்களை பிரயோசனங்கள் அனைத்தையும் பிழிந்து எடுத்தபின் வீசி எறியும் சக்கைகளாக கருதுகிறோமா? இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக சிந்திக்கும்பொழுது எங்கோ தவறு நடந்துகொண்டிருக்கிறது போல தோற்றப்படுகிறது.

இன்று முதியவர்களாக இருப்பவர்கள் அன்றொரு நாள் மாணவர்களாகவும், பெற்றோர்களாகவும், பெரியவர்களாகவும் இருந்தவர்கள்தான். அவர்கள்தான் இந்த இன்றைய இளைய சமுதாயத்தை செதுக்கி எடுத்திருக்கிறார்கள்.

எமது மக்கள் தமது தாய், தந்தையர், பேரன், பேர்த்தி மற்றும் ஏனைய முதியவர்களிடத்தில் உண்மையான அளவு கடந்த அன்பும் பாசமும் வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களிற்கு அதனை வெளிக்காட்ட தெரிவதில்லை.

ஓவ்வொரு முதியவரும் மரணப் படுக்கையிலே இருக்கும்பொழுது சுற்றி நின்று கதறும் சுற்றத்தை பார்த்து தாங்கி ஜீரணித்துக்கொள்வது மிகவும் வேதனையானது.

அவர்களின் இந்த கதறல் போலியானவை அல்ல. இவ்வளவு நாளும் இந்த பாசத்தையும் அக்கறையையும் எங்கே பூட்டி வைத்திருந்தார்கள் என்பது ஆச்சரியமாக இருக்கும். மேலைத்தேய நாடுகளிலே இதனை நாம் காண முடியாது.

முதியவர்களின் கவனிப்பிலே ஒரு தனி மனிதனின் பங்களிப்பு எமது சமுதாயத்திலே மிகவும் அதிகமாக காணப்படுகிறது. எமது மக்கள் ஒவ்வொருவரும் பல முதியவர்களை ஏதோ ஒரு வகையில் பொறுப்பெடுத்து கவனித்து வருகிறார்கள். இத்தகைய பொறுப்பு மேலைத்தேய மக்களிடையே இல்லை. அங்கே அரசாங்கமே முக்கி யமாக அவர்களை பொறுப்பெடுத்து பார்த்துக்கொள்கிறது.

முதியவர்களின் வாழ்க்கை நடைமுறைகளை மாற்றி அமைக்க முயற்சி எடுப்பது பலவிதமான மனக்கசப்புக்களை ஏற்படுத்தும். அவர்களின் மனப்பதிவுகளையும் நடைமுறைகளையும் ஒரு புதிய ஒழுங்கிலே மாற்றி அமைப்பது நடைமுறைச் சாத்தியமற்றது. முதியவர்களின் மூளையின் தொழிற்பாட்டு கட்டமைப்பு இவ்வகையான நடைமுறை மாற்றத்திற்கு இலகுவில் இடம் தராது.

நாம் எவ்வாறு முதியவர்களை கவனித்துக்கொள்கிறோம் என்பதை எமது அடுத்த தலைமுறை பார்த்துக் கொண்டிருக்கிறது. இதனைப்பார்த்துத்தான் எமது அடுத்த தலைமுறை முதியவர் கவனிப்பு சம்பந்தமாக கற்றுக்கொள்ளப்போகிறது. எனவே நாம் எமது முதியவர்களிற்கு வழங்கும் அதே கவனிப்பையே எமக்கும் எமது அடுத்த தலைமுறையினர் வழங்குவார்கள் என்பது உறுதி.

வாழும் காலத்திலே எமது கல்வியிலே அக்கறை செலுத்துகிறோம், எமது பிள்ளைகளின் கல்வியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை செலுத்துகிறோம். எமது சமுதாயத்தின் நல்வாழ்வில் அக்கறை செலுத்துகிறோம், சுற்றாடல் பாதுகாப்பில் அக்கறை செலுத்துகிறோம் ஆனால் எமது முதுமை காலத்தை திட்டமிடுவதில் அக்கறை அற்றவர்களாக இருந்துவிடுகிறோம். எனவே எமது முதுமைக் காலத்தை திட்டமிடுவதுடன் முதியவர்கள் ஒவ்வொருவரினது கவனிப்பிலும் எம்மால் இயன்றவரை பங்களிப்பை செலுத்த வேண்டிய தேவையாக இருக்கிறது.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். [illegible] இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org